# உதயன்

26 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 068 வள்ளுவர் ஆண்டு 2044 தை 20 சனிக்கிழமை (02/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily





தீவுகளைச் சுருட்டியது ஆஸி. 19



பாகிஸ்தான் தாக்கினால் பதிலடி 08





டைம்ஸ் கணினிகள் செயலிழந்தன 09






பட்டதாரிகள் 32 பேருக்கு நியமனம் 10




# முன்னகர்கிறது இராணுவப் பாதுகாப்பு வேலி

## வலி. வடக்கு மக்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், பெப். 2

வலி. வடக்கில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தரப் பாதுகாப்பு வேலிகளை 150 மீற்றர் தூரம் வரை முன்னகர்த்தும் பணிகள் நடைபெற்றுள்ளன. கடந்த புதன்கிழமை முதல் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முன்நகர்வால் விடுவிக்கப்பட்ட சில பகுதிகள் மீண்டும் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்கியுள்ளன.

வலி. வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ளன. இந்த 24 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக உயர்பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைப் பகுதியில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி நிரந்தரப் பாதுகாப்பு வேலிகள் முதலில் அமைக்கப்பட்டன.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமை முதல், தொண்டமானாறு தொடங்கி காங்கேசன்துறை வரையான நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்கு உள்பக்கமாக உள்ள மண் அணை தரைமட்டமாக்கப்பட்டது. இதன்போது இதற்குள் அடங்கும் வீடுகளும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குப் பின்புறமாக பளை வீமன்காமம் பாடசாலை அமைந்துள்ளது. இந்தப் பாடசாலையிலிருந்து கிட்டத்தட்ட 200 மீற்றருக்கு அப்பால் முதலில் நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாதுகாப்பு வேலிக்கு வெளியில் உள்ள பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்கு வெளியில் உள்ள மாவிட்டபுரம் ரயில் நிலையத்தையும் புனரமைப்பதற்காகத் தண்டவாளங்களும் போடப்பட்டிருந்தன.


பார்க்க பக்கம் 04


## வருவாரா மகாராணி?

கொழும்பு, பெப்.2

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரிட்டன் மகாராணியாரின் வருகை குறித்து இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

- இவ்வாறு இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷின் தெற்காசிய நாடுகளுக்கான வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பேர்ட் தெரிவித்தார்.

நல்லிணக்கம் என்பது இதயசுத்தியுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இது வெறும் வார்த்தைகளாலோ அல்லது உடன்படிக்கைகளினாலோ மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள மக்களின் நிலவரங்கள் குறித்து பார்வையிடுவதற்காக வந்திருந்த பிரிட்


பார்க்க பக்கம் 04


# தமிழர் தீர்வில் அரசு அசமந்தம்

## சாடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

நியூயோர்க், பெப்ரவரி 2

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் அரசு தொடர்ந்தும் அசமந்தமான - பாராமுகமான-போக்கையே கொண்டுள்ளது. அத்துடன் சிவில் சமூகத்தின் மீதான தனது தாக்குதலையும் அது தொடர்கிறது. 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த ஆயுதப் போராட்டத்தின்போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறும் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவும் அது தவறியுள்ளது.- இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான தனது வருடாந்த அறிக்கையிலேயே கண்காணிப்பகம் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இந்த அறிக்கை 665 பக்கங்களைக்கொண்டது.

கடந்த வருடம் உலகிலுள்ள 90 இற்கும் மேற்பட்ட நாடுகளில் மனித


பார்க்க பக்கம் 04


## வலி.வடக்கு ஆக்கிரமிப்பை எதிர்த்து உண்ணாவிரதம்

### 15 ஆம் திகதி தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம், பெப்.2

வலி.வடக்கு மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியும், படையினரால் வீடுகள் இடித்தழிக்கப்படுவதற்கு எதிராகவும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைவரையும் கட்சி பேதமின்றி ஒன்றிணையுமாறு வலி.


பார்க்க பக்கம் 04


## வடக்கில் இப்போதும் இராணுவ ஆட்சியே

### மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் சாடல்

யாழ்ப்பாணம்,பெப்.2

வடக்கில் இராணுவ ஆட்சியே இன்றும் தொடர்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைகள் சபையில் அனைத்து மக்களையும் மீளக்குடியமர்த்தி விட்டோம் என அரசு நிச்சயம் முழுப் பொய் சொல்லும். மீளக்குடியமர்வதற்காக பல ஆயிரம் குடும்பங்கள் இன்று காத்திருக்கின்றன.

இவ்வாறு தெரிவித்தார்


பார்க்க பக்கம் 04


## நவிப்பிள்ளையின் திட்டத்தை நிராகரித்தது இலங்கை

கொழும்பு,பெப் 2

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்கு, 10 பேர்கொண்ட நிபுணர்குழுவை இலங்கைக்கு அனுப்பும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் திட்டத்தை அரசு நிராகரித்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு ஐ.நா. உயர் ஆணையாளர் பணியகத்தில் இருந்து வந்த மூன்று அதிகாரிகளுக்கு மேலதிகமாகவே இந்தப் 10 பேரும் கொழும்புக்கு அனுப்பப்படவிருந்தனர். கடந்த ஆண்டு செப்ரெம்பரில் ஹன்னி மெஹாலி மற்றும் ஒஸ்கார்


பார்க்க பக்கம் 04


## சிறுவர்கள் இருவரை தாக்கிய சீருடையினர்

### பரந்தன் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இரு சிறுவர்கள் நேற்று சீருடையினரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்தில் வழிபாடு முடித்து 8 வயது, 10 வயதான இரு சிறுவர்கள் வீடு திரும்பினார்கள். அவர்


பார்க்க பக்கம் 04


## இந்திய ஆதரவு பகற்கனவு டில்லி உறவை துண்டிக்குக

### சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, பெப்.2

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணையை இந்தியா எதிர்க்கும் என அரசு நினைக்குமானால் அது வெறும் பகல்கனவே - என்று சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஜெனிவா மனித உரிமைத் தொடர் நெருங்கும் நிலையில் அம்மாநாட்டை எதிர்கொள்வதற்கு அதன் அங்கத்துவ நாடுகள் தயாராகி வருகின்றன.

குறிப்பாக இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணையைக் கொண்டுவந்து அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமெரிக்கா இராஜதந்திரக் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது.


பார்க்க பக்கம் 04


## கட்டுமீறும் இராணுவத் தலையீடு வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்பு

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.2

தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் அதிகரிக்கின்றது எனத் தமிழ்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்ற நிலையில், நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தின் தலையீடு அதிகரித்து வருவதால் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்படைகின்றன என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியது.

அத்துடன், காலநிலை மாற்றத்தால் மரக்கறிகளின் விலை அதிகரிக்கப்படுகிறது என அரசு கூறுவது பொய்யாகும். இது அரசியல்மயப்படுத்தப்பட்ட நீண்டகால நடவடிக்கையின் எதிரொலியாகும். ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும், பொரு


பார்க்க பக்கம் 04


## பல்கலை. மாணவர்கள் இருவரும் 20ஆம் திகதிக்கு முன் விடுதலை

### பல்கலை. சமூகம் நம்பிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வு என்ற பெயரில் வெலிக்கந்தை முகாமில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் இருவரும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ்.


பார்க்க பக்கம் 04



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரண்டு கைகளும் இயங்காத மாணவி பரீட்சையில் சாதனை!

கொழும்பு, பெப்.2

வலுக்குன்றிய நரம்புகள் காரணமாக இரண்டு கைகளும் கால்களும் இயங்காத நிலையில் சக்கரநாற் காலியின் உதவியுடன் தனது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் மாணவியொருவர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று தனது பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

கேகாலையில் சிறப்புத் தேவைகள் உள்ள சிறுவர்களுக்கான அம்பாம்பிட்டி பாடசாலை மாணவியான யு.ஜி. திலினி நிமேஷா என்ற மாணவியே இந்தப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்.

கேள்விகளுக்கான விடைகளை வாய் மூலமாகவே வழங்கிய இவர் கலைப்பிரிவில் இரண்டு 'ஏ' சித்திகளும் ஒரு 'பி' சித்தியும் பெற்றுள்ளார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இவர் ஐந்து திறமைச் சித்திகளையும் பெற்றவராவார். அதிலும் வாய் மூலமாகவே விடையளித்திருந்தார்.

இவரது தாயார் ஒரு பிரதி அதிபர். தந்தை கணிதபாட ஆசிரியர். இருவருமே மகளின் சிறப்புப் பெறுபேறுகளைக் கேட்டு மகிழ்ச்சியிலும், அதிர்ச்சியிலும் மூழ்கிப் போனார்கள்.

இந்த வெற்றியைப் பற்றி அந்த மாணவி கூறுகையில், எனது ஒரே ஆசை என்னவென்றால் பல்கலைக்கழகம் சென்று படிப்பதாகும். எனக்கு இந்தப் படிப்பில் உதவி புரிந்த அனைவருக்கும் எனது குடும்பத்தினருக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

இவ்வாறு மாற்றுத்திறனாளி மாணவர் ஒருவர் சிறப்புப் பெறுபேறுகள் பெற்றிருப்பது இலங்கையில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது.

தனது முழங்கைகளை முறையாக வைத்து செயற்படுத்த முடியாதபடி நரம்புகள் பலவீனமுற்றிருப்பதால் கை, கால்களால் ஒன்றும் செய்ய முடியாது போனாலும் சகல தடைகளையும் முறியடித்து முன்னேறியிருக்கும் இம்மாணவியை ஆசிரியர்களும், அதிபர்களும் பாராட்டியுள்ளார்கள். (ப)

# வலி.வடக்கில் நேற்றும் வீடுகள் இடித்து அழிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

வலி.வடக்கில் நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்குட்பட்ட பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து வீடுகள் இடிக்கப்பட்டு வருவதாக, அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் மாலை நிறுத்தப்பட்ட பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

ஜனவரி 30 ஆம் திகதியிலிருந்து படையினரால் மக்களின் வீடுகள் 'புல்டோசர்' மூலம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றன.

தொண்டமானாறு தொடங்கி காங்கேசன்துறை வரை படையினர் அமைத்துள்ள நிரந்தரப் பாதுகாப்பு வேலியோடு அமைந்துள்ள வீடுகளே இவ்வாறு இடித்தழிக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு வேலியோடு அமைந்துள்ள மண் அணை இடித்து தரைமட்டமாக்கப்படுகின்றது. தரைமட்டமாக்கி அதனைச் சீர்ப்படுத்தி அதில் 'காப்பெற்' வீதி அமைக்கப்படவுள்ளது. பாதுகாப்பு வேலிக்கு உட்பக்கமாக அமைக்கப்படவுள்ள இந்த 'காப்பெற்' வீதி படையினரின் தேவைக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. நிரந்தரப் பாதுகாப்பு வேலியில் கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'காப்பெற்' வீதி அமைப்பதற்காகவே படையினர் மக்களின் வீடுகளை இடித்தழித்து வருகின்றனர். நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் நேரடியாக இப்பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் வீடுகள் இடித்தழிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை 'காப்பெற்' வீதி அமைக்கும் பணிக்காக மண் அணையை இடித்துத் தரைமட்டமாக்கும் வேலைகள் இடம்பெற்றன. மண் அணையினுள் அகப்படுகின்ற வீடுகள் நேற்றும் இடிக்கப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். (த-5)

# மூன்று இடங்களில் திருட்டு

மூன்று இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்களின் போது நகைகள் உட்பட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் வீதியிலுள்ள வீட்டின் முன் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு 21 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். சண்டிலிப்பாய் வடக்கில் 10 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடந்த 24ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் கிழக்கில் 17 ஆயிரத்து 500ரூபா பெறுமதியான டி.வி.டி. பிளேயர் திருடப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (த-4)

# 'இணுவில் ஒலி' அறிமுக விழா

யாழ்ப்பாணம்,பெப்.2

இரு திங்கள் ஏடாக வெளிவரும் 'இணுவில் ஒலி' சஞ்சிகையின் மூன்றாவது இதழின் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இணுவில் பொது நூலகத்தில் பொதுநூலகத் தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் பிரதம விருந்தினராகவும், ஆசிரியர் ந.விஜயசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஒ)

# ஆங்கில சிறுகதை நூல் வெளியீடு

முன்னால் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் மு.தம்பிப்பிள்ளையின் "லாம்லவ் ஒப் ரமேஷ் அன்ட் அதர் ஸ்ரோறிஸ்" ஆங்கிலச் சிறுகதை வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஆங்கில விரிவுரையாளர் மா.பிராபகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் வி.சுந்தரேசன் நிகழ்த்தவுள்ளார்.

# அச்சுவேலி சனசமூக நிலையம் மக்கள் பாவனைக்குத் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

அச்சுவேலி மேற்கு அன்னை திரேசா சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்தச் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புச் செய்யப்பட்ட சனசமூக நிலையத்தை பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் வைபவரீதியாக மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார். (த-17)

# ஆசிரியை சடலமாக மீட்பு

வடமராட்சி,பெப்.2

பருத்தித்துறை பன்னைக் கட்டைப் பகுதி வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் ஆசிரியை நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

தேசிய கல்வியியல் கல்லூரியில் கல்வி பயில்பவரும், பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையில் பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றுபவருமான திவ்யா திவாகரன் (வயது- 23) என்ற இளம் ஆசிரி யையே வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியை நேற்றுப் பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பிய நிலையிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த-8)

# ஆளும் கட்சி முக்கியஸ்தர்களுக்கு ஆள் கடத்தல்களுடன் தொடர்பு

## ஆஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவு தகவல்

ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் இலங்கையின் ஆளும் கட்சி முக்கியஸ்தர்களுக்கு தொடர்புள்ளதாக ஆஸ்திரேலிய புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகளுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணும் உயர் அதிகாரி ஒருவருக்கு தொடர்பு இருப்பதாக அந்த நாட்டுப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

குறிப்பாகப் படகு மூலம் அண்மைக்காலமாக ஆஸ்திரேலியாவுக்குப் புகலிடம் தேடிச் சென்றவர்களுக்கு குறித்த அதிகாரி ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய அரசுடனும் தொடர்புகளைப் பேணி வருபவரே இவ்வாறு சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும், முட்டாள்தனமானவை எனவும் இலங்கை அரசு கூறியுள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கும் இலங்கை அரச உயர் அதிகாரிகளுக்கும் தொடர்பில்லை என்று ஆஸ்திரேலியாவுக்கான இலங்கை கொன்சல் ஜெனரல் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். எனினும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பின்றி பெருமளவிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் படகுகள் இலங்கையிலிருந்து புறப் பட்டுச் செல்ல முடியாது என புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, ஆள் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பது தொடர்பில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் அரச உயர் அதிகாரி தொடர்புபட்டுள்ளமை தொடர்பான குற்றச்சாட்டு குறித்து கருத்து வெளியிட முடியாது என குடிவரவு குடியகல்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் தகவல்கள் தொடர்பில் பகிரங்கமான கருத்துக்கள் வெளியிடப்படமாட்டா என தெரிவித்துள்ளது. (வ)

# முதல்தர பாடசாலையாக கைதடி நவீல்ட் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.2

அகில இலங்கையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான முதற்தரப் பாடசாலையாக கைதடி நவீல்ட் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான விருதை சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் பாடசாலையில் வைத்து வழங்கினார்.

இந்த நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. இலங்கையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அரச அங்கீகாரம் பெற்ற 25 பாடசாலைகள் உள்ளன.

அவற்றில் முதற்தர பாடசாலையாக கடந்த வருடம் கைதடி நவீல்ட் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. சமூக சேவைகள் அமைச்சு இந்தத் தெரிவை நடத்தியது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு கைதடி நவீல்ட் பாடசாலையில் கடந்த வாரம் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரத்தின் வழிகாட்டலில் பாடசாலை ஆசிரியர் பொன்.சிவகரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜும், கௌரவ விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமாரும் கலந்து கொண்டனர். (த-4)

# கடந்த வாரம் 123 பேர் கைது

வடமராட்சி,பெப்.2

யாழ்.குடாநாட்டில் கடந்தவாரம் பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 31 பேரும், சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 15 பேரும் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 123 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேருக்கு 52ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் பொது இடத்தில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 6 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும், சமாதானத்துக்கு குந்தகம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும், டெங்கு பரவும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 பேரும், விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 7 பேரும், சந்தேகத்தின் பேரில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 6 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு வாகனமும் கைப்பற்றப்பட்டது. சட்டவிரோதமாக பலகை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் 2 பேர் கைதானார்கள். வாகனமும் கைப்பற்றப்பட்டது. (த-4)

# இடமாற்றம் பெற்ற பணியாளர்கள் கடமைகளை ஏற்பு

தென்மராட்சி,பெப்.2

வட மாகாணத்துக்குட்பட்ட திணைக்கள அலுவலகங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் பிரகாரம் இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் நேற்று வெள்ளிக்கிழமை புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் அலுவலராக வே.சண்முகநாதன் பொறுப்பேற்றுள்ளார். தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றிலும் இடமாற்றம் பெற்ற நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் போன்றோர் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பு ஏற்பாடுகள்

## சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம், பெப்.2

*உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து உற்பத்திப் பொருள்களை உல்லாசப் பயணிகள் நேரடியாக கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாணச் சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது.*

வடக்கு மாகாணத்துக்குள் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான உல்லாசப் பயணிகள் வருகை தருகின்றனர். அவர்கள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். எனினும் தற்போது உள்ளூர் உற்பத்திப் பொருள்களை விட தென்னிலங்கை உற்பத்திப் பொருள்கள் சந்தையில் இடம்பிடித்துள்ளதால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

உல்லாசப் பயணிகளின் ஆர்வத்துக்கு ஏற்ப உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தையில் காட்சிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமையால் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களை ஒன்றியத்துடன் இணைத்து அதனூடாக உல்லாசப் பயணிகள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் அதிகளவான வளங்களைக் கொண்டு உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது முயற்சிகளால் பல தரப்பட்ட உற்பத்திப் பொருள்களை வித்தியாசமான வடிவங்களில் உற்பத்தி செய்தாலும் அதனைச் சந்தைப்படுத்த முடியாமல் திணறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தென்னிலங்கையில் இருந்து அதேவகையான உற்பத்திப் பொருள்கள் இங்கு கொண்டு வரப்பட்டு அவை உல்லாசப் பயணிகள் பயன்படுத்தும் சுற்றுலா இடங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இதனால் உல்லாசப் பயணிகள் பொருள்களை இனங்காண முடியாமல் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் என நினைத்து தென்னிலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்கின்றனர்.

இதன் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் சந்தை வாய்ப்பற்றவர்களாக தொழில்களைக் கைவிட ஆரம்பித்துள்ளார்கள்.

இதன் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக அவர்களை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்துடன் இணைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதன் முதற்கட்டமாக தீவகம், வன்னிப் பிரதேசங்களைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-14)

# பஸ்களில் சாராயம் கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.2

இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்ஸில் வைத்து நயினாதீவுக்குக் கடத்தப்பட்ட சாராயப் போத்தல்களை பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகத்தின் பேரில் நயினாதீவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவுக்குச் சென்ற பஸ்ஸிலேயே இவ்வாறு 21 மதுப் போத்தல்கள் கடத்தப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பஸ்ஸில் கடத்தப்பட்ட சாராயப் போத்தல்களை அவர்கள் மீட்டனர். சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டார். விசாரணையின் போது சந்தேகநபர் தான் சுற்றவாளி என்று கூறியதனால் வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபரை 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றும் அவர் தொடர்பானவழக்கை ஒத்திவைத்தது. (த-4)

# தென்மராட்சி மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவு தொகை



தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உதவு தொகை வழங்கல் மற்றும் சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளர் க.மகேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்சு.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸ்சாண்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் சேகரிக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட 5 தையல் இயந்திரங்கள் 23 சைக்கிள், ஆயிரத்து 34 மாணவர்களுக்கு கற்றல் உதவு தொகை ஆகியவை வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கான கற்றல் உதவு தொகையை வலயக் கல்விப்பணிப்பாளர்சு.கிருஷ்ணகுமார் மாணவர்களுக்கு வழங்கினார்.

ஐந்து பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்கள் மாணவர்கள் உட்பட 23 பயனாளிகளுக்கு சைக்கிள்கள் ஆகியவற்றை நிகழ்வின் விருந்தினர்களும் பிரதேச செயலரும் இணைந்து வழங்கினர்.

அத்துடன் கடந்த வருடம் இடம்பெற்ற புகைத்தல் எதிர்ப்புத் தினத்தையொட்டிய கொடி வாரத்தில் அதிகளவு நிதி சேகரித்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கி.சத்தியசீலன், யோ.உதயணன், கி.யோகநாதன் ஆகியோருக்கு கேடயங்களும் கடந்த வருடம் தமது பிரிவில் கூடுதல் சேமிப்பை பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கி.யோகநாதன், யோ.உதயணன் உட்பட மூவருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-9)

# வெளிநோயாளர் பிரிவு 12 மணி நேரம் சேவை

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

தென்மராட்சி,பெப்.2

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு கிழமை நாள்களில் 12 மணி நேரம் சேவையாற்றும் நடைமுறை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

வார நாள்களில் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் காலை 8 மணி தொடக்கம் மு.ப.10 மணி வரை வெளிநோயாளர் பிரிவு இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# மக்கி வீதிகள் வேண்டாம் தார் வீதிகளை அமையுங்கள்

கொடிகாமம், பெப்.2

ஏற்கனவே கல் வீதிகளாக இருந்து சேதமடைந்த வீதிகளை மக்கி வீதிகளாக மாற்ற பிரதேச சபை மேற்கொள்ளும் முயற்சிக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

**மக்கி வீதிகளாக மாற்ற பிரதேச சபையினர் ஏற்பாடுகள் செய்கின்றமை குறித்து மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.**

சாவகச்சேரி பிரதேச சபையின் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வீதி அபிவிருத்தி தொடர்பாக பல வீதிகளை புனரமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவற்றில் சில ஏற்கனவே கல் வீதிகளாகச் சேதங்களுக்கு உள்ளான நிலையில் இருப்பதால் அவற்றைத் தார் வீதியாக மாற்றித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஆயினும் அதற்கு மாறாக வீதிகளை மக்கி வீதிகளாக மாற்ற பிரதேச சபையினர் ஏற்பாடுகள் செய்கின்றமை குறித்து மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இது தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்பு கொண்ட போது, மக்களின் கோரிக்கைக்கேற்ப வீதி வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. இந்த வேலைகளை சபை நிதி மூலம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தார் வீதி அமைப்பதாயின் பெருமளவு நிதி தேவையெனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## இன்றைய நிகழ்வுகள்

*தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதேசத்தில் கடமையாற்றி இளைப்பாறிய ஆறு உத்தியோகத்தர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள எட்டு உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் நடப்பு வருட காலத்தில் இல்லறத்தில் இணைந்த உத்தியோகத்தர்கள் தம்பதிகளாக வரவேற்கும் நிகழ்வு இடம்பெறுமென சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (த-9)*

★ ★ ★

*கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசில் நாளும் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி செயலக உதவிப் பிரமதேச செயலர் செல்வி ந.ரஞ்சனாவும் கலந்து கொள்வர். 150 ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பு பேருரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்துவர். கலை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (த-131)*

**கூட்டம்**

*மாவிட்டபுரம் - கீரிமலை வீதியிலுள்ள தச்சன்காடு இந்துமயான அபிவிருத்திக் குழுவின் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஞானவைரவர் முன்றிலில் நடைபெறவுள்ளது. (த-14)*

**ஆண்டுவிழா**

*பீவ்ப் லீங் நிறுவனத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் மாற்றுத் திறனாளி விழிப்புணர்வு இசைத் தொகுப்பு இறுவட்டும் மற்றும் சஞ்சிகை வெளியீடும் இன்று பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-13)*

**தேவாரம் ஓதல் நிகழ்வு**

*சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் 20 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட முன்பள்ளிச் சிறார்கள் மத்தியில் தேவாரம் ஓதல் நிகழ்வு இன்று 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (த-8)*

# ஆதனவரிக்கு கழிவு வழங்கும் கால எல்லை மார்ச் மாதம் வரை

## அனுமதி வழங்கியது யாழ்.மாநகர சபை

யாழ்ப்பாணம்,பெப்.2

இந்த ஆண்டுக்கான ஆதனவரி சொத்து வரிக்கான 10 வீத கழிவு வழங்கும் கால எல்லையை மார்ச் மாதம் வரை நீடிக்க யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான முதலாவது பொதுக்கூட்டத்தில் மாநகர சபை ஆணையாளர் எஸ். பிரணவநாதன் ஆதனவரி தொடர்பாகக் குறிப்பிட்டு சபையின் அங்கீகாரத்தை கோரினார்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் ஆணையாளர் பிரணவநாதன், சபைக்கான மொத்த ஆதனம் 36371 ஆகும். இதில் ஜனவரி மாதம் வரை 5168 ஆதனங்களுக்கான வரி செலுத்தப்பட்டதில் சபைக்கு 78 லட்சத்து 44 ஆயிரம் ரூபா வரை வருமானம் கிடைத்துள்ளது. அந்த மாதத்தில் வழங்கப்பட்ட சலுகையே இதற்குக் காரணம். புதிய வரி விகிதத்திற்குப் போக வேண்டியுள்ளதால் காலதாமதமாகவே பொது மக்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கணினி மயப்படுத்தப் பட்டதால் சிறிய காலதாமதம் ஏற்பட்டாலும் தவறுகள் குறையும். வரியைச் செலுத்துவதற்கு மார்ச் மாதம் வரை கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

வரியைச் செலுத்தாதுவிடின் அடுத்த ஆண்டில் 12 வீதம் மேலதிக வரி வழங்க வேண்டியேற்படும் எனவும் ஆணையாளர் சபையில் தெரிவித்ததை அடுத்து மார்ச் மாதம் வரை கால எல்லையை நீடிக்க சபை அனுமதித்தது. (த-7)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் கண்சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.2

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவு நாளை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட 306 பி 1 இன் மாவட்ட ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க லயன்ஸ் மகளிர் அமைப்பினால் சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் கண் சிகிச்சைப் பிரிவுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதால் மீளவும் கண் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (த-14)

## வடக்கில்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஏ.யேசுதாசன்.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து மக்களையும் மீளக்குடியமர்த்தி விட்டோம் என அரசு ஜெனிவாவில் நிச்சயம் பொய் கூறும்.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள், 24 வருடங்களாகியும் மீளக்குடியமரவில்லை. அகதி வாழ்வே வாழ்ந்து வருகின்றனர்.

நலன்புரி நிலையங்களுக்குள் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றியோ, பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவது பற்றியோ அரசு சிந்திக்கவில்லை. இன்றும் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள், இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் மக்கள் வாழ்கின்றனர். நல்லிணக்க ஆணைக்குழு இராணுவக் கெடுபிடிகளை குறைக்க வேண்டும். மக்களின் காணிகளை மீளக்கையளிக்க வேண்டும் என்று சொல்கிறது. ஆனால் இந்த நடவடிக்கை வடக்கில் இடம் பெறவில்லை. இராணுவ ஆட்சிதான் இப்போதும் நடக்கிறது.

இறுதிப் போர் நடைபெற்ற பகுதிகளில் பிரச்சினைகள் உள்ளன. அடிப்படை வசதிகளை அங்கு முழுமையாக ஏற்படுத்த முடியவில்லை. ஆயினும் அரசு இறுதிப் போர் நடந்த பகுதிகளில் மீள்குடியமர்வு பூர்த்தியாகி விட்டது என்று சொல்கிறது-என்றார்.

(த-13)

## கட்டுமீறும்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
ளாதார நிபுணருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, பணவீக்கத்தை அளவிடும் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட கருத்துகளை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. 148 மரக்கறி வகைகளுக்கான இரண்டுவருட விலைச்சுட்டி எம்மிடம் இருக்கிறது. இதன்படி அனைத்து மரக்கறி வகைகளின் விலையும் குறிப்பிட்ட சில நாள்களுக்கு ஒருமுறை கூடிக்குறைந்துள்ளது.

மழை, வறட்சி, வெள்ளம் முதலான காலநிலைக் காரணிகளால் மரக்கறிகளின் விலை அதிகரிக்கப்படவில்லை. இது அரசியல்மயப்படுத்தப்பட்ட நீண்டகால நடவடிக்கையின் எதிரொலியாகும். மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்தால் மக்கள் எதனை உண்பார்கள்?

நாட்டின் விவசாயத்துறை அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்த்து மரக்கறிகளின் விலையை அதிகரிப்பதென்பது, தலைவலிக்கு, வயிற்றுவலிக்கான மருந்து கொடுப்பது போன்றதாகும். இதைத்தான் அரசு செய்கின்றது.

அத்துடன், நாட்டின் பணவீக்கம் 9.8 சதவீதமாக உள்ளது என அரசு கூறுகிறது. இந்தப் பணவீக்கம் எந்த முறையில் அறவிடப்படுகிறது எனத் தெரியவில்லை. இந்த முறையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் - என்றார்.

இதன்போது ஐ.தே.கவின் மேல்மாகாண சபை உறுப்பினர் ஹர்ஷா ராஜகருணா கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினரின் தலையீடு அதிகரித்துள்ளது. இதனால் தனியார், வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்படைகின்றன. - என்றார்.

(த-சி)

## பல்கலை..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அ.இராசகுமாரன் நேற்றுத் தெரிவித்தவை வருமாறு:

''கடந்த நவம்பர் மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு, படையினருக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் ஆகியவற்றையடுத்து பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மாணவர்களில் நால்வர் விடுவிக்கப்படாமல் வெலிக்கந்தை முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன் (முகாமைத்துவ பீடம்), விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகியோர் கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் குறித்த தினத்தில் விடுவிக்கப்படுவார்கள் என்று பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் முதல் நாள் அறிவித்திருந்தனர். அதற்கிணங்க இரு மாணவர்களும் அன்றைய தினத்தில் விடுதலை செய்யப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை, வெலிக்கந்தை முகாமில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ள கலைப்பீட மாணவர்கள் இருவரும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படுவார்கள் என உத்தியோகபூர்வமற்ற முறையில் படைத்தரப்பினர் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அறிவித்துள்ளனர்.

எனவே, தடுப்பில் உள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந் (கலைப்பீடம்), கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயன் ஆகிய இருவரும் குறித்த தினத்திற்கு முன்னர் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும் உள்ளனர்.

கலைப்பீட மாணவர்கள் இருவரும் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளமையால் குறித்த பீடத்தின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன. எனவே, கலைப்பீட மாணவர்கள் இருவரையும் அரசு உடன் விடுவித்து சுதந்திரமான கற்றலுக்கு வழிவிட வேண்டும் - என்று தெரிவித்தார். (த)

## வலி.வடக்கு..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
வடக்கு மக்கள் மீள்குடியமர்வுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

மல்லாகத்தில் அமைந்துள்ள வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நேற்று இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த பிரதேச சபைத் தவிசாளர், படையினர் வீடுகளை இடித்தழிப்பது தொடர்பில் நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பதை மக்களாகிய நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம்- என்றார்.

அதன்பின்னர், நாங்கள் மௌனமாக இருப்பதில் பயனில்லை. பெரியதொரு போராட்டத்தை மக்களைத் திரட்டி முன்னெடுக்க வேண்டும். எமது போராட்டம் அகிம்சை வழியினதாக இருக்க வேண்டும். எல்லோரும் இணைந்து எதிர்வரும் 15ஆம் திகதி மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று சுகிர்தன் மேலும் குறிப்பிட்டார்.

அன்றைய தினம் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் ஐ.நாவுக்கும், இலங்கையிலுள்ள தூதரகங்களுக்கும், ஜனாதிபதிக்கும் மனு அனுப்புவது எனவும், இந்தப் போராட்டத்தை வலி.வடக்கு மக்கள் மீள்குடியமர்வுக் குழுவே முன்னெடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-5)

## நவிப்பிள்ளையின்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
சொலேரா ஆகிய இரு அதிகாரிகள் இலங்கை வந்திருந்தனர்.

இந்தநிலையில், மேலும் 10 பேர் கொண்ட சிறப்பு நிபுணர் குழுவை அனுப்பும் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்து விட்டது.

அதற்குப் பதிலாக, போருக்குப் பிந்திய நிலைமைகளைப் பார்வையிடுவற்கு நவநீதம்பிள்ளை, முதலில் இலங்கை வரவேண்டும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

முதலில் தனது பணியக அதிகாரிகள் வந்து, எல்லாத் தரப்பினருடனும் பேசி, தனது பயணத்துக்கான பணிகளை மேற் கொள்வர் என்று முன்னதாக நவநீதம்பிள்ளை கூறியிருந்தார்.

தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக கடுந்தொனியிலான அறிக்கை ஒன்றை நவநீதம்பிள்ளை வெளியிட்ட நிலையிலேயே, நிபுணர் குழுவை அனுப்பும் யோசனையை இலங்கையரசு நிராகரித்துள்ளது. (த)

## முன்னகர்கிறது..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
இந்த நிலையில் கடந்த புதன்கிழமை முதல், நிரந்தரப் பாதுகாப்பு வேலியை முன்னகர்த்தும் நடவடிக்கையை படையினர் மேற்கொண்டுள்ளனர். இதன் பிரகாரம் முன்னர் வேலி இருந்த இடத்திலிருந்து 150 மீற்றர் வரை தற்போது அது முன்னகர்த்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய நிரந்தரப் பாதுகாப்பு வேலி பளை வீமன்காமம் பாடசாலைக்கு மிக அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் படையினரால் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட சில பகுதிகள் மீண்டும், நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நிரந்தரப் பாதுகாப்பு வேலி ரயில் தண்டவாளத்துக்கு வெளிப்புறமாக காங்கேசன்துறை வரை அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ரயில் பாதைப் புனரமைப்பிலும் பாதிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(த-5)

## தமிழர்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
உரிமைகளைப் பேணிப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து கண்காணிப்பகம் ஆய்வு செய்துள்ளது. அரபு வசந்தத்துக்குப் பின்னர் உருக்கொண்ட நிலைவரங்கள் குறித்தும் இது ஆய்வு நடத்தியுள்ளது. இந்த ஆய்வுகள் சம்பந்தப்பட்ட விவரங்களை இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

இந்த அவதானிப்பு மையம் தனது அறிக்கையில் இலங்கை நிலைவரம் குறித்துக் குறிப்பிடுகையில், ''இலங்கையில் பிரதான மனித உரிமை விவகாரங்களில் கடந்த ஓராண்டு காலத்தில் எத்தகைய அடிப்படை முன்னேற்றங்களும் ஏற்படவில்லை'' எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான இயக்குநர் பிரேட் ஆடம்ஸ் இலங்கை விவகாரங்கள் குறித்துக் குறிப்பிடுகையில், ''போரால் சின்னாபின்னமாக சிதைவுற்றுள்ள வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் இழப்புத் தொடர்பான அநேக பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணப்படவேண்டிய அவசியம் இலங்கை அரசுக்கு உண்டு'' எனத் தெரிவித்துள்ளார்.

''துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாடு, சம்பந்தப்பட்டோரை நீதி முன் நிறுத்துதல், தடுப்பு முகாம்களில் இழைக்கப்படும் சித்திரவதைகளுக்கு முடிவு கட்டுதல், அடிப்படைச் சுதந்திரத்துக்குத் தொடரும் தடைகளை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இவை தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் ஏமாற்றங்களையே அளிக்கின்றன'' என்றும் இயக்குநர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, போர்க்குற்றங்கள் தொடர்பான முறையீடுகளை விசாரணைக்கு உட்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ந்து கடைப்பிடித்துவரும் அசமந்தப் போக்கையும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஏற்கனவே கோடிகாட்டியுள்ளது. 2012 மார்ச் மாதம் தான் சுவீகரித்த தீர்மானத்தின் மூலம் நீதியையும், பொறுப்புக்கூறும் கடப்பாடுகளையும் உத்தரவாதப்படுத்த அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை அது வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையும், பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய கூட்டுத் திட்ட நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களையும் காலந்தாழ்த்தாது சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசிடம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கோரியிருந்தது.

இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய இயக்குநர் பிரட் ஆடம்ஸ் குறிப்பிடுகையில்,

''இலங்கை அரசு அதன் கடந்த கால தந்திரோபாயங்கள் தடைப்பட்டுவிட்டன என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவற்றிற்கு மாறாக சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஓர் அரசு அதன் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறும் போது சர்வதேச தலையீடு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது'' என்று கூறியுள்ளார்.

(த-சி)

## வருவாரா..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
டன் வெளிவிவகார அமைச்சர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் பிரிட்டன் மகாராணியார் மற்றும் பிரிட்டன் பிரதமர் ஆகியோர் கலந்துகொள்வது பற்றி பிரிட்டன் எதுவித தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இருந்த போதும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாதது எந்த வகையிலும் பாதகத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்று தான் நம்புவதாகவும், இந்த மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(த-சி)

## இந்தியா..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு முக்கியம் பெறுவதால் அந்நாட்டின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அமெரிக்காவும், இலங்கையும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த முறை போலவே இம்முறையும் இந்தியா ஆதரவளிக்கும் என அமெரிக்கா உறுதியாக நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அதேவேளை, இந்தியாவின் ஆதரவு தமக்கே என்றும், அதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றும் இலங்கை அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

ஆனால், ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் தொடர் குறித்து இந்தியா இன்னும் மௌனம் காத்து வருகின்றது. இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரத்தில் தனது நிலைப்பாடு என்னவென்பதை அது இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

எனினும், இலங்கை விவகாரத்தில் இந்தியா எத்தகைய முடிவை எடுக்கும் என உள்நாட்டு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் ஊகம் வெளியிட்டு வருகின்றன. இலங்கையை இந்தியா இம்முறையும் எதிர்க்கும் என ஒருதரப்பும், இல்லை, அது நிச்சயம் ஆதரிக்கும் என மற்றுமொரு தரப்பும் வாதங்களை முன்வைத்து வருகின்றன.

இந்நிலையில், இந்தியாவின் நிலைப்பாடு இலங்கை விடயத்தில் எவ்வாறு அமையுமென தேசிய அமைப்புகள் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பிரதான அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகரவிடம் கருத்துக் கேட்டபோது,

இதன்போது இம்முறையும் இந்தியா காலைவாரிவிடும் எனத் தெரிவித்த அவர், மேலும் கூறியவை வருமாறு:-

பிரபாகரனை வளர்த்துவிட்ட இந்தியாவை இலங்கை ஒருபோதும் நம்பக்கூடாது. அந்நாட்டின் கருத்துகளை நாம் கணக்கிலெடுக்கக்கூடாது. டில்லியுடனான உறவுகளைத் துண்டித்தால் கூடப் பரவாயில்லை.

கடந்த தடவை இந்தியா இறுதி நொடியில் இலங்கையின் காலை வாரியது. இந்தத் தடவையும் அதைத்தான் செய்யும். இது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். எனவே, இந்தியாவின் ஆதரவை எமது அரசு எதிர்பார்க்குமானால் அது பகல்கனவாகவே அமைந்துவிடும்.

அதேவேளை,நவநீதம்பிள்ளை அனுப்பவுள்ள குழுவை இலங்கை அரசு நிராகரித்துள்ளது என அறியமுடிகின்றது. இது வரவேற்கத்தக்கது -என்றார்.

(த-சி)

## சிறுவர்கள்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
களைப் பின் தொடர்ந்து ஓட்டோ ஒன்றில் வந்த சீருடையினர் சிறுவர்களை அவர்களின் வீட்டின் முன்பாக வைத்து கைத்தொலைபேசியைத் திருடியதாகக் கூறி மிரட்டியுள்ளனர். எனினும் தாம் அதனைத் திருடவில்லை எனச் சிறுவர்கள் கூறியுள்ளனர்.

இதன்பின்னர் அங்கிருந்து சென்ற சீருடையினர் மீண்டும் முற்பகல் 10.30 மணியளவில் வந்து சிறுவர்களைஅருகில் உள்ள தமது முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வைத்து அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதுடன் தனியாக அறை ஒன்றில் அடைத்து வைத்துத் தம்மைப் பிளாஸ்ரிக் குழாயினால் தாக்கியதாகச் சிறுவர்கள் தெரிவித்தனர்.

பரந்தன் கிளிநொச்சியைச் சேர்ந்த நந்தகுமார் பவுசிகன் (வயது-10), அவரது சகோதரரான நந்தகுமார் டினேஸ் (வயது-8) ஆகிய இரு சிறுவர்களுமே தாக்கப்பட்டவர்கள் ஆவர்.

தற்போது இந்த இரு சிறுவர்களும் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-6)

உதயன்

## உடனடி வேலை வாய்ப்பு

பிரபல்யம் வாய்ந்த தனியார் நிதி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து க.பொ.த உ/த மூன்று பாடங்களில் சித்தியுடையோர் உடனடியாக தேவைப் படுகின்றனர். கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் 2013.02.04 ஆம் நாளுக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும் அல்லது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டு SMS அனுப்பவும்.

தொ.பே.இல- 0775273294, 0770626424

பிரதேசங்கள்- கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோண்டாவில், உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஊரெழு

## உங்கள் நினைவுகள் சுமந்த ஆறு ஆண்டுகள் நிறைவில்



அமரர்
**சூசைப்பிள்ளை வேதநாயகம்**
(02.02.2013)

பிரிவுடன் ஆறாண்டுகள் நிறைந்து விட்டது
எம் மனதில் நிறைவுடன் நிறைந்துள்ளீர்கள்
வாழ்க்கை ஓட்டத்தில் வண்ணக் காலங்களை
நீங்கள் வாழும்போது நாங்கள் கண்டுகொண்டோம்
பிறப்பதும் இறப்பதும் இவ்வுலகில் நிஜம்
இறக்கும்போது பிரிவதும் நிஜம்- ஆனாலும்
கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் மறுபடி சந்திப்பது
நிஜத்திலும் நிஜம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

671, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

யாழ் மண்ணில்
A/L இன் பின்னர்
சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்

BTEC HND in...
> Computing & Systems Development
> Quantity Surveying
> Civil Engineering
> Business Management
> Biomedical Science
> Law
> Pshycology

Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)



மேலதிக விபரங்களுக்கு
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road,
Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
www.bcas.lk

## கடை வாடகைக்கு

ரமணன்கட்டடப் பொருள் நிலையத்துக்கு அருகில் கடைவாடகைக்கு விடப்படும். நேரில்வரவும்.
தொடர்பு 0214925417, 0212229296 (c.6167)

இல.84 ஐயனார்கோயில்வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்.

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றினூடாக மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும். சகல விதமான மோட்டார் வாகன உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

இல. 06, கவசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல. 30/27, மூத்த விநாயகர், இரண்டாம் ஒழுங்கை, நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430

## விற்பனைக்கு

றோட்வில்லர், அல்சேஷன், டாசெஷண், பொமேரியன் நாய்களும், நாய்க்குட்டிகளும் விற்பனைக் குண்டு.
No.6, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி.
0771016407

## கணினி திருத்தம் Computer Repair

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரியமுறையில் திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள் -0779086737
GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

## சிங்கள வகுப்புகள்

இன்று: 02.02.2013 சனி, 4 p.m.
ஆசிரியர்: N.திருக்குமாரன் (M.A, நீதி மன்ற தமிழ், சிங்கள பேச்சு மொழிபெயர்ப் பாளர்)
தொடர்பு: 0779789456
இல.181, 1ஆம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி

## German Swiss மொழிகள்

தமிழ் மொழிபெயர்ப்புடன் Embassyயில் கேட்கப்படும் A1 Certificateக்கு ஏற்றவாறு Germanyஇல் இருந்து வந்த ஆசிரியரால் நடை பெறுகிறது.
German Institute ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
T.P 0771604823 Miss Kajenthini
தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்- 8 மணியிலிருந்து 6 மணிவரை

## காணி விற்பனைக்கு

மல்லாகம் பிரதேசசபை பகுதிக்குட்பட்ட ரயில் பாதைக்கு அண்மித்த ''ஆனைவிழுந்தான்'' நிபர 03 என்ற ஆதனம் விற்பனைக்குண்டு. விரும்பியவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
T.P- 0777069934

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் 3¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
T.P- 0776667771

## வாடகைக்கு

10 ½ அடி நீளம் உள்ள ISUZU லொறி வாடகைக்கு விடப்படும். தனியார் அல்லது நிறுவனங்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 0774380813 (29033) (6.2)

## கோழிப்பண்ணை வாடகைக்கு

3 ஏக்கர் தென்னங்காணி (வருமானமுள்ள) 10,000 கோழி, 200 ஆடு, 50 மாடு, 10 நாய் போன்றவை வளர்க்கக்கூடிய அதி வசதிகள் கொண்ட பண்ணையும் சகல வசதிகளும் கொண்ட 42 அடி வீடு என்பன அடங்கிய பண்ணை வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
077 6110012, 077 230 4097 (27651)(6,7.2)

## A/L Chemistry

General, Thermo, Organic, Physical chemistry
துரிதகதியில் 20 வருட வினாத்தாள் மீட்கப்படும்.
ஆசிரியர்-(B.Sc(Cey), M.Sc(Cey))
(29028)(3.6) T.p-0776038913

## தொடர்பு கொள்க

கொழும்பில் CORDIALS, JAMS, NELLI SODA பழச்சாறு பானங்கள் உற்பத்தி செய்து வந்த தொழிற்சாலையை யாழ்ப்பாணத்துக்கு மாற்றி இயக்கத் தீர்மானித்துள்ளோம். பங்காளர்களாக (Partner) சேர்ந்து செயற்பட விரும்புபவர்கள்உடன் தொடர்பு கொள்ளவும். (யாழ்ப்பாணத்தில் உள்ளவராக இருத்தல் வேண்டும்) தொடர்பு: 0721808098 (C/6163) (6.2)

## மரண அறிவித்தல்



*செல்லத்துரை இராசதுரை*
*(பத்தர்)*

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசதுரை நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசையா -சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஆனந்ததேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் (பத்தர்), திருநாவுக்கரசு, ருக்மணி மற்றும் கைலாசதுரை ஆகியோரின் சகோதரரும், செல்வராசா, ஜெயக்குமார், விஜயகுமார், சுரேஸ்குமார், வதனி, தனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதராணி, யசோதா, நிஷாந்தினி, றூபா, கஜன், சஞ்சீவ் ஆகியோரின் மாமனும், அஜித், பிறிமியா, சங்கீத், ராஜித், ஐஸ்வினி, தனுஸ்கா, மாதங்கன், சோபிஸ், மக்சிடன், என்சோ, யனிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேசாவில் பிள்ளையார்
கோவிலடி, வண்ணார் பண்ணை
வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.ஜெயக்குமார்
(ஜெயா- மகன்)

## 31ஆம் நாள் ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு



அமரர் *தம்பிராசா தேவராசா*
*(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை மின்சாரசபை)*

கடந்த 03.01.2013 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தம்பிராசா தேவராசா (ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்) அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (02.02.2013) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னுங்கை,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## வெற்றித்தேர்வு போட்டிப் பரீட்சைகள்

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும் வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகிவிட்டன.
தரம் 5 - 3வது பரீட்சை தரம் 4 - 2வது பரீட்சை
03.02.2013 ஞாயிற்றுக்கிழமை
வினாத்தாள் திருத்தப்பட்டு புள்ளிகள் வெளியிடப்படும்.
உங்கள் பிள்ளைகளின் நிலைகளை அறிந்துகொள்ள தவறாது உடன் பதிவுசெய்யுங்கள்.
குறிப்பு: பாடசாலைகளுக்கான வினாப்பத்திரங்கள் இப்பரீட்சைக்காக வழங்கப்படமாட்டாது.
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807

## அறிவித்தல்
## மானிப்பாய் கிராம உபஅலுவலகம் ஆனைக்கோட்டை

வட்டாரம்-11
கொத்துக்கட்டி றோட்
ஆதன இலக்கம்: 63(புதியது)

வட்டாரம் -11 கொத்துக்கட்டி வீதி, ஆதன இலக்கம் 63 இல் அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலியிறை 'கலட்டி' எனும் பெயருள்ள விஸ் தீரணம் நிலப்பரப்பு (3 கொண்ட ஆதனம்) ஆதனமானது யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்த மகாலிங்கம் கைம்பெண் சறோ ஜினிதேவி என்பவரால் சீதனமாக சின்னத்துரை தயாளன் பெண் கஜாந்தினி ஆகிய இவர்களால் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 9168 ஆம் இலக்க 2012/11/24 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சின்னத்துரை தயாளன் பெண் கஜாந்தினி ஆகியவர்களின் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படும் என்பதை அறியதத் தருகிறேன்.

தவிசாளர்,
வலிதென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
(29032)(5-6)

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா திருக்குமரன்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா திருக்குமரன் கடந்த (30.01.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நல்லையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் (சுந்தரி- சுவிஸ்) அன்புக் கணவரும் கிரிசாந்தனின் (சாந்தன்- சுவிஸ்) அன்புத் தந்தையும் ராதாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் சிறியாவின் (சுவிஸ்) பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், சிவஞானம், சின்னத்துரை மற்றும் சரஸ்வதி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சிவஜோதி, சுப்பிரமணியம் மற்றும் பவளம், காலஞ்சென்ற பாக்கியம், நகுலேஸ்வரி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மலிங்கம், சிவஜோகரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.02.2013 - 05.02.2013 வரை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை Schonaustrasse 23, 3600 thun, swiss, 2ஆம், 6ஆம் இலக்கம், பஸ்ஸில் 4ஆம் தரிப்பிடம் எனும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு 06.02.2013 புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் Krematorium, Schonaustrasse 23, 3600 thun, swiss, என்னும் இடத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடயல்வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு

மனைவி- சுவிட்சர்லாந்து
+41332217419

தகவல்
நகுலேஸ்வரி

## திருமதி சரஸ்வதி இராசதுரை



இணுவிலைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி இராஜவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசதுரை நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தெய்வானை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னக்கிளி, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், வல்லி இராசதுரையின் அன்பு மனைவியும் பாஸ்கரன், பத்மஸ்ரீதரன், பத்மலதா, பத்மப்பிரியா, ரஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், மதிராசா, மதிவதனன், லலிதா, செல்லப்பவுண் ஆகியோரின் அன்பு மாமியும், நிரோசன், கஸ்தூரியா, கனிஷ்டன், கௌசி, டிலோன், லியிதன், நிவேயினி, மதுசா, கிறிஸ்டிகா, டீனு, தனு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று (2.02.2013) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதஉடல் நல்லடக்க ஆராதனை நிகழ்வுகளுக்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குணராசா நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் உருக்குமணிதேவியின் அன்புக் கணவரும், ஜெகனின் அன்புத் தந்தையும் தியாகராசா, தவமணி காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சிங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2013) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு
ஏழாலை.

தகவல்
ஜெகன் (மகன்)


## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் பலாலி வீதிக்கு அண்மையில் வைரவர் கோயில் வீதியில் அமைந்துள்ள 1¾ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0779563899

(29119)(14.6)





ST ANTONY இல்
HP FULL SET COMPUTER
24,750/= மட்டும்
ஒரு வருட உத்தரவாதம்
FREE- HEAD PHONE/ 8GB PEN/ WEBCAM/ COVER
187, KKS ROAD, JAFFNA.
0212224865, 0750698608


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணி சிவசோதி



கைதடி நுணாவில், சாவகச் சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி சிவசோதி 31.01.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற சிவசோதியின் அன்பு மனைவியும், லவணனின் (பிரான்ஸ்) பாசமிகு தாயாரும், மதுராவின் (பிரான்ஸ்) அன்பு மாமியும், லவீனின் (பிரான்ஸ்) பாசமிகு பேர்த்தியும், யோகவதி, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற காமாட்சி மற்றும் செல்வதி, செல்வினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நுணாவில், குச்சுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.: 0033 7603 06692
021 7200307

தகவல்:
லவணன் (மகன்)

(18030)(5-6)

## மாணிக்கம் சின்னத்தம்பி
### (செட்டியார்)



பழம் வீதி, கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், இல. 40, 5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சின்னத்தம்பி (செட்டியார்) 01.02.2013 வெள்ளிக் கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- கண்ணகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- சீதை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான மகிழம்மாவின் அன்புக் கணவரும் நவரட்ணம், காலஞ்சென்ற கமலேந்திரராசா, செல்வராணி, புஸ்பராணி, ரஞ்சித்குமார், விஜயராணி, மல்லிகாதேவி, மகேந்திரராசா, ராகினி, காலஞ்சென்ற பவளராணி, உதயகுமாரி (கனடா), பிறேம்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரா, புஸ்பராணி, காலஞ்சென்ற குண்டுமணி, சற்குணம், வசந்தகுமாரி, தர்மலிங்கம், விஜயகுமார், சித்திரா, குணராசா, கமலநாதன் (கனடா), ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, 5ஆம் ஒழுங்கை
அரசடி வீதி, கந்தர்மடம்.

தகவல்
குடும்பத்தினர்
0770711139

# மரண அறிவித்தல்

## சின்னட்டி தர்மகுலசிங்கம் (செல்வராசா)

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், நிலஅளவைத் திணைக்களம்)



போக்கறுப்பு, முள்ளியானைப் பிறப்பிடமாகவும், நாவற்காடு வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி தர்மகுலசிங்கம் கடந்த (30.01.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் தர்மசீலன் (லண்டன்), சுசிதா (லண்டன்), றஜிதா (கனடா), நியூசீலன், யசீலன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் யாழினி, ரகுரஞ்சன் (லண்டன்), மோகனராஜ் (கனடா) ஆகியோரின் மாமனும், சயந்தன் (லண்டன்), மேந்துலா (லண்டன்), அஞ்சனன் (கனடா), ஜான்சிகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற உமையம்மா மற்றும் தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற ஐயம்பிள்ளை மற்றும் சரஸ்வதி, சுந்தரலிங்கம், ஸ்ரீநிவாசன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் பிள்ளையார் கோயில் வீதி, அம்பன் குடத்தனையில் உள்ள அவரது சகோதரர் சி.சுந்தரலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
0776454996, 0779405802

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் நந்தீஸ்வரன்

(சமாதான நீதிவான் - JP)
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், உடற்கூற்றியற்துறை மருத்துவபீடம். யாழ்.பல்கலைக்கழகம்)



யாழ். வேளாதோப்பு கட்டைப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நந்தீஸ்வரன் 26.01.2013 சனிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் (ஐயாத்துரை) மற்றும் இராசம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் பவளரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நிலாஒளிமலரின் (பிரதேச செயலகம். சண்டிலிப்பாய்) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, முத்தம்மா, கனகம்மா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் கௌரியம்மா(கிளி), இராமஜெயம் லோகநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி) தவராஜா, பாலராஜா(கனடா), கருணேஸ்வரன் (ஐங்கரன் சென்ரர் உரிமையாளர்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகராசா(கனடா), நல்லலிங்கம் (கனடா), சிவானந்தமூர்த்தி (பிரான்ஸ்), மாணிக்கவாசகர்(கனடா), பாலசுப்பிரமணியம், தணிகாசலம், காலஞ்சென்ற கமலராஜா-பதுமநாயகி, யோகரட்ணம், கௌரியம்மா (கௌரி-சுவீடன்)ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் காலஞ்சென்ற விபுலானந்தன் (விபுல்) மற்றும் இராமஜெயம் கந்தையா , விஜசேகரம்(சுவீடன்), அருணா (பிரான்ஸ்), ராஜீ (கனடா), யோகா, நல்லம்மா(கனடா) ,பத்மாவதி(கனடா), குமாரி, பிரான்சிஸ்கம்மா, வசந்தா(பிரான்ஸ்), உமா(கனடா) , குமுதினி, சாந்தி, கனகமணி, புஸ்பராணி, தனலட்சுமி, குலசிங்கம் , (ஆசிரியர்) ,குலமோகன்(ஆசிரியர்), தர்மரத்தினம்(கனடா), சந்திரபூமலர் (கனடா), அருட்காந்தன்(கனடா), ஆகியோரின்பாசமிகு மைத்துனரும், திருமாறன் - லதா, தாரணி - கனகராஜா,தசராஜ், லோகராஜ்,சிறிரஞ்சனி, சாயிராம், அபர்னா, ரூபன், மீரா, பிரியா, சிறி, ஆகியோரின் பாசமிகு மாமனும் கிசோக்குமார் - சாளினி, கிரிக்குமார் - சுசீலா,கிரிசாந்தன், கிரோசன், துரிதா, சாயிசா, அபிராமி, ஆரணி, அபிநயா, ரஜனி, அருள், ஜனனி,கார்த்திகா, நித்தியன்,ராஜ்குமார், சிவராஜ், லதா, உசாணி, அனோஜா, மாதுரி, வாசுகி, றோகினி ,கனி, நீசுன், ஜீன், சுசிறேகா, சர்மிளா, விதுர்சிகா ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் கங்கா, சாபி, சகிர்சா, அக்சனா, அக்ஸ்வின், சாயிராம் (விபுல்), காயினி, கஜீவன், காருணி, றோசினி, சுஜீவன், சுகேசன், லக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 11.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேளாதோப்பு
கட்டப்பிராய்

(c/6165)(14.6)

தகவல்
குடும்பத்தினர்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அனைத்துலக அரசியல் ஒழுங்கு என்பது அதிகாரத்துக்கு முதன்மை வழங்கும் போக்கே

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில் பிரெஞ்சுப் படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. மாலியின் வட பகுதியில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான அல்-குவைதாவின் இறுதிக் கோட்டையாக விளங்கிய 'கிடால்' நகரம் வீழ்ச்சி அடைந்ததை அடுத்து மாலியின் வட பகுதி முழுவதும் பிரெஞ்சுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

மாலியின் 65 சதவீதமான நிலப்பகுதி பாலைவனப்பிரதேசம் அல்லது வறண்ட பகுதிகள். வடக்கே அல்ஜீரியாவையும், கிழக்கே நைகரையும், தெற்கே பர்கினாபாஸோ, கோட்டுவர் ஆகியவற்றையும், தென்மேற்கே கினி, செனகல் ஆகிய நாடுகளையும், மேற்கே மொரிடேனியாவையும் எல்லைகளாகக் கொண்ட மாலியின் எல்லைப் பகுதிகள் பாலைவனங்களுடன் இணைந்திருக்கின்றன. உலகிலேயே பெரிய பாலைவனமான சஹாரா பாலைவனமும் மாலியின் ஓர் எல்லையைத் தொட்டே நிற்கிறது.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், இஸ்லாமிய தீவிரவாதிகள் பிரெஞ்சுப் படைகளுடன் போரில் ஈடுபடுவதைத் தவிர்த்து பின்வாங்கியுள்ளமையே தமது தரப்புக்கு ஏற்படத்தக்க இழப்புகளைத் தவிர்க்கும் விதத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மாலியின் எல்லைகளில் உள்ள பாலைவனப் பகுதிகள் ஊடாக தப்பிச்சென்றுவிட்டனர். இதனைக் கருத்தில் கொண்டே பிரஞ்சுப் படைகள் போர் முடிந்துவிட்டதாக அறிவித்தாலும், உண்மையில் போர் இன்னமும் முடியவில்லை என்கின்றனர் இராணுவ ஆய்வாளர்கள். மாலி, மற்றொரு ஆப்கானிஸ்தானாக மாறக்கூடிய ஆபத்து உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

2001 செப்ரெம்பர் 11 இல் நியூயோர்க் வர்த்தக மையம் மீதான அல் - குவைதா அமைப்பின் தாக்குதலை அடுத்து, ஆப்கானிஸ்தானுக்குத் தனது படைகளை அனுப்பி அங்கு, அவ்வேளையில் பதவியில் இருந்த தலிபான் அரசை அமெரிக்கா கவிழ்த்தது. அது நடந்து தற்பொழுது பதினொரு வருடங்கள் கழிந்துவிட்டன. பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானின் மலைப்பாங்கான எல்லைப் பகுதிகளிலும் தற்போதும் மறைந்து வாழும் தலிபான்கள், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளுக்கு எதிராகத் தற்போதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஆப்கான் போர் பாகிஸ்தான் அரசியலிலும் கூடப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அடுத்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முற்றாக வெளியேறிய பின்னர் அமெரிக்காவினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆப்கான் படைகளால் தலிபான்களின் தாக்குதலை வெற்றிகரமாக எதிர்கொள்ளமுடியுமா என்பது சந்தேகத்துக்குரியதே.

ஆப்கானிஸ்தானிலும், லிபியாவிலும், ஈராக்கிலும் போர் வெற்றிகள் சுலபமாக ஈட்டப்பட்டமை என்னவோ உண்மைதான். ஆனால் போரின் பின்னர் அரசியல் இருப்பை ஏற்படுத்துவது அவ்வளவு சுலபமான காரியம் ஒன்றல்ல. இதேபோன்ற ஒரு நிலைமையே மாலியிலும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடும் என எண்ணுவது தவறல்லவே.

1975 ஆம் ஆண்டில் அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்துடன் போர் முடிவுக்கு வந்த வியட்நாமிலும், அமெரிக்கா முதலில் நுயன்வான் தியூ தலைமையிலான தென்வியட்நாமின் இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கவே தனது படையினரை அனுப்பியது. பின்னர் அது முழு அளவிலான போராக மாறி கம்போடியா, லாவோஸ் ஆகிய அண்டை நாடுகளிலும் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்தியது. வியட்நாம் போர் அமெரிக்காவுக்குப் பெரும் தோல்வியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியதைச் சரித்திரத்தில் மறந்துவிட முடியாது. வியட்நாம் போரினால் கிட்டிய படிப்பினைகளை அமெரிக்கா இன்று மறந்துவிட்டது.

மாலியிலும் பிரெஞ்சுப் படைகள் வெளியேறியபின் இஸ்லாமிய தீவிரவாதிகள் மீண்டும் தமது தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் காணப்படுகின்றன. இழப்பைத் தவிர்ப்பதற்காகப் பின்வாங்குவதும், பின்னர் தக்க தருணம் பார்த்து மீண்டும் தாக்குதலை ஆரம்பிப்பதும் கிளர்ச்சியாளர்களின் போர்த் தந்திரோபாயம். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் இதேபோன்ற உத்தியையே பயன்படுத்துகின்றனர். வியட்நாம் போரின்போதும் வியட்கொங் படையினரும் இத்தகைய உத்தியையே கைக்கொண்டனர்.

மாலி அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு பெரும் பகுதி தற்போதும் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் இருப்பது மேற்கு நாடுகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். அதனாலேயே பிரான்ஸின் இராணுவத் தலையீட்டுக்கு பிரிட்டனும் ஆதரவு வழங்கியது. மாலியில் பணிபுரியவும் அதன் அண்டை நாடுகளின் இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கவும் 330 படையினரை பிரிட்டன் அனுப்பவுள்ளமை பிரிட்டனில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. பிரிட்டனின் இந்த நடவடிக்கை, பிரிட்டனின் தேசிய நலன் கருதி எடுக்கப்பட்ட ஒன்றென பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஹம்மொண்ட் தெரிவித்துள்ளார்.

மாலியில் தலையிட்டுள்ள நாடுகள் மாலி அரசின் நலனை விட தமது தேசிய நலனை முதன்மைப்படுத்தியே தலையிட்டுள்ளன என்பதே உண்மை. இப்பொழுது அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு தொக்கிநிற்கும் பெரிய அச்சம், மாலி எதிர்காலத்தில் மற்றொரு ஆப்கானிஸ்தான் ஆகிவிடுமோ என்பதுதான்.

எவர் எதனைத் தெரிவித்தாலும் அல்லது சக்தி உள்ள நாடுகள் தமது நலன்நாடிய வியூகங்களை வகுத்தாலும் அவற்றின் உள்ளார்ந்த தேவை அல்லது குறிக்கோள், ஜனநாயகம், மக்கள் நலன் என்பனவற்றுக்கு அப்பால் சுயமான மேலோங்கித் தனம் நாடியவையே என்பதே இப்போதைய உலக ஒழுங்கின் யதார்த்தமாக மாறிவருகிறது. அதுவே அப்பட்டமான உண்மை நிலை...

# அதிகாரப்பகிர்வு கூட்டு இரண்டாக உடைந்தது !

## பிரிந்து செல்கிறது மனமேந்திர குழு

கொழும்பு,பெப்.2

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மனோகணேசன், அஸாத் ஸாலி ஆகியோரின் கூட்டு முயற்சியில் உதயமான அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம் என்ற அமைப்பு இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே கருத்து மோதல் ஏற்பட்டதையடுத்து அதிருப்தியடைந்து வெளியேறிய புதிய சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திர மேலும் இரு கட்சிகளை இணைத்துக் கொண்டு 'உண்மையான மக்கள் குரல்' என்ற புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இந்தப் புதிய அமைப்பு இந்த மாத இரண்டாம் வாரத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்றும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சரத் மனமேந்திர தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற அமைப்பிலிருந்து அதிருப்தியடைந்து வெளியேறிய தமது கட்சியான புதிய சிஹல உறுமய, அருண சொய்ஸா தலைமையிலான ருஹுணு மக்கள் கட்சி, ஹப்பு ஆராச்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்தே இந்த அமைப்பு உருவாக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி, புதிய சிஹல உறுமய, ஐக்கிய மக்கள் முன்னணி முதலான ஏழு கட்சிகள் அங்கம் வகித்தன.

இந்தக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டையடுத்தே புதிய அமைப்பொன்றை சரத் மனமேந்திர உருவாக்கவுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பில் நான் பங்குகொள்ளமாட்டேன். அந்த அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்துகொள்ளமாட்டேன்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதாகக் கூறி வாராந்தம் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்துவதனூடாக எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. தமிழ் பேசும் மக்கள் அன்றாடம் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். எனவே, அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக அவர்களது இடத்திற்கு நேரடியாகச் சென்று கலந்துரையாடவேண்டும். அதனூடாக அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுதான்' எனது நிலைப்பாடு.

எமது கட்சி, அருண சொய்ஸா தலைமையிலான ருஹுணு மக்கள் கட்சி, ஹப்பு ஆராச்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து 'உண்மையான மக்கள் குரல்' என்ற புதிய அமைப்பொன்றை உருவாக்க உள்ளோம்.

இந்த அமைப்பின் செயற்பாடுகள் இம்மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் - என்றார் சரத் மனமேந்திர. (த)

## களனியில் கால்வைக்க பயம் கொள்ளும் பஸில்

கொழும்பு,பெப்.2

களனிக்குச் செல்வதற்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசம் கொலைக்களமாக மாறியுள்ளது என்றும், அங்கு மனிதர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

களனி பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தை கடந்த புதன்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

களனிக்கு வருவோரைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அரசியல் தலைமைத்துவம் கூறுகிறது. களனிக்கு வருவதற்கு எமக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது. ஆனால், அப்படி ஒன்றும் நடக்காதே என்று அவர் புன்னகையுடன் கூறியுள்ளார்.

கொழும்புக்கு வெளிமாவட்டத்தில் தேசிய ரீதியிலான வங்கியொன்றைத் திறந்துவைப்பது இதுவே முதற்தடவை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அதிலும் கம்பஹா மாவட்டத்திலுள்ள களனி பிரதேசத்தில் இவ்வாறு வங்கியொன்றைத் திறந்துவைத்தமை பெரும் வெற்றியாகும் எனத் தெரிவித்தார்.

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல படுகொலை செய்யப்பட்ட சம்பவ சர்ச்சைகளையடுத்து களனி பிரதேச அமைப்பாளர் பதவியை அமைச்சர் மேர்வின் இராஜிநாமா செய்தார். அதேவேளை, களனியைவிட்டு நான் வெளியேறமாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், களனி பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக பொருளாதார, அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-சி)

## மரதன் ஓடிய மாணவி சாவு

மரதன் ஓடிக்கொண்டிருந்த உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவியொருவர் வடிகாலில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சிலாபம் பகுதியிலுள்ள தேசிய பாடசாலையொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின்போது மயங்கி விழுந்த கௌசல்யா பவித்ராணி (வயது-18) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியின்போது நேற்றுமுன்தினம் காலை 9.45 அளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இல்லங்களுக்கு இடையிலான மரதன் ஓட்டத்தில் குறித்த மாணவி பங்குபற்றியிருந்தபோது வடிகாலில் மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து அவர் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவி குறித்த பாடசாலையில் உயர்தர கலைப் பிரிவில் கல்வி கற்றுள்ளார். பிரேத பரிசோதனைகளுக்காக சிலாபம் வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டிருந்தது. அத்துடன், சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-சி)

## இலங்கை இலக்கியப் பேரவையால் நூல்களுக்கான விருது வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.2

இலங்கை இலக்கியப் பேரவை வருடா வருடம் சிறுகதை, நாவல், காவியம், கவிதை, சிறுவர் இலக்கியம், ஆய்வு, சமயம், பல்துறை, நாடகம், அறிவியல், மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) ஆகிய துறை சார்ந்த இலக்கிய நூல்களுக்கு தெரிவின் மூலம் விருது வழங்கி வருகின்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டு வெளிவந்த இத்துறைகள் சார்ந்த இலக்கிய நூல்களுக்கு விருதுகள் வழங்கப் படவுள்ளன.

குறிப்பிட்ட ஆண்டில் நூலை வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல 45, நொத்தாரிஸ் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நூல்கள் இலங்கையில் பிரசுரமானதாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## மேலதிக மொழிக் கற்கை நெறிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.2

தேசிய கல்வி நிறுவனத்தின் செயற் பாட்டில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் மேலதிக மொழிகள் கற்கை அபிவிருத் திக்கான புதிய வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளில் இணைந்து கௌ்ளும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பித்த ஆசிரியர்கள் கல்வித் திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள் குறித்த திகதியில் சமுகமளித்து தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ். நிலைய இணைப்பாளர் கலாநிதி எஸ்.என். தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

இதுவரை விண்ணப்பிக்காதிருந்த தகுதியானவர்கள் அன்றைய தினம் விண்ணப்பத்தை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள்

## அறுவடையான நெல்லை உரிய விலையில் விற்கமுடியாமல் திணறல்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அறுவடை செய்யும் நெல்லை உரிய விலையில் சந்தைப்படுத்த முடியாத நிலையில் தாம் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேசங்களில் தற்போது காலபோக நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் அறுவடை செய்யும் நெல்லை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் அறுவடை செய்யும் நெல்லைக் களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய வசதிகள் இல்லாததால் அதனை உடனடியாகவே விற்பனை செய்ய வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. தற்போது 75 கிலோ நிறையுடைய ஒரு மூடை நெல் அதன் தரத்தைப் பொறுத்து ஆயிரத்து 500 ரூபா முதல் ஆயிரத்து 700 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுகின்றது. இவ்வாறு குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்வதால் விவசாயிகள் என்றுமில்லாதவாறு நட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளனர்.

**விவசாயிகள் உரிய முறையில் நெல்லை சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

எனவே இந்த மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை விவசாயிகள் உரிய முறையில் சந்தைப்படுத்தக் கூடிய வகையில் நெல் சந்தைப்படுத்தும் சபையோ அல்லது பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களோ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# வவுனியாவில் 'றெட்லேடி' பப்பாசி உற்பத்திக்கு 3 மில்லியன் ரூபா நிதி

## ஐ.எல்.ஓ. நிறுவனத்தால் ஒதுக்கீடு

நெளுக்குளம், பெப்.2

வவுனியாவில் 'றெட்லேடி' இன பப்பாசி உற்பத்திக்கென ஐ.எல்.ஓ. நிறுவனம் சுமார் 3 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

வவுனியா விவசாய திணைக்களத்தினர் ஐ.எல்.ஓ.நிறுவனத்தினரின் உதவியுடன் பப்பாசி பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 200 பேருக்கு பப்பாசிக் கன்றுகளை வழங்கியுள்ளனர்.

வவுனியா விவசாய திணைக்களத்தினர் ''றெட்லேடி'' என்ற இனத்தைச் சேர்ந்த பப்பாசிக் கன்றுகளை ஒருவருக்கு 170 கன்றுகள் வீதம் 200 பேருக்கு வழங்கியுள்ளனர். பப்பாசி பழச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக வவுனியா விவசாய திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.சகிலாபானுவின் தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விவசாய திணைக்களத்தின் இணைப்பாளரான கி.சர்மிலாவின் செயற்றிட்ட முகாமையில் 50 ஏக்கர் நிலப் பரப்பில் பப்பாசிப் பழச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பப்பாசிச் செய்கை தொடர்பான 10 இக்கும் மேற்பட்ட பயிற்சிப் பட்டறைகளும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் பப்பாசிப் பழச் செய்கைக்கென கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

''றெட்லேடி'' பப்பாசி வகை இனத்தைப் பெருக்கும் வகையில் ஐ.எல்.ஓ.நிறுவனம் சுமார் 3 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

மேலும் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும் அனுசரணையை வழங்கி வருகின்றது.



உற்பத்தி செய்யப்படும் பப்பாசிப் பழங்களைக் கொள்வனவு செய்வதற்கு சி.ஆர். என்ற ஏற்றுமதி நிறுவனம் தயாராக உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வவுனியாவில் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட ''றெட்லேடி'' பப்பாசி ஒன்றின் நிறை 4 கிலோ தொடக்கம் 5 கிலோ வரை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

அக்கராயனில் தனிநபர் ஆக்கிரமித்துள்ள

## கமநலசேவை நிலையத்துக்குரிய காணியை மீளப்பெறுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு

கிளிநொச்சி, பெப்.2

தனியார் ஒருவரால் அத்துமீறிப்பிடித்து வைக்கப்பட்டுள்ள கமநல சேவை நிலையத்துக்குரிய காணியை பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநல சேவை நிலையக் காணியில் அத்துமீறிய வகையில் தனியார் ஒருவர் வர்த்தக நிலையம் ஒன்றையும் நடத்தி வருவதால் கமநல சேவை நிலையத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகி உள்ளது. இது தொடர்பாக கடந்த 2011 ஆம் ஆண்டு மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் இது தொடர்பாக நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் கமக்கார அமைப்புகள் குற்றஞ் சாட்டியிருந்தன.

இந்த நிலையில் குறித்த காணி தொடர்பாக நேற்று முன்தினம் பொலிஸாரால் விசாரணைகள் நடைபெற்று ஆவணங்களை பரிசோதனை செய்வதற்கான விசாரணைக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பாக அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து குறித்த காணி விடயத்தில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பால் 11,600 ஏக்கர் நெற் செய்கை அழிந்து நாசம்

கிளிநொச்சி,பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு காரணமாக காலபோகத்தின் போது சுமார் 11 ஆயிரத்து 600 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ள தாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பிற்பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் மழை வெள்ளம் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கைகள் அதிகளவில் அழிவடைந்துள்ளன.


இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கைகளும் பகுதியளவில் அழிவடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன் ''காலபோக நெற்செய்கையின் போது 11 ஆயிரத்து 600 ஏக்கர் வரையான நெற் பயிர்கள் அழிவடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக பயிர்ச் செய்கைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந்த வருடத்தின் முதலாவது கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(க-6)



முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளத்தின் முதற்கட்டப் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-6)

## றிஸானா நபீக்கின் மறைவுக்கு மன்னார் நகரசபையில் அனுதாபம்

மன்னார், பெப்.2

சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணிபுரிந்த வேளை குழந்தை ஒன்றைக் கொன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்ட றிஸானா நபீக்கிற்கு மன்னார் நகரசபையில் அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மன்னார் நகர சபையின் பொதுக்கூட்டம் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் எஸ்.ரெட்ணசிங்கம் குமரேஸ் சவூதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்ட றிஸானா நபீக் மீதான அனுதாப பிரேரணையை முன்வைத்தார்.

இதனை சபை அமர்வில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதையடுத்து இந்த அனுதாபப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை குறித்த கூட்டத்தில் மன்னார் நகர சபையின் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல், பொது மயானங்கள், சேமக்காலை, முஸ்லிம் மையவாடிகள் போன்றவற்றைப் புனரமைப்புச் செய்து அவற்றைத் தொடர்ச்சியாக பராமரிப்பது தொடர்பில் உறுப்பினர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

மேலும் மன்னார் நகர சபைக்குரிய எல்லைகளை உரிய முறையில் நிர்ணயித்தல் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மன்னார் நகர சபைச் செயலாளர் திருமதி குரூஸ்,நகர சபை உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், உறுப்பினர்களான ரெட்ணசிங்கம் குமரேஸ், நிலாம்தீன் நகுசீன், எஸ்.பிருந்தாவனநாதன், மெரினஸ் பெரேரா மற்றும் நகர சபையின் முகாமைத்துவ உதவியாளர் செல்வி ஜீ.அன்டனிட்டா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-12)

சர்வோதயத்தின் ஏற்பாட்டில்

## கிளிநொச்சி இளைஞர், யுவதிகளுக்கு தொழில் செய்ய உபகரணங்கள்

கிளிநொச்சி,பெப்.2

கிளிநொச்சி சர்வோதயத்தினால் நடத்தப்பட்ட தொழில் பயிற்சிக்கான சான்றிதழ்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

யுனிசெப் மற்றும் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட சர்வோதயத்தினால் அழகுக்கலை, மோட்டார் சைக்கிள் திருத்துதல், வீட்டுமின் இணைப்பு ஆகியவற்றுக்கான பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன. இவற்றை நிறைவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நூறு பேர் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும், தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றன.

சர்வோதயத்தின் மாவட்ட இணைப்பாளர் மி.டில்லிமலர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், உலக கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனப் பிரதிநிதிகள், யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர். பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட இளைஞர், யுவதிகள் பலரும் இந்த நிகழ்வில் பங்கு பற்றினர். (க-6)

## மணியந்தோட்ட வீதிகளுக்கு மேலதிகமாக வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், பெப்.2

கொழும்புத்துறை, மணியம்தோட்ட வீதிகளுக்கு மேலதிகமாக வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்று நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திரதாஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

குறித்த பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் தேவை கருதி வீதிகளுக்கு ஏற்கனவே வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. எனினும் அவை பொருத்தப்படாத வீதிகளுக்கு தற்போது வீதி விளக்குகள் மேலதிகமாக அமைக்கப்படவுள்ளன.

இதற்கென வீதி விளக்குகள் பொருத்தப்படும் இடங்களை தெரிவு செய்யும் பணிகள் தற்போது இடம் பெற்றுள்ளன.

அடுத்து வரும் தினங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்படும்.

ஏற்கனவே குறித்த பகுதியில் இருள் சூழ்ந்த வீதிகளுக்கு வீதி விளக்குகளை பொருத்தித் தருமாறு மக்கள் கோரியிருந்தனர்.- என்றார். (வ-17)

## சட்டவிரோதமான மின்பாவனையைக் குறைக்க இலங்கை மின்சார சபை விசேட நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனைக் குறைப்பதற்காக கொழும்பிலிருக்கும் மின்சார சபையின் விசேட குழு யாழ்.மாவட்டத்திலே தொடர்ச்சியாக தங்கி சேவையை மேற்கொள்ளவுள்ளதாக சுன்னாகம் மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் தெரிவித்தார்.

அது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல தடவை சட்டவிரோதமாக மின்சாரம் பெறும் மின் பாவனையாளருக்கு எச்சரிக்கப்பட்டும் கைது செய்து குற்றப் பணம் அறவிடப்பட்டும் கூட குறித்த பாவனையாளர்கள் தொடர்ந்தும் சட்டவிரோத நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

சிலர் மின்மானியில் மோசடி செய்கிறார்கள். வேறுசிலர் வீடுகள், கடைகள் ஆகியவற்றுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டும் சட்டவிரோதமாக மின்கம்பங்களிலிருந்து மின்சாரம் பெறுகின்றனர். அத்துடன் மின் இணைப்பு வழங்கப்படாத வீடுகளுக்கும் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்படுகிறது.

மாதாந்தம் மின் கட்டணம் செலுத்த தவறிய வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையிலும் சட்டவிரோதமாக மின்சாரம்பெறப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கை தொடர்பாக யாழ். மின்சார சபையினரும், கொழும்பு மின்சார சபை விசேட குழுவினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கை யினாலேயே சட்டவிரோத மின்பாவனையாளர்கள் பிடிபடு கின்றனர்.

அதனைக் குறைப்பதற்காக கொழும்பிலிருக்கும் மின்சார சபையின் விசேட குழு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சேவை மேற்கொள்ளவுள்ளது என்று மேலும் அவர் தெரிவித்தார். (வ-13)

## இந்தமாதம் முதல் வாரத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ரூ.500 பரிசு

### மக்கள் வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், பெப்.2

இந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு 500 ரூபா பெறுமதியான இசுரு உதான பரிசுப் பத்திரம் வழங்கும் திட்டத்தை மக்கள் வங்கி ஆரம்பித்துள்ளது.

மக்கள் வங்கியால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக இந்த வருடம் குழந்தைகளுக்காக விசேட பரிசுத் திட்டமாக இவ்வாறு பிறக்கும் குழந்தைகளுக்கு 500 ரூபா பெறுமதியான பரிசுப் பத்திரத்தை வழங்கவுள்ளது.

**நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வரும் மேற்படி செயற்றிட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.**

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வரும் மேற்படி செயற்றிட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு பின்னரில் இருந்து எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நள்ளிரவு 12 மணி வரை பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் இந்தப் பரிசு வழங்கப்படவுள்ளது.(வ-14)

# பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துக

## பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

பாடசாலை செல்லும் மாணவர்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகள் பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

**குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம், குற்றச் செயல்களை அடுத்தே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம், குற்றச் செயல்களை அடுத்தே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரை அண்மித்த பிரபல ஆரம்ப பாடசாலை ஒன்றில் மாணவி மீது பாடசாலை சிற்றூழியரால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகத்தைத் தொடர்ந்து அவசர அவசரமாக பாடசாலைகள் மட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

யாழ்.நகரை அண்டிய மற்றும் குடாநாட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களைப் பெற்றோர்கள் உரிய முறையில் பாதுகாப்பாகப் பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதன்போது மாணவர்களை பாடசாலைக்கு மிகவும் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படுவது பெற்றோர்களின் கடமை. பாடசாலை முடிவடைந்ததும் உடனடியாக மாணவர்களைக் கூட்டிச் செல்ல வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கற்றல் நடவடிக்கையின் பின் மாணவர்கள் தேவையற்ற விதத்தில் வீதியில் நிற்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மாணவிகள் தங்க ஆபரணத்திற்குப் பதிலாக 'கவரிங்' ஆபரணங்களை அணிய வேண்டும் என்றும் சில பாடசாலைகளில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (வ-17)

## மவுன்காமல் வீதிசேதம் பயணிப்போர் விசனம்

குருநகர், பெப்.2

குருநகர் மவுன்காமல் வீதி பல இடங்களில் பள்ளமாகக் காணப்படுகிறது. குருநகர் பாங்ஷால் வீதிக்கும் யாழ்.பிரதான வீதிக்கும் இடையேயுள்ள அந்த வீதியின் ஒரு பகுதியில் குழிகள் ஆழமாகக் காணப்படுவதால் மேற்படி வீதியூடாக வாகனங்களில் பயணிப்போர் இந்தக் குழிகளில் விழுந்து எழுந்து சிரமத்தின் மத்தியில் பயணம் செய்வதாக தெரிவித்தனர்.

எனவே மேற்படி வீதியை திருத்தியமைக்க அல்லது குழிகளைத் தற்காலிகமாகவாவது நிரவ யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-51)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்தவருடம் 29 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

குருநகர், பெப்.2

கைதடி அரசினர் சித்த போதனா வைத்தியசாலை (ஆயுள்வேத வைத்தியசாலை)யில் கடந்த வருடத்தில் வெளிநோயாளர் பிரிவில் 29 ஆயிரத்து 712 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என மேற்படி வைத்தியசாலையின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை குறித்த வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவுகளில் 5 ஆயிரத்து 116 நோயாளர்களும் உள்ளக மருத்துவப் பிரிவில் 881 நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர் என இந்த வைத்தியசாலையின் புள்ளி விவரங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-51)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்களில் பாதுகாப்பு வியாபார நடவடிக்கையில் அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்த கிளை முகாமையாளர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் பணி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கிளை முகாமையாளர் ஒருவருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குகிறார். (வ-17)

## வெள்ளம் காரணமாக நிறுத்தப்பட்ட பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்குக

### கச்சாய்ப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, பெப்.2

மழை வெள்ளம் வீதிகளில் தேங்கி நின்றதால் நிறுத்தப்பட்ட இ.போ.ச மற்றும் சிற்றூர்திச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்குமாறு கச்சாய்ப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையினரால் தினமும் காலையிலும் பிற்பகலிலும் கச்சாய் கடற்கரையிலிருந்து பருத்தித்துறை வரை நடத்திய சேவையும்-

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினரால் கொடிகாமத்திலிருந்து கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு நடத்திய சேவையும்- மழை வெள்ளம் வீதிகளில் தேங்கியிருந்ததால் நிறுத்தப்பட்டன.

குறித்த பகுதியைச் சேர்ந்த மக்கள் பயணிகள் வாகன சேவை நிறுத்தப்பட்டதால் தமது பயணங்களை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே நிறுத்தப்பட்டுள்ள சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரியுள்ளனர்.

கச்சாய்ப் பகுதியிலிருந்து பருத்தித்துறை- யாழ்ப்பாணம்- சாவகச்சேரி-கொடிகாமம் போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகள், சந்தைகள் ஆகியவற்றுக்கு செல்வதற்கு மேற்படி சேவைகள் பெரிதும் பயனுள்ளதாக அமைந்தன. தற்போது சேவைகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் . (வ-9)

## குடாநாட்டிலிருந்து தென்பகுதிக்கான வாழைக்குலை ஏற்றுமதி அதிகரிப்பு

### அங்கிருந்து வியாபாரிகள் இங்கு படையெடுப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்கான வாழைக்குலை ஏற்றுமதி தற்போது அதிகரித்துள்ளது.

குறிப்பாக வலி.கிழக்கு வாழைத் தோட்டங்களுக்குதினமும் வருகை தரும் வாழைக் குலை வியாபாரிகள் அவற்றைக் கொள்வனவு செய்து கொண்டு செல்வதில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

இதனை அடுத்து குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக தெற்கில் அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் காற்றால் வாழைச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதனால் அங்கே வாழைப்பழத்திற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக தெற்கில் இருந்து வியாபாரிகள் யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்து வந்து குடாநாட்டிலுள்ள வாழைத்தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று வாழைக்குலைகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதேவேளை நீர்வேலியிலுள்ள வாழைக்குலை விற்பனைச் சந்தையில் தற்போது வாழைக்குலைகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

காலையில் இந்தச் சந்தைக்கு வரும் வாழைக் குலைகள் உடனடியாகவே விற்பனை செய்யப்பட்டு விடுகின்றன. (வ-17)

## துரையப்பா அரங்குக்கு அருகிலுள்ள கண்டி வீதியை புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகாகச் செல்லும் கண்டி வீதி சேதமடைந்துள்ளதால் மேற்படி வீதியூடாக பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


கோட்டையின் முகப்பு வாயில் வரையான குறித்த வீதி ஏ-9 பிரதான வீதிக்குள் அடங்குகின்றது. ஏ-9 பிரதான வீதியின் புனரமைப்பு அகலிப்பு பணிகள் தந்தை செல்வ நாயகம் நினைவுத் தூபி வரையான வீதியுடன் தற்போது நிறைவு பெற்றுள்ளன.

இந்த நிலையில் புனரமைப்புச் செய்யப்படாமல் இருக்கும் கண்டி வீதியின் ஒரு பகுதி புனரமைப்பு இன்றிச் சேதப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. மேற்படி வீதியூடாகப் போக்குவரத்தும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதனைவிட கோட்டையை பார்வையிடச் செல்லும் பெரும்பாலான மக்கள் இந்த வீதியே அதிகளவில் பயன்படுத்தியும் வருகின்றனர்.

எனவே தற்போது போக்குவரத்துக்குச் சிரமமாகக் காணப்படும் குறித்த வீதியை விரைவாகப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

## காந்தியின் சர்ச்சைக்குரிய கடிதங்கள் மக்கள் பார்வைக்கு



மகாத்மா காந்தி, தனது யூத நண்பர் காலென்பாக் குக்கு எழுதிய சர்ச்சைக்குரிய கடிதங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த காலென்பாக்குக்கு காந்தி எழுதிய கடிதங்கள், சோத்பி நிறுவனத்தால் ஏலம் விடப்பட்டது.

6.8 கோடிக்கு ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்த இந்திய அரசு, அவற்றை தேசிய ஆவணக்காப்பகத்திடம் ஒப்படைத்தது.

ஜோசப் லெலிவெல்ட் என்பவர் 2010ஆம் ஆண்டு காந்தியின் முற்காலம் என்ற பெயரில் புத்தகம் எழுதினார். அதில், காலென்பாக்குக்கு காந்தி எழுதிய கடிதங்களின் பகுதிகளைக் குறிப்பிட்டு, இருவருக்கும் இடையே முறைகேடான உறவு இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

புத்தகத்தின் ஆசிரியர் ஜோசப், 'காந்தி ஓரினச் சேர்க்கையாளர் எனக் குறிப்பிடவில்லை' என்று கூறினார். இருப்பினும் குஜராத் அரசு அந்தப் புத்தகத்துக்கு தடை விதித்தது.

அந்தக்கடிதங்கள் தற்போது தேசிய ஆவணக் காப்பக அருங்காட்சியக கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சியை மத்திய கலாசாரத்துறை அமைச்சர் சந்திரேஷ் குமாரி கடோச் ஆரம்பித்து வைத்தார். எதிர்வரும் 15ஆம் திகதி வரை கண்காட்சி நடைபெறவுள்ளது. (வ)



புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட கயானா நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ராமோதரை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துக் கலந்துரையாடுகிறார்.

## 'லோக்பால்' பிரேரணைக்கு அமைச்சரவை ஒப்புதல்

லோக்பால்' பிரேரணைக்கு மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்தது.

எனினும் லோக்பால் அதிகார வரம்புக்குள், சி.பி.ஐ., அமைப்பை கொண்டு வர முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில், மத்திய அமைச்சரவை கூட்டம், டில்லியில் நேற்று முன்தினம் கூடியது. அதில், லோக்பால் பிரேரணையை எதிர்வரும் பட்ஜெட் கூட்டத்தில், நாடாளுமன்றில் நிறைவேற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மத்திய அரசின் ஊழல்களை விசாரிப்பதற்காக ஏறபடுத்தப்படும் லோக்பால் அமைப்பும் மாநில அரசின் ஊழல்களை விசாரிப்பதற்காக லோக் ஆயுகதா அமைப்பும் தனித்தனியாக இயங்கும் என்று கூறப்பட்டது. (வ)

# பாகிஸ்தான் தாக்கினால் பதிலடி கொடுக்கத் தயார்

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

டில்லி, பெப்.2

பாகிஸ்தான் தரப்பில் எல்லையில் தாக்குதல் தொடுக்கப்பட்டால் அதற்குப் பதிலடி கொடுக்க எமது இராணுவம் தயார் நிலையில் உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.

இதேவேளை கடந்த காலங்களில் பாகிஸ்தான் வீரர்களின் தலையை இந்திய இராணுவம் துண்டித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

கடந்த மாதம் 8ஆம் திகதி ஜம்மு காஷ்மீர் மாநிலம் மெந்தர் பகுதியில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் எல்லை தாண்டி வந்த பாகிஸ்தான் இராணுவத் தினர், 2 இந்திய வீரர்களைக் கொன்றனர். அதில் ஒருவரது தலையைத் துண்டித்து எடுத்துச் சென்றனர். இதனால் இருநாடுகளுக்கிடையே பதற்றம் ஏற்பட்டது.



இந்தநிலையில், கடந்த கடந்த ஆண்டுகளில் தங்கள் நாட்டு இராணுவ வீரர்களின் தலையை இந்திய இராணுவம் துண்டித்ததாக இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கான ஐ.நா. இராணுவ கண்காணிப்புக் குழுவிடம் பாகிஸ்தான் முறைப்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து டில்லியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அந்தோனி கூறியதாவது:

பாகிஸ்தான் இராணுவ வீரர்களின் தலையை இந்திய இராணுவம் துண்டித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது. இரு நாடுகளின் இராணுவ இயக்குநர்கள் நிலையிலான பேச்சுக்குப் பின்னர் ஜம்மு காஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பதற்றம் தணிந்துள்ளது.

எனினும், அந்தப்பகுதியில் 24 மணிநேரமும் கண்காணிப்பு தேவைப்படுகிறது. எனவே, பாதுகாப்புப் படை குறைக்கப்பட மாட்டாது. பாகிஸ்தான் தரப்பில் தாக்குதல் தொடுக்கப் பட்டால் அதை முறியடிப்பதற்கு அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டி உள்ளது.

பொறுத்திருந்து பாருங்கள், தாக்குதல் நடைபெற்றால் உடனடியாகப் பதில் தாக்குதல் நடத்துங்கள் என்று வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுதான் எம்முடைய அணுகுமுறை - என்றார். (வ)

### கும்பமேளாவில் பங்கேற்கக் கூடாது

## பொலிவூட் நடிகர்களுக்கு உத்தரப் பிரதேச அரசு தடை

அலகாபாத், பெப்.2

உத்தரப் பிரதேசத்தில் நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்வில் பொலிவூட் நட்சத்திரங்கள் பங்கேற்கக் கூடாது என்று உத்தரப் பிரதேச அரசு தடை விதித்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் அலகாபாத் நகர் திரிவேணி சங்கமத்தில், மகா கும்பமேளா புனித நீராடல் மற்றும் பூசை நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

அந்நிகழ்ச்சிகளில் தினமும் இலட்சக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீராடி வருகின்றனர்.

இந்தநிலையில் அலகாபாத் கோட்ட ஆணையரும் கும்பமேளா ஏற்பாட்டுக் குழுத்தலைவருமானதுவேஷ் சதுர்வேதி கருத்துத் தெரிவிக்கையில்-

கும்பமேளா நிகழ்வில் பங்கேற்கும் பக்தர்கள் நெரிசலில் சிக்கக் கூடாது என்பதற்காக, பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெற உள்ள பிரதான நிகழ்ச்சியில் பொலிவூட் பட உலகின் சில நடிகர்களும், இயக்குநர்களும் வர இருப்பதாக அறிந்தோம்.

அவர்களது படத்தின் சில காட்சிகளை படம் பிடிப்பதற்கும், படங்களை விளம்பரப்படுத்துவதற்கும், முயற்சிகள் மேற் கொள்ளப் படுவதை அறியமுடிகிறது. அவ்வாறு நடந்தால் அவர்களைப் பார்க்க ஏராளமானோர் திரள்வார்கள். இதனால் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படலாம்.

எனவே பொலிவூட் நட்சத்திரங்கள் கும்பமேளா நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டாம் என்று அறிவுறுத் தப் பட்டுள்ளனர்-என்றார். (வ)

## பீரங்கிக்கு மாற்றாக உருவாக்கப்பட்ட 'பினாகா' லோஞ்சர் சோதனை வெற்றி

பாலசூர், பெப்.2

இராணுவத்தில் பீரங்கிக்கு மாற்றாக பயன்படுத்த உருவாக்கப்பட்ட பினாகா லோஞ்சர் சோதனை வெற்றி அளித் துள்ளது.

குறித்த லோஞ்சர் மூலம் 44 நொடிகளுக்குள் 12 ரொக்கெட் குண்டுகளை ஏவ முடியும். 40 கி.மீ. தூரம் சென்று தாக்கும் இந்த ரொக்கெட் குண்டுகள் 3.9 சதுர கி.மீ. இடத்தில் உள்ள கட்டடங்கள் மற்றும் பதுங்கு குழிகளை அழிக்கும் சக்தி பெற்றவை.

இராணுவத்தில் ஏற்கனவே சேர்க்கப்பட்ட பினாகா ரொக்கெட் லோஞ்சர், கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது சோதித்து பார்க்கப்படுகிறது.



இந்தநிலையில் பினாகா ரொக்கெட் லோஞ்சரை மீண்டும் சோதித்துப் பார்க்க இராணுவ ஆராய்ச்சி மைய அதிகாரிகள் முடிவு செய்தனர்.

அந்த சோதனை ஒரிசா மாநிலம் சண்டிப்பூர் கடற்கரையில் அமைந்துள்ள இராணுவ சோதனை மையத்தில் கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற சோதனையில் 4 ரொக்கெட் குண்டுகள் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டன. நேற்று முன்தினம் நடைபெற்ற சோதனையில் 3 குண்டுகள் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டன. (வ)

### புதிய தலைமைச் செயலகம் குறித்த

## தமிழக அரசுக்கு எதிரான மனுவை; நிராகரித்தது உச்ச நீதிமன்றம்

டில்லி, பெப்.2

தமிழக அரசுசட்டசபையை புதிய தலைமைச் செயலக கட்டடத்தில் இருந்து பழைய செயின்ட் ஜோர்ஜ் கோட்டைக்கே மாற்றியதற்கு எதிரான மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்தது.

தி.மு.கவின் கடந்த ஆட்சியில் அண்ணா சாலையில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதும் அந்த கட்டடத்தை பல்நோக்கு மருத்துவமனையாக மாற்ற முடிவு செய் தது. சட்டப்பேரவையும், புதிய தலைமைச் செயலகமும் மீண்டும் செயின்ட் ஜோர்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டது. அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தொடரப் பட்ட வழக்கு நிராகரிக்கப் பட்டது.

அதைத் தொடர்ந்து தமிழக அரசின் முடிவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த மனு நேற்று தலைமை நீதிபதி கபீர் தலைமையிலான குழு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், புதிய தலைமைச் செயலகத்தை மருத்துமனையாக மாற்றிய தமிழக அரசுக்கு எதிரான மனுவை நிராகரிப்புச் செய்து உத்தரவிட்டனர். (வ)

## சிவகாசி பட்டாசு ஆலையில் மீண்டும் விபத்து: 3 பேர் படுகாயம்

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 3 பேர் படுகாயமடைந்தனர்.


விருதுநகர் மாவட்டம், சிவகாசியை அடுத்த முத்துலிங்காபுரத்தில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 3 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக் குறித்து ஆமத்தூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

இதேவேளை கடந்த வருடம் சிவகாசியில் ஏற்பட்ட வெடி விபத்தில் 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது

# எகிப்து நெருக்கடிகளுக்கு தீர்வு காண இணக்கப்பாடு

## ஒன்றிணைந்தன எதிர்க்கட்சிகள்



கெய்ரோ, பெப்.2

எகிப்தில் நிலவும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண அனைத்து எதிர்க் கட்சிகளும் இணைந்து செயற்படச் சம்மதித்துள்ளன.

எகிப்தில் முக்கிய மத பீடமான, அல் அஸார் மசூதியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

பிரதான எதிர்க்கட்சியான முற்போக்குக் கட்சித் தலைவர்கள், இஸ்லாமியத் தலைவர்கள், இளைஞர் அமைப்பினர், சுயேச்சை உறுப்பினர்கள், தேவாலய உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு இடையே பேச்சுகள் நடைபெற்றன.

அதில், எகிப்தில் நிலவும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண உறுதி பூணப்பட்டது. அல்-அஸார் எனப்படும் ஆவணம் வடிவமைக்கப்பட்டு அதில் அனைவரும் கையொப்பமிட்டனர்.

பேச்சுகள் தொடர்பான விவரங்கள், அனைத்து விதமான வன்முறைகளையும் கண்டித்தல், நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்புக்கான அரசின் பொறுப்புடமை உள்ளிட்டவை அதில் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# ‘நியூயோர்க் டைம்ஸின்’ கணினிகள் செயலிழந்தன

## சீன ‘ஹேக்கர்’கள் கைவரிசை

நியூயோர்க், பெப்.2

அமெரிக்காவின் புகழ்பெற்ற பத்திரிகையான நியூயோர்க் டைம்ஸ் தனது அலுவலகக் கணினிகள் பல, சீன ‘ஹேக்கர்’களின் தாக்குதல்களால் செயலிழந்துள்ளன என்று தெரிவித்துள்ளது.

சீனாவைச் சேர்ந்த கணினி வல்லுநர்கள், நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை அலுவலகத்தில் பணி புரியும் உயர் மட்ட செய்தியாளர்களின் மற்றும் உறுப்பினர்களின் ரகசியக் கணக்குகளின் கடவுச்சொற்களைத் திருடியும் நீக்கியும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதுகுறித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுகையில்-

கடந்த 4 மாதங்களாக இந்த சைபர் தாக்குதல்கள் நிகழ்ந்து வருகின்றன. சீனப் பிரதமர் வென் ஜியாபாவோவின் உறவினர்கள் மீது நியூயோர்க் டைம்ஸ் சில விசாரணைகளை மேற்கொண்டது. அதன்பின்னரே இந்தத் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன. வென் ஜியாபாவோவின் குடும்ப உறுப்பினர்களின் பில்லியன் டொலர் பெறுமதியான வருமானம் எப்படிப் பெறப்பட்டது என்ற கோணத்திலேயே விவரங்கள் சேகரிக்கப்பட்டன் என்று தெரிவித்துள்ளது.



The New York Times
U.S. ATTACKED
ACKED JETS DESTROY TWIN TOW
ND HIT PENTAGON IN DAY OF TE
President Vows Punishment

இதேவேளை தமது கணினிகளைத் தாக்கியவர்கள் குறித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை புலனாய்வு செய்தது. அதன் மூலம் கிடைக்கப் பெற்ற டிஜிட்டல் ஆதாரத்தில் சீன இராணுவத்தில் உள்ள நிபுணர்களின் வழிமுறைகளைக் கையாண்டு கணினி வலையமைப்பில் தாக்குதல்' மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சின் பேச்சாளர் கூறுகையில்,

சீன நாட்டில் இருந்து தான் டைம்ஸின் கணினிகள் தாக்கப்பட்டன என்பதை நிரூபிப்பது கடினம். சீன இராணுவம் இதுவரை எந்தவொரு ‘ஹேக்கிங்’ நடவடிக்கைக்கும் ஆதரவளித்ததில்லை-என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிரியாவின் மீது இஸ்ரேல் குண்டு வீச்சுத் தாக்குதல்

## நிர்மூலமானது இராணுவ ஆராய்ச்சி நிலையம்; பதில் தாக்குதல் விரைவில் என்று எச்சரிக்கை

டமஸ்கஸ், பெப்.2

இஸ்ரேலியப் போர் விமானங்கள் சிரியா மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளன. தாக்குதல் இடம்பெற்றதை சிரிய இராணுவமும் உறுதி செய்துள்ளது. இந்தத் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

சிரியத் தலைநகர் டமஸ்கஸ்ஸில் இருந்து வடகிழக்கில் அமைந்துள்ள இராணுவ ஆராய்ச்சி நிலையத்தை இலக்கு வைத்தே தாக்குதல் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரிய இராணுவம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் இராணுவ ஆராய்ச்சி நிலையம் தரைமட்டமானது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவின் ஆயுதங்கள் லெபனானில் இயங்கும் தீவிரவாதக் குழுக்களின் கைகளில் சிக்குவதைத் தடுக்கவே இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. எனினும் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து இஸ்ரேல் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகிறது. எனினும் இந்தத் தாக்குதலுக்கு எதிர்பாராத நேரத்தில் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று சிரியா, ஈரான் ஆகிய நாடுகள் எச்சரித்துள்ளன.

இஸ்ரேலின் இந்தத் திடீர்த் தாக்குதல் தாம் எதிர்பார்க்காத ஒன்று என்று சிரியப் புரட்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சிரியா மீதான இஸ்ரேலின் விமானத் தாக்குதலை அனுமதிக்க முடியாது என ரஷ்ய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அண்மையில் இஸ்ரேல் தனது ஏவுகணை எதிர்ப்பு கவச வாகனங்களை லெபனானின் வடக்கே நகர்த்தியிருந்தது. மேலும் சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் லெபனானுக்கும் பரவக் கூடும் என இஸ்ரேல் அதி கூடிய கவனத்துடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)



இஸ்லாமிய தீவிரவாதிகளிடம் இருந்து திம்புக்டு நகரைக் கைப்பற்றிய பிரான்ஸ் தலைமையிலான படைகள் [illegible]ன. அதைத் தொடர்ந்து அதுவரை வீடுகளுக்குள் முடங்கியிருந்த மக்கள் தற்போது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வருகின்றனர்.

# ஆள்கடத்தலுடன் தொடர்புடைய 103 பேர் ஐரோப்பாவில் கைது

## சுமார் 10 நாடுகளில் அதிரடி நடவடிக்கை

நியூயோர்க், பெப்.2

ஆள்கடத்தல்களுடன் தொடர்புடைய 103 முக்கிய குற்றவாளிகள் சர்வதேசப் பொலிஸரால் ஐரோப்பாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் 10 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த குற்றவாளிகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நாடுகளுக்கிடையே சட்டவிரோதமாக ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கைது நடவடிக்கையில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 200 பொலிஸ் அதிகாரிகள் வெவ்வேறு இடங்களில் ஈடுபட்டனர்.

**மனித ஆள் கடத்தல் உலகளாவிய ரீதியில் அதிக வருமானம் ஈட்டும் வியாபாரமாக நடைபெற்று வருகின்றது.**

இந்த அதிரடி நடவடிக்கை ஐரோப்பாவின் குரோஷியா, செக் குடியரசு, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், ஹங்கேரி, போலந்து, ஸ்லோவக் குடியரசு, துருக்கி மற்றும் கொசோவோ ஆகிய நாடுகளில் கடந்த செவ்வாய்க்கிழமை திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றவாளிகளைக் கைது செய்யும்போது 1,76,500 யூரோவும்,வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

மனித ஆள் கடத்தல் திட்டங்கள் யாவும் உலகளாவிய ரீதியில் அதிக வருமானம் ஈட்டும் வியாபாரமாக நடைபெற்று வருவதான ஐ.நாவின் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கான தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# குரங்குப் படையின் தாக்குதலில் 7 பேர் படுகாயம்

## இந்தோனேஷியாவில் சம்பவம்


ஜகார்த்தா, பெப்.2

இந்தோனேஷியாவில் உள்ள கிராமம் ஒன்றுக்குள் குரங்குகள் படையெடுத்துத் தாக்குதல் நடத்தியுள்ளன. அதில் 7 பேர் படுகாயமடைந்தனர்.

திடீரென கிராமத்துக்குள் புகுந்த பெருந்தொகையான குரங்குகள் கிராம மக்களைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கின. அதனால் கிராமம் அல்லோலகல்லோலப்பட்டது. வீடுகளுக்குள் புகுந்த குரங்குகள் பொருள்களை எல்லாம் சூறையாடின. குரங்குகளின் தாக்குதலில் 7 பேர் படுகாயம் அடைந்தனர். அதில் ஒருவரின் நிலை மிக ஆபத்தானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு குரங்குகள் இவ்வாறு தாக்குதல் நடத்தியமை இதுவே முதல் முறை என்று கிராம மக்கள் தெரிவித்தனர். எதற்காக குரங்குகள் இவ்வாறு தாக்குதல் நடத்துகின்றன என்று தெரியவில்லை. இது ஆச்சரியமாக இருக்கிறது என்று கிராம மக்கள் கூறியுள்ளனர். (ற)

# ஜேர்மனியில் தீ விபத்து: 80 ஒட்டகங்கள் சாவு



பேர்லின், பெப்.2

ஜேர்மனியின் தென் மேற்கேயுள்ள ஓர் ஒட்டகப் பண்ணையில் ஏற்பட்ட தீ விபத்தில் 80 இற்கும் அதிகமான ஒட்டகங்கள் உயிரிழந்துள்ளன.

நூற்று ஐம்பதுக்கும் மேலான தீயணைப்புத் துறையினர் பெரும் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பேடன் வுர்ட்டம்பர்க் மாநிலத்தில் அமைந்துள்ள இந்தப் பண்ணை ஒட்டகச் சவாரிக்கும், அதன் பாலுக்கும் பிரபல்யம் பெற்றது என்று கூறப்படுகிறது. (ற)

# போலியோ மருந்து வழங்கச் சென்றவர்கள் தீவிரவாதிகளின் கண்ணிவெடியில் சிக்கினர்

## உடல் சிதறி இருவர் சாவு; பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத், பெப்.2

போலியோ சொட்டு மருந்து கொடுக்கச் சென்ற இருவர் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத அமைப்புகள் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதை எதிர்த்து வருகின்றன. போலியோ சொட்டு மருந்து கொடுப்பவர்கள் மீது தாக்குதல்களும் மேற்கொள்கின்றன.

இந்த நிலையில் நேற்று, பாகிஸ்தானின் குர்ரம் பகுதியில், சொட்டு மருந்து கொடுக்க சென்றவர்களின் வாகனம், கண்ணிவெடியில் சிக்கியது. அதில் இருவர் உயிரிழந்தனர்.

இவ்வாறான தாக்குதல்களால் உலக சுகாதார நிறுவனம், பாகிஸ்தானில் போலியோ சொட்டு மருந்து விநியோகத்தை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# திபெத் புத்த மதத் துறவிக்கு சீனாவில் மரண தண்டனை

பீஜிங், பெப்.2


சீனாவில் திபெத்தைச் சேர்ந்த புத்த மதத் துறவிக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சீனாவுக்கு எதிராகப் போராட்டம் இடம்பெற்று வரும் திபெத்தில், இளைஞர்களைத் தீக்குளிக்கத் தூண்டியதாக இவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது. வழக்கு விசாரணைகளின் முடிவில் புத்த துறவிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பில்-

முக்கிய குற்றவாளியான புத்த துறவிக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இத்தண்டனை 2 ஆண்டுகள் கழித்து நிறைவேற்றப்படும். சீனாவில் அவருக்கு உள்ள அரசியல் உரிமைகள் அனைத்தும் முழுவதுமாகப் பறிக்கப்படுகின்றன- என்றுள்ளது. (ற)

# மெக்ஸிக்கோவில் வெடிப்புச் சம்பவம்

## 25 பேர் சாவு; 100க்கு மேற்பட்டோர் காயம்



மெக்ஸிக்கோ சிற்றி, பெப்.2

மெக்ஸிக்கோவில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 25 பேர் உயிரிழந்தனர். 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். மெக்ஸிக்கோவின் தேசிய எண்ணெய் நிறுவன தலைமையகத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவம் எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து இன்னமும் கண்டறியப்படவில்லை என்று மெக்ஸிக்கோ பொலிஸார் தெரிவித்தனர்.

மோப்ப நாய்களின் உதவியுடன் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற குறித்த கட்டடம் 54 மாடிகளைக் கொண்டதாகும்.

மீட்புப்பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், உயிரிழந்தவர்களின் அல்லது காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது. (ற)

# பாகிஸ்தானுக்கு உதவும் நோக்குடனேயே குவாதர் துறைமுகம் பொறுப்பேற்கப்பட்டது

## விளக்கமளிக்கிறது சீனா

பீஜிங், பெப்.1

நட்பு நாடான பாகிஸ்தானுக்கு உதவும் பொருட்டே குவாதர் துறைமுகத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக சீனா கூறியுள்ளது.

அரேபியக்கடலில் உள்ள பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை சீனா ஏற்றுள்ளது. தற்போது துறைமுகக் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளில் சீனா ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சீன அரசு சார்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சீனா அரேபிய நாடுகளில் பெற்றோலியப் பொருள்களை வாங்கி இந்தியப் பெருங் கடல் வழியாக எடுத்துச் செல்கிறது. இந்தநிலையில் இனிவரும் காலங்களில் குவாதர் துறைமுகத்தையே சீனா பயன்படுத்தும் என்று கூறப்படுகிறது. (ற)

## போர்க்குற்ற விசாரணையை நிறுத்தக் கோரும்

# போராட்டத்தில் வன்முறைகள்; பங்களாதேஷில் 6 பேர் சாவு

டாக்கா, பெப்.2

பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பொலிஸாருக்கும் ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் ஒரு பொலிஸார் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

1971ஆம் ஆண்டு பங்களாதேஷில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அந்த விசாரணைகளை நிறுத்தக் கோரியும் கடந்த வியாழக்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

அந்த அழைப்புக்கு வங்கதேசத்தின் முக்கிய எதிர்க் கட்சியான வங்கதேச தேசிய கட்சி ஆதரவளித்திருந்தது.

போராட்டத்தின்போது பொலிஸாருக்கும் இஸ்லாமி அமைப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதன் போது பொலிஸார் ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்ததாக பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது கலவரம் ஏற்படுத்திய வர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

போராட்டத்தின்போது கலவரக்காரர்கள் வாகனங்களுக்குத் தீவைத்தனர். அதனையடுத்தே இருதரப்பினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றன என்று கூறப்படுகிறது.

1971ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் தனியாகப் பிரிவதற்கு ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது நடைபெற்ற சுதந்திரப் போரின்போது இஸ்லாமி அமைப்பினர் பாகிஸ்தான் வீரர்களுடன் இணைந்து போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)

## சிக்காகோவில் சூடு 15 வயதுச் சிறுமி சாவு;

சிக்காகோ, பெப்.2

அமெரிக்கா சிக்காகோ நகரில் உள்ள பூங்காவில் மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் 15 வயதுச் சிறுமி உயிரிழந்தார்.

இவர், ஜனாதிபதி ஒபாமாவின் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஹாடி எனும் சிறுமியாவார்.

பூங்காவில் குழுமியிருந்த 12 சிறுவர், சிறுமியர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்து தப்பித்து ஓடியபோது, துப்பாக்கிக் குண்டு ஹாடியின் முதுகில் பாய்ந்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட மர்ம நபர் தப்பிச் சென்று விட்டதாகவும், தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(ற)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு: 021 567 1111

**ஜனா கொம்பியூட்டேர்ஸ்**

"கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு"
கொம்பியூட்டர் - 10,000/= தொடக்கம்
C.R.T. மொனிற்றர் - 1500/=, L.C.D மொனிற்றர் - 4000/=
T.V. - 6000/= மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கணினி திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777508908.
உரும்பிராய், கோப்பாய். (26317) (6.7.2))

**பஸ் விற்பனைக்கு**

முல்லை,கிளிநொச்சி
வழி அனுமதியுடன்
அசோக் லேடன் பஸ்
விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776247657
(29063)(3.6.7)


## இதய அஞ்சலி



**துரைராசா டினோசன்**

28.01.2013 அன்று மறைந்த செய்தியைக் கேட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சித்தப்பா குடும்பம்
(யாழ்.பல்பொருள் வாணிபம்).
(29110)(2.6.7) மருதங்கேணி.

## மரண அறிவித்தல்



**ஐயாத்துரை வீரசிங்கம்**

(இளைப்பாறிய புகையிரத சாரதி)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை, விராங்கொடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை வீரசிங்கம் நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியவில் வவுனியா தரணிக்குளத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வீ.துரைராசசிங்கம் (மகன்)
கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர்.
தரணிக்குளம், வவுனியா. (29069) (6.7.2)) தந்தை செல்வாபுரம் J/230

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
16.08.1918

மறைவு
02.02.2005

அமரர்
**கமலாம்பிகை குமாரசாமி**

அன்று எம்முடன் வாழ்ந்தீர்.
இன்று மறைந்தும் எம் நினைவில்
வாழகின்றீர்
இறைவன் அடியில் வாழ்வீர் நிதம்.

நீங்கா நினைவுடன்
மக்கள், மருமக்கள்., உடன் பிறந்தோர்.பெறாமக்கள்
பேரப்பிள்ளைகள்.பூட்டப்பிள்ளைகள்.
கு.உதய குமார்(மகன்)

பொன்னையா வளவு,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(29101)(6.7.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.10.1920

மறைவு
15.01.2012

தோற்றம்
14.06.1930

மறைவு
13.12.2010

**அமரர் கந்தையா தாமோதரம்பிள்ளை**

நீங்கள் மீளாத்துயில் கொண்டு
ஆண்டொன்று ஆனதோ....!!
பன்னிரண்டு மாதங்கள் பறந்தோடிப் போனாலும்
இன்னும் பக்குவமாய் தான் நிற்கிறது
நீங்கள் தந்த பாசம்
நீங்கள் திசையற்றுச் சென்றாலும்
குஞ்சுகள் நாம் இன்னும் உங்களை
நெஞ்சினிக்க நினைக்கின்றோம்
உங்கள் பேச்சு எங்கள் மூச்சில் கலந்து
ஆண்டொன்று அகல விரிந்தது....!!!
பார்த்திருக்க பன்னிரண்டு மாதங்கள் பறந்தோடிப் போனது....!!
நேற்றுப்போல் இருக்கிறது உங்கள் மறைவு
இத்துயரை ஆற்றுவாரும் இல்லை தேற்றுவாரும் இல்லை - நீங்கள்
மீண்டுவந்தால் மட்டுமே சத்தியமாய் இது சாத்தியமாகும்

**திருமதி தாமோதரம்பிள்ளை சின்னப்பிள்ளை**

குடும்பத்தின் குலவிளக்கே!
அன்பின் உறைவிடமே!
பாசத்தின் நிறைவிடமே!
நிகரற்ற நல்முத்தே!
பண்புடன் எம்மை தாங்கிய தாயே!
சென்றது எங்கே தேடுகிறோம் - நாமே
கண்களில் நீரும் தனிமையில் நாமும்
நாடுகிறோம் தாயே வந்திடுவீரே
உங்களை நாடி வாழ்ந்திடும் போதும்
உங்கள் நினைவுகள் வாட்டிடும் எம்மை
உன் முகம் எங்கள் விழிகளில் தெரிகின்றது
- என்றென்றும் உங்கள் நினைவுடன்:

தையிட்டிப்புலம், வித்தகபுரம், தெல்லிப்பழை. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டி.

(29104)(2.6.7)



இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்ற பிரதி எதிர்க்கட்சித் தலைவர் ஜூலி பிஷோப் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினர்.

## டொல்பின்கள் உயிரிழப்பு விசாரணை நடத்த உத்தரவு

புத்தளம்,பெப்.2

புத்தளம்,கற்பிட்டி கடற்பரப்பில் டொல்பின்கள் உயிரிழந்து வருகின்றமை தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மற்றும் கடற்படையினருக்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன உத்தரவிட்டுள்ளார்.

தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன் படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமை காரணமாகவே டொல்பின்கள் இறந்திருக்கக்கூடும் என்று அவர் கூறினார்.

**மீனவர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்**

இவ்வாறு தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடற்பரப்பில் அதிக எண்ணிக்கையான டொல்பின் மீன்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கட்சி உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் திட்டங்களை முன்னெடுக்கக் கூடாது

**ரணில் வேண்டுகோள்**



கொழும்பு,பெப்.2

கட்சி உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கக்கூடாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் சாந்தினி கொங்காகே ஆகியோர் தனிப்பட்ட ரீதியில் இவ்வாறான உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுகளை வழங்க சஜித் திட்டமிட்டிருந்தார். லக்வனித அமைப்பின் தலைவி சாந்தினி பிரதேச மக்களுக்கு பாய்களை வழங்கத் திட்டமிட்டிருந்தார். எனினும் இந்த இரண்டு திட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும்.

இந்தத் திட்டங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.-என்றார்.(ச)

# தமிழர் பகுதியில் இராணுவ அராஜகம் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைப்பு

## தொடர்ந்தும் அகதிகளாக வன்னி மக்கள்

கொழும்பு,பெப்.2

**தமிழர் பகுதிகளான வடக்கு, கிழக்கில் இன்று ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு இராணுவ அராஜகம் தலைவிரித்தாடுகிறது.**

**வன்னிப்** பிரதேசம் முழுவதுமே இன்று அகதி முகாமாக்கப்பட்டுள்ளது. மக்கள் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் மீண்டும் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக கேப்பாபிலவில் வாழும் மக்கள் மீண்டும் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

**இவ்வாறு ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றம் சாட்டியுள்ளார்.**

**வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு கோரி** சகோதரத்துவத்துக்கான மக்கள் அரண் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று மீள்குடியேற்றம் போலியான நடவடிக்கையாக மாறியிருக்கின்றது. கேப்பாபிலவில் வாழும் மக்கள் மீண்டும் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தைப் பெற்றுத் தருகின்றோம் என்று மூன்று வருடங்களுக்கு முன் போர் நிறைவடைந்தவுடன் சில பெரும்பான்மை இனத் தலைவர்கள் தெரிவித்தனர். ஆனால், இன்று தேடிப்பார்த்தால் வடக்கு, கிழக்கில் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டு இராணுவ அராஜகம் மேலோங்கியுள்ளது.

இந்த இராணுவ அராஜகத்தின் கீழ் மக்கள் பேச முடியாத, கருத்துக்களை வெளியிடமுடியாத நிலை உள்ளது.

**மக்களைப் பிரித்தாளுவது போன்று காணிகளைத் துண்டாடுகிறார்கள்**

வடக்கில் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளை இராணுவத்திற்காக பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் முதல் வன்னிவரையும் மன்னார் உட்பட அனைத்து பிரதேசங்களிலும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்று பிரித்து மக்களை துண்டாடுவதைப் போல் காணிகளையும் துண்டாடி வழங்குகின்ற நிலை தொடர்கிறது.

மறுபுறத்தில் நாட்டை நிர்வகிக்க வேண்டிய நிர்வாகிகள் இருக்கும்போது அமைச்சர்கள் இந்த விடயத்தில் தலையிடுகின்றனர். அதன் காரணமாக இனவாதம் மேலும் தலைதூக்குகிறது.

எனவே, தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும். இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களிடமும் நாம் கேட்பது இந்த அராஜக அடக்கு முறையை மேற்கொள்ளும் இந்த அரசுக்கு எதிராக ஓரணியாகத் திரளவேண்டும் என்பதேயாகும்- என்றார். (ச-சி)

**இலங்கை சட்டக் கல்லூரி**

## அனுமதிப் பரீட்சை வினாத்தாளில் மாற்றம்

இந்த வருடம் தொடக்கம் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை வினாத்தாளில் மாற்றம் கொண்டுவரப்படும் என்று கல்லூரியின் அதிபர் டபிள்யு. ரொட்ரிகோ தெரிவித்தார்.

மொழித்திறன் மற்றும் பொது அறிவு-நுண்ணறிவு என இரண்டு வினாத்தாள்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த இரு பாடங்களிலும் தோற்றி சித்தியடையும் மாணவர்கள் சட்டக் கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவர். மொழித்திறன் பரீட்சை ஆங்கிலத்திலும், பொது அறிவு-நுண்ணறிவு பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியிலும் இடம்பெறும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, புதிய மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சட்டக் கல்லூரிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 309 இல் இருந்து 551 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளி 69 இல் இருந்து 66 வரை குறைக்கப்பட்டுள்ளதையடுத்தே, சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தனியார் மருந்தகத்தில் அனுமதியற்ற மருந்து

கொழும்பு,பெப்.2

**இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படாத நோய் எதிர்ப்பு மருந்தொன்று புத்தளம் நகரிலுள்ள தனியார் மருந்தகத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

**அதுதொடர்பில்** கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த பெரனகம தெரிவித்தார்.

**இந்த** மருந்து எவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டது என்பது தொடர்பில் ஆராயுமாறு சுங்கத் திணைக்களத்துக்கு அதிகாரசபை அறிவித்துள்ளது. (ச)

## இந்த வருட இறுதிக்குள் அனைவருக்கும் மின்சாரம்

**மின்வலு சக்தி அமைச்சர் சொல்கிறார்**



கொழும்பு,பெப்.2

இந்த வருட இறுதிக்குள் அனைவருக்கும் தடங்கலற்ற மின்சார விநியோகம் வழங்குவதே எமது இலக்காகும்.

இவ்வாறு மின்வலு சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தனது பதவியைத் பொறுப்பேற்றுக் கொண்ட பின்பே இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சார சபை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியை மட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மின் உற்பத்திக்கான செலவை குறைத்து அதன் பயனை மக்களுக்கு வழங்க சகலரும் இணைந்து செயற்பட வேண்டும்.

2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டில் அனைவருக்கும் மின்சார வசதி அளிப்பதே எமது பிரதான இலக்காகும்.

மின் உற்பத்திக்கான செலவைக் குறைத்து அதன் பயனை மக்களுக்கு வழங்க சகலரும் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கை போன்ற நாட்டில் தொடர்ச்சியாக மின்சாரம் விநியோகிக்க முடியாவிட்டால் அதனால் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படும்.

மக்களுக்கு தொடர்ச்சியாக மின்சார வசதி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். -என்றார். (ச)

## மாத்தளை முத்துமாரிக்கு இன்று கொடியேற்றம்

கொழும்பு,பெப்.2

மாத்தளை முத்து மாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி தேர் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச)

## மாதம் ஒரு லட்சம் ரூபா சம்பாதிக்கும் பிச்சைக்காரி

**வயிற்றுப் பகுதி கட்டியைக் காட்டி**

கொழும்பு,பெப்.2

பிச்சை எடுப்பதால் மாதமொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதித்து வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கொழும்பு நீர்கொழும்பு ரயிலில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை கைதுசெய்தபோது ஆயிரத்து 800 ரூபா வரை கையில் இருந்துள்ளது.

இது அவர் ஒரு மணித்தியாலத்தில் பிச்சை எடுத்து உழைத்த பணமாகும் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான அவர் களனி விகாரையில் போயா தினமொன்றில் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேல் சம்பாதிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தனது வயிற்றுப் பகுதியிலுள்ள ஒரு கட்டியை காண்பித்து மக்களின் அனுதாபத்தை பெற்று பிச்சை எடுத்து வருவதாக விசாரணைகளின் போது அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டியை சிகிச்சையின் மூலம் அகற்றியிருக்கலாம் தானே என்று பொலிஸார் கேட்ட போது, "இந்தக் கட்டியை காண்பித்து பிச்சை எடுப்பதனால் தான், பிள்ளைகளை நல்ல முறையில் படிக்க வைத்துக்கொண்டிருக்கிறேன். அத்துடன் எதுவித கஷ்டமும் இன்றி செல்வாக்குடன் வாழ்கை நடத்தி வருகிறோம்" என்றார். (ச)

# 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 30 ஆவது திருமண வாழ்த்தும்



## திருமதி அமிர்தலிங்கம் புவனேஸ்வரி

எமது அன்பு அப்பா, அம்மா இருவரும் இன்னும் பலகாலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

இதே நாளில் 27 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் எமது அன்பு அக்கா பிரபாகர் துஷந்தினி (துளசி) அவர்களையும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பிள்ளைகள்:- ரூபன் (நோர்வே), கலக்சனா (துசி), கயானன் (அஜித்), துஷந்தினி (துளசி - ஜேர்மனி), மருமகன்:- பிரபாகர் (பிரபா - ஜேர்மனி)

கைதடி மத்தி, கைதடி. T.P. 021 3002596 (29080)(2-6-7)

# SECOND YEAR REMEMBRANCE OF OUR DARLING APPAMMAH

Late.
**Mrs.JEYADEVI RAJANAYAGAM**
(DEVI Aunty)

BORN
05.12.1934
ENTERED GOLORY
02.02.2011



when some one you love becomes a memory, the memory becomes a treasure

*Foundly loved and sadly missed by loving*
*Kumar(Son), Chooty(Daughter-in-law), Grand Children*
*Jerine-Shavindra, Morine, Corine &*
*Great Grand child Shaiyana (Angel)*

"Blessed are the dead which die in the Lord from henceforth: Yea, saith the Spirit, that they may rest from their Labours; and their works do follow them" *Revelation 14:13*

Paster Kumar Rajanayakam,
(Seventh-day Adventist Church)
College Lane, Vaddukoddai.

# படையினரிடமிருந்த வி.மைதானக் காணி மீண்டும் ஒப்படைப்பு

தென்மராட்சி,பெப்.2

நீண்டகாலம் படையினரின் பாவனையிலிருந்த மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானக் காணி நேற்று படை அதிகாரிகளால் கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

காணி கையளிக்கப்பட்டதும் மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள் இணைந்து சிரமதானத்தினை மேற்கொண்டு துப்புரவாக்கினர்.

கல்லூரியின் இந்த வருட இல்ல மெய்வன்மைப் போட்டிகள் குறித்த மைதா னத்தில் நடத்தப்படவுள்ளன.

மேற்படி காணியிலேயே மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை இயங்கு வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும், பாடசாலை அமைப்பதற்கான நிதி கிடைத்ததும் கட்டடங்களை அமைத்து ஆரம்பப் பாடசாலையாக இயங்குமெனவும் அதிபர் பே.விநாயகமூர்த்தி தெரிவித்தார். (வ-9)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
04.05.1929

விண்ணில்
30.01.2008

## அமரர் முருகேசு மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற ஆசிரியர்) திதி:- சப்தமி - 02.02.2013

ஆண்டுகள் ஐந்து கடந்ததையா - நீங்கள்
ஆண்டவன் நிழலதைச் சென்றடைந்து;
ஆற்றிட இயலா துயருடன் நாம்
வாடுகின்றோம் நாளும் நம் நினைவுகளுடன்
உங்களது ஆத்மா சாந்திபெற ஆண்டவன் பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (C61394)(6.7.2)

# மரண அறிவித்தல்

## திருமதி திருநாவுக்கரசு சரஸ்வதி



காரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பி டமாகவும் தங்கோடை, செம்பாட்டை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி திருநாவுக்கரசு சரஸ்வதி நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், பொன்மலர், சிவகுமாரன், சிவபாலன், சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகராசா, விக்னேஸ்வரி, புஸ்பமலர், சிவசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிரிதரன், விநோதினி, நிரோசன், சரவணன், நவநீதன், லக்சனா, சுகன்யா, துவாகரன், கீர்த்திகா, சாருஜன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பார்வதி மற்றும் வள்ளியம்மை ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.02.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனத்திற்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
077 459 8248

செம்பாடு,
தங்கோடை ,காரைநகர். (29082)(5-6-7)

# வீடு வாடகைக்கு உண்டு

ஐந்து அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். இடம் - சிதம்பரபுர வீதி, சமணங்குளம், வவுனியா. தொடர்பு:0773034516 (27648)(6.7.2)

# இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிக குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 7மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

077 968 3028 (29077)(5-6-7)
நந்தினி பாம்
இராசபாதை றோட், கல்வியங்காடு.

# விற்பனைக்கு

சுன்னாகத்தில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் நெற்கபே (net cafe) ஒன்றும் 19-xxxx mitshubishi Lancer(A/C) வெள்ளை நிற காரும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 723 8478
071 833 4264 (29111)(6.6.7)

# கண்ணீர் அஞ்சலி

Dr.திருமதி சரோஜா சிவனேசன்
அவர்களின் தாய்
**திருமதி தங்கமணி வீரசிங்கம்**
அவர்கள் 31.01.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
- அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம். (29117)(6.7.2)

# வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776146434 (29076)(6.7.2)

# வீடு விற்பனைக்கு

கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு) அருகில் 4 ½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. (29115)(6.7.2)
தொடர்பு:-0771471279

# மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்பு

Samsung Electronic Company இல் Packing வேலைக்கு ஆள்கள் தேவை. குறைந்த செலவுடன் பயணம் செய்து மாத கொடுப்பனவில் மீதிப் பணம் செலுத்தும் வசதி செய்து தரப்படும்.
T.P:0776911402 (29070)(6.7.2)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 05 1974

மறைவு
15 01 2012

## அமரர் செல்லன் கேதீஸ்வரன் (வரன்)

அன்பெல்லாம் ஓர் உருவாய் அமைந்த உன் நல உருவம்
எல்லோருடனும் இனிதாய் பழகிடும் நற்சுபாவம்
துன்புறுவோர் துயர் துடைக்கும் தூயவனாய்
பூமியில் அவதரித்த புண்ணிய புதல்வனே!
மாமேரு சரிந்தது போல் எமைவிட்டு சென்றதேனோ?
ஓராண்டு ஆகியும் ஆறவில்லை நம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

வல்லியாவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டி. (2.6.7)(27721) - குடும்பத்தினர்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்



மலர்வு
13.04.1944

உதிர்வு
03.01.2013

## அமரர் செல்வராசா சந்திரன்

(ஓய்வுபெற்ற ப.நோ.கூ.சங்க. முகாமையாளர் - சுன்னாகம்)

கடந்த 03.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.02.2013) சனிக்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும்,தொலைபேசி மூலம் உள்நாடு,வெளிநாடுகளில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மேலும் பல வழிகளில் உதவிபுரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (29014)(3.6.7)

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

## ஆசிரியரை தாக்கிய மாணவர்கள் கைது

மாத்தறை,பெப்.2

ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மாத்தறையிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலையின் பிரதான நுழைவாயில் அருகில் ஆசிரியரை தாக்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆசிரியரே தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## அமைச்சுப் பதவிகளில் அம்பாறை புறக்கணிப்பு

### பைஸல் காசிம் எம்.பி.குற்றச்சாட்டு

அம்பாறை,பெப்.2

அம்பாறை மாவட்டம் முஸலிம் காங்கிரஸின் ஆணிவேராக இருக்கின்றது. அந்த நிலையில் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும்போது தொடர்ந்து இந்த மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறது.

இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் காசிம் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுதொடர்பில் கட்சியின் அதியுயர் பீட கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவிருக்கிறது. புதிய அமைச்சரவையை ஜனாதிபதியே நியமித்துள்ளார். அதன்போது கட்சித் தலைவர் நாட்டில் இருக்கவில்லை. கட்சி கூடி ஆராய்ந்த பின்னர் அமைச்சுப் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்ததாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அது தவறான செய்தியாகும். அமைச்சுப் பதவி தொடர்பில் கட்சி எந்தவொரு கூட்டங்களையும் நடத்தவில்லை.

இதேவேளை ஒரே பிரதேசத்துக்கு எமது கட்சி சார்பில் இரு அமைச்சுப் பதவிகளை வழங்கியிருக்கின்றமை மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. கட்சியின் உயர்பீட கூட்டத்தில் அது குறித்து தலைமையிடம் கேள்வி எழுப்பப் படும்.-என்றார்.

## கபில நிறத் தத்தியின் தாக்கத்தினால் நெற்பயிர்கள் வைக்கோலாக மாற்றம்



அம்பாறை,பெப்.2

அம்பாறை மாவட்டத்தில் கடந்தவாரம் பெய்த மழை வெள்ளத்தைத் தொடர்ந்து நெற் பயிர்களில் கபில நிறத் தத்தியின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக விளைச்சலுக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் வைக்கோலாக மாறி வருகின்றன.

கபில நிறத் தத்தியின் தாக்கம் காரணமாக இந்தப் பிரதேசத்திலுள்ள 1500 இற்கும் மேற்பட்ட ஏக்கர்களில் செய்கையிடப்பட்ட விவசாயம் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. அதன் தாக்கத்தை கட்டுப்படுத்த கிருமிநாசனிகள் விசிறப்படுகின்ற போதிலும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாதுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ச)

## தொழில் நுட்பத்துடன் கூடிய விவசாய விரிவாக்கம் குறித்து ஆராய்வு

திருகோணமலை,பெப்.2

திருகோணமலை மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் கூட்டம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இந்த ஆண்டில் தொழில் நுட்பத்துடன் கூடிய விவசாய விரிவாக்கத்தை மாவட்ட மட்டத்தில் விஸ்தரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் விவசாயிகளுக்கு விதை நெல், பசளை ஆகியன வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய நிலங்களின் மீளக் கட்டுமானம் தொடர்பாகவும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் மொறவெவ பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலை, சோளம், மரக்கறி ஆகியவற்றின் அறுவடை செய்யும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. பிரதி விவசாயப் பணிப்பாளர் டி.எம்.எஸ்.பி. திசாநாயக்க,விவசாய உத்தியோகத்தர் எம்.ஜ இஸ்மாலெவ்வை உட்பட பலர் அறுவடை நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மலையகத் தமிழர்கள் குறித்து அமெ.பல்கலை மாணவன் ஆய்வு

நுவரெலியா,பெப்.2

அமெரிக்க பல்கலைக் கழகம் ஒன்றில் இறுதி யாண்டு மாணவரொருவர் பெருந்தோட்டத் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வித் தொடர் பில் ஆய்வொன்றை மேற்கொள்ளும் பணியை ஆரம்பித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டோபர் நியூவேர்ட் என்ற பல்கலைக்கழக மாணவன் ஒருவரே பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஊடாக இந்த ஆய்வை மேற்கொள்கின்றார்.

இலங்கையில் 6 மாதங்களுக்குத் தங்கும் அவர், 'பெருந்தோட்ட மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி - ஓராய்வு' என்ற தலைப்பில் மேற்கொள்ளப் படவுள்ள ஆய்வுக்கு உதவும் வகையில் தோட்ட கிராமியக் கல்வி அபிவிருத்தி நிறுவனமான பிரிடோ நிறுவனம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் வெளிக்கள இணைப்பாளர் எஸ்.கே.சந்திரசேகரனுடன் தோட்டப்பகுதிகளுக்குச் செல்லும் மாணவன், பெருந்தோட்ட மக்கள் குறித்த பல்வேறு தகவல்களைத் திரட்டிவருகின்றார்.

## மாட்டு வியாபாரிகளுக்குள்ள சலுகை கூட எமக்கு இல்லை

### ஊடகவியலாளர்கள் கவலை

**சமூகத்தின் பிரச்சினையை வெளியுலகத்துக்கு கொண்டு சென்று அதற்கான ஆலோசனைகளையும்,தீர்வுகளையும் பெற்றுத் தரக்கூடிய செயற்திறன் ஊடகவியலாளர்களிடமிருந்து தான் உருவெடுக்கின்றது.**

திருகோணமலை,பெப்.2

திருகோணமலை, மொறவெவ பிரதேசத்தில் அரச அலுவலகங்களில் மாட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் கூட ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களை மதிப்பது சமூகத்தின் பொறுப்பும் கடமையும் ஆகும். ஏனென்றால் ஓர் ஊடகவியலாளன் சமூகத்திலுள்ள பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் கருவியாகச் செயல்படுகின்றான்.

சமூகத்தின் பிரச்சினையை வெளியுலகத்துக்கு கொண்டு சென்று அதற்கான ஆலோசனைகளையும்,தீர்வுகளையும் பெற்றுத்தரக்கூடிய செயற்திறன் ஊடகவியலாளர்களிடமிருந்து தான் உருவெடுக்கின்றது.

இவ்வாறான நிலைமையில் இப்போதைய காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் அவ்வாறு மதிக்கப்படுகின்றார்களா? என்பது சந்தேகம். குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மாறிக்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த வாரம் மொறவெவ பிரதேசத்தில் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அரச அலுவலக அதிகாரியொருவரை சந்திக்க சென்றபோது அங்கு மாட்டு வியாபாரியும் - ஊடகவியலாளரும் சென்றவேளை ஊடகவியலாளருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மாட்டு வியாபாரிக்கு முக்கியத்துவம் கொடுத்ததை அவதானிக்க முடிந்தது.

பணம் புழக்கத்தில் இருப்பதினால் அவருக்கு முன்னுரிமை கொடுத்திருக்கலாம். இருந்தபோதிலும் அதிகாரியொருவர் சமூக அக்கறை கொண்டவராக இருக்க வேண்டும்.

எனவே அரச அதிகாரிகள் ஊடகவியலாளர்கள் விடயத்திலும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ச-சி)

## மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் பட்டதாரிகள் 32 பேருக்கு நிரந்தர நியமனம்

மட்டக்களப்பு,பெப்.2

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட 32 தமிழ், முஸ்லிம் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் திருமதி பி. எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 32 பட்டதாரிப் பயிலுநர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பள்ளி சிறுவர் உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் விவகார உத்தியோகத்தர் என 4 படித் தரங்களாக நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நியமனக் கடி தங்களை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மாவட்ட அரச அதி பர் சாள்ஸ் ஆகியோர் வழங்கினர்.

இந்தநிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் மேலதிக செயலர் சுசிமா விஜயசேகர, மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன், மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலர் எஸ்.வாசுதேவ உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## அம்பாறையில் தையல் பயிற்சி நிலையம்

அம்பாறை,பெப்.2

சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களின் ஏற்பாட்டில் அம்பாறையில் தையல் பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பிய சேனவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத்திட்ட நிதி மூலம் இந்த நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலர் வி.ஜெகதீசன், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குடியிருப்பில் தீ; 4 வீடுகள் சேதம்

ஹற்றன்,பெப்.2

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்ன வேவா கொல தோட்டக் குடியிருப்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்தத் தீ விபத்தில் எவருக்கும் காயமோ, உயிர் சேதமோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. மின் ஒழுக்கு காரண மாக தீ ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின் றனர். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.



**இடபம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.



**மிதுனம்:** பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். அரச அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும்.



**கடகம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**சிங்கம்:** சோர்வு நீங்கித் துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். வியாபாரத்தில் திடீர் இலாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**கன்னி:** சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். நெருங்கியவரிடம் உங்களின் மனக் குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை நாசூக்காக சுட்டிக் காட்டுங்கள்.

நாளை

தை -21 ஞாயிற்றுக்கிழமை 03.02.2013
திதி: அஷ்டமி பி.இ. 04.29 வரை
நட்சத்திரம்: சுவாதி சித்தம் பி.ப. 04.16 வரை
சுபநேரம்: 09.35- 11.05 வரை
ராகுகாலம்: 05.05- 06.35 வரை



**துலாம்:** யாரையும் நம்பிப் பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உறவினர், நண்பர்களுடன் அளவாகப் பழகுங்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.



**விருச்சிகம்:** தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வராது என்றிருந்த பணம் வரும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள்.



**தனுசு:** உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.



**மகரம்:** விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். இழுபறியாக இருந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.



**கும்பம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். மற்றவர்களை நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.



**மீனம்:** மறைந்திருந்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். மற்றவர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தன இலாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 8 | | | 7 | | | |
| | | 7 | 9 | | | | 1 | |
| | | | | 3 | 5 | 6 | | 7 |
| 1 | | 6 | 3 | | 9 | 7 | | |
| | 9 | | 6 | | 2 | | 3 | |
| | | 5 | 8 | | 1 | 4 | | 6 |
| 8 | | 9 | 7 | 2 | | | | |
| | 7 | | | | 4 | 5 | | |
| | | | 5 | | | 8 | 7 | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 3 | 6 | 4 | 2 | 9 | 1 | 5 |
| 1 | 6 | 4 | 9 | 5 | 8 | 3 | 7 | 2 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 3 | 4 | 6 | 8 |
| 3 | 1 | 2 | 8 | 7 | 9 | 6 | 5 | 4 |
| 9 | 5 | 8 | 4 | 6 | 1 | 7 | 2 | 3 |
| 6 | 4 | 7 | 3 | 2 | 5 | 8 | 9 | 1 |
| 4 | 9 | 1 | 5 | 3 | 6 | 2 | 8 | 7 |
| 2 | 3 | 6 | 1 | 8 | 7 | 5 | 4 | 9 |
| 7 | 8 | 5 | 2 | 9 | 4 | 1 | 3 | 6 |

[illegible]


# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம்
1938.08.26

மறைவு
2012.12.22

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்து இன்று
எம்மை விட்டுப் பிரிந்து பரமனின் பாதார விந்தத்தைப்
பற்றிப் பிடித்துக் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் இளையதம்பி கந்தையா யோகராசா

அவர்களது மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உடன் நின்று உதவியவர்கள். ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்கள். கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்கள். மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள். உள்ளூர் வெளியூர்களில இருந்து அனுதாபம் தெரிவித்தவர்கள். மரணச் சடங்குகளை செவ்வனே நடத்த உதவியவர்கள். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள். சக உத்தியோகத்தர்கள் மற்றும் அந்தியேட்டி. சபிண்டீகரணம் நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

**இன்று (02.02.2013) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற விருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**90/7, பொற்பதி வீதி, கொக்குவில்.** (C/29066) (2.6.7) **- குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்



## அம்பலவாணர் சிவயோகநாதன்

(Electrical Superintendent E.S)

யாழ்ப்பாணம், மல்லாகத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகம், மயிலணியை வதிவிடமாகவும் பின்னர் கனடா, மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிவ யோகநாதன் 29.01.2013 செவ்வாய்க்கிழமை மொன்றியலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-தங்கம்மா தம்பதியரின் அருமை மகனும், விமலாதேவியின் (மொன்றியல்) அன்புக்கணவரும், ஷாமினி (UK), ரஜனி (மொன்றியல்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தன் (UK), நாவலன் (மொன்றியல்) ஆகியோரின் அருமை மாமனாரும், பூஜா (UK), அரோன் (மொன்றியல்), அர்ணி (மொன்றியல்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விமலாதேவி, சாரதாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முருகையா, வரதராஜா மற்றும் குணதேவி (நோர்வே) அம்பிகாதேவி (ரொரன்டோ), சரோஜினிதேவி (மொன்றியல்), காலஞ்சென்றவர்களான மயிலுப்பிள்ளை, சிவசம்பு ஆகியோரின் மைத்துனரும், சிவரூபன் (USA), சிவகௌரி (Australia), சிவராமன் (UK), சிவானந்தன் (Australia), சிவானந்தி (Australia), சிவகுமார் (Toronto), துஷ்யந்தன் (Sri Lanka), துஷ்யந்தி (UK), தனஞ்செயன் (Sri Lanka) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 4275 Sources Blvd. Dollard Des Ormeaux இல் அமைந்துள்ள Rideau Funeral Home, இல் இன்று (02.02.2013) சனிக்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரையும் நாளை (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப ஒரு மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லத்துரை நாவலேஸ்வரர்
(நாவலன் குடும்பம்)
T.P-015146842068

கனடா. (29054)(6.7.11)




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.2

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தால் நடத் தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களின் ஆசிரிய உதவியாளர்களுக்கான செய லமர்வு நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந் துள்ள யாழ். பிராந்திய நிலை யத்தில் செயலமர்வு நடை பெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# திருப்பதியில் கறுப்புக் கொடி ராஜபக்ஷ வருகைக்கு எதிர்ப்பு

## வைகோ ஆவேசம்



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வரு கையை எதிர்த்து திருப் பதியில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ள தாக மதிமுக பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

அது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ள தாவது:-

தமிழகத்தின் தன்மான உணர்ச்சிக்குச் சவால் விடும் வகையில், இந்துக்களின் திருத்தலமான திருப்பதிக்கு மகிந்த ராஜபக்ஷவை காங் கிரஸ் தலைமையிலான ஐக் கிய முற்போக்குக் கூட்டணி அழைத்து வரவேற்கிறது.

இலங்கையில், 1607 இந்துக்கோயில்களை உடைத்த தாக, இலங்கை அரசு ஏற் கனவே நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டு உள்ளது.

திருகோணமலை சிவன் கோவில் தேரைச் செய்த தச்சர்களை, நடுத்தெருவில் மணிக்கட்டை வெட்டிக் கொன்றார்கள். இந்துக் கோயில் பூசாரிகளைக் கொன்றார்கள். இதையெல்லாம் இந்திய நாடாளுமன்றத்திலேயே பேசி நான் பதிவு செய்து இருக்கின்றேன்.

ஏன், இந்துக்கள் பெரி தாகப் போற்றுகின்ற விவே கானந்தர், சிகாகோ உலக சமயங்களின் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, இலங்கை வழியாக இந்தியா வுக்குத் திரும்பும்போது, புத்த பிக்குகள், சிங்களவர் கள், அனுராதபுரத்தில் செருப் பாலும், கல்லாலும் அவரை அடித்து விரட்டினார்கள்.

சிவன் கோயில், முருகன் கோயில், துர்க்கையின் கோயில் களை எல்லாம் உடைத்து நொறுக்கிய, அரசுதான், இப் போதும் தமிழர்கள் வழிபட்டு வருகின்ற கோயில் வளா கங்களில் சிங்கள இராணு வத்தை நிறுத்தி இருக்கின் றது. அங்கே பௌத்த விகாரை களைக் கட்டுகின்றது. அங்கே இந்துக் கோயில் உடைத்து நொறுக்கப்படு கின்றது.

''ராஜபக்ஷ பீகாருக்கும் சென்றார்; ஏன், தமிழ் நாட்டின் தலைவாயிலில் உள்ள திருப்பதி கோயிலுக் கும் சென்று வழிபட்டார்' என்று உலகத்துக்குச் சொல்லு வதற்காக, திட்டமிட்டு மத்திய காங்கிரஸ் அரசு, இந்தத் துரோகத்திலும் அராஜகத்திலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

எனவே, திருப்பதியில் ராஜபக்ஷ வருகையை எதிர்த்து, மதிமுக சார்பில், பெப்ரவரி 8 ஆம் திகதி, கறுப்புக்கொடி அறப் போராட் டம் ஒன்றை நடத்தவுள்ளோம்.

மானம் அழிந்து விட வில்லை தமிழ்க்குலத்துக்கு என்பதை உணர்த்தும் விதத்தில் இந்த கறுப்புக் கொடி கண்டன அறப்போர் நடைபெறும்.

- இவ்வாறு வைகோ தமது அறிக்கையில் கூறியுள் ளார். (3)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி டிறிபேக் கல் லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத் தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் க.அருந் தவபாலன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் கலந்து கொள்வார். (3-9)

* * *

மல்லாகம் மகா வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச் சந்திரனும், சிறப்பு விருந் தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப் பாளர் சு.சண்முககுல குமாரும் கௌரவ விருந் தினராக இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற வட பிராந்திய முகாமையாளர் சி.விக்கின ராஜாவும் கலந்து கொள்ள வுள்ளார்கள். (3-86)

* * *

உடுப்பிட்டி மகளிர் கல் லூரியின் இல்ல மெய்வன் மைப்போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத் தில் அதிபர் திருமதி கௌரி சேதுராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி எஸ். நற்குணலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (3-78)

* * *

கரணவாய் தாமோதர வித்தியாலய இல்ல மெய் வன்மைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.குருகுலசிங்கம் தலைமை யில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக கணித புள்ளிவிபர வியற்றுறை பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்து கொள்வார்.

* * *

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியின் வரு டாந்த இல்ல மெய்வன் மைப்போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 1மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் மா.நவ நீதமணி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பொறியியலாளர் த.தர்மசீலன் கலந்துகொள்வார். (3)

## விற்பனைக்கு

வோக்ஸ்வகன் கார், வெஸ்பா ஸ்கூட்டர், 10' அகல 'New model gate, Baby Fridge, 13'-6, 15'-2 தூண்கள், லவ்பேட்ஸ் கூடு, கதவுகள் என்பன யாழ். நகரில் விற்பனைக்குண்டு

தொடர்பு 0779184222 (29075)(3.6.7)

## மணமக்கள் தேவை

*84 இல் பிறந்த 12 இல் செவ்வாயும் சனியும் 66½ பாவம் உடைய கனடா பிரஜாஉரிமை பெற்று MSC முடித்து கனடாவில் பணிபுரியும் மணமகளுக்கு கனடாவிலோ உள்நாட்டிலோ டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.

* 82 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 41½ பாவம் உடைய கனடாவில் MBBS டாக்டராக பணிபுரியும் மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர் மண மகன் தேவை.

*74 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாத 23 பாவம் உடைய சைவ போசனமுள்ள மணமகன் அரச நிறுவனத்தில் பணிபுரிகின்றார்.

*சைவ போசனமுள்ள அரசநிறுவனத்தில் பணி புரியும் மணமகள் தேவை.

*79 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 42 பாவம் உடைய BSc முடித்து லண்டனின் MBA முடித்து பிரஜாவுரிமை பெற்ற சைவபோசனமுள்ள மணமகனுக்கு சைவபோசனமுள்ள மணமகள் தேவை.

தொடர்பு கலைக்கண்ணன் திருமணசேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர். T.P.0776070862

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1985 சுவாதி 4ஆம் பாதம், கிரகபாகம் 62, Software Engineer ஆக வேலை பார்க்கும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு- 0771873537

## வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் சர்வதேச DMI நிறுவனத்தில் புதிதாக வடக்கு, கிழக்கில் ஆரம்பிக்கப் படவுள்ள புதிய கிளைகளுக்கு பதவி வெற்றிடங் கள் நிரப்பப்படுகின்றன. பயிற்சியுடன் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். பயிற்சியின் போது 10000/= -12000= வரையும் பயிற்சியின்பின் 35000/= ஆரம்ப சம்பளத்துடன் வேலைவாய்ப் பினை பெற்றுக்கொள்ளலாம்.

தகைமை O/L ஆகக்குறைந்தது. வயதெல்லை 18-30 முதல் வரும் 25 நபர்களுக்கு மட்டும் தங்குமிடவசதியும், உணவு வசதியும் இலவசம்.

T.P- 0247900771, 0774122202 (27842)(3.6.7)

## பெயர் மாற்றம்

5ஆம் வட்டாரம் வேலணையைச் சேர்ந்த றமணன் வசந்தா ஆகிய நான் எனது பெயரினை இன்றிலிருந்து றமணன் அசந்தா என மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன் .

தகவல்- றமணன் அசந்தா (29069)(3.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1949.12.05

மறைவு
2013.01.03



அமரர்
**சிவஞானம் மகேந்திரநாத்**

கடந்த 03.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சிவஞானம் மகேந்திரநாத் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.02.2013) வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.02.2013) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பூரண வாசா
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (29026)(5.6.7)

குடும்பத்தினர்.
021 492 1820

## நீங்காத நினைவில் வருடங்கள் ஒன்பது

அமரர் **சின்னத்துரை நல்லையா**
(இராசு)



தோற்றம்
03.03.1947

மறைவு
12.02.2004

திதி:02.02.2013

பார் போற்ற எம்மை நன் மக்களாக
வாழ வைத்த ஐயாவே
ஆண்டுகள் ஒன்பது வந்தாலும்
எந்நாளும் அருகில் இருக்கும்
நினைப்பு ஐயா எமக்கு
உங்கள் நினைவாய் வருந்துகின்றோம்.

தெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (சு6137)(4.6.7)

குடும்பத்தினர்.

## விலைமனுக்கோரல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளையின் மாடிக் கட்டட வேலைக்கான பொருள் வழங்குநர்கள் மற்றும் தொழில் ஒப்பந்தக்காரர்கள், சேவையினை வழங்கக் கூடியவர்கள் விலை மனுப்பட்டியலை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளையில் (இல.29, ஆனந்தபுரம், கிளிநொச்சி) 06.02.2013 இற்கு முன்னர் பெற்றுக்கொண்டு 13.02. 2013 இற்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.

கிளை நிறைவேற்று அதிகாரி
இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
கிளிநொச்சி.
021 228 5843 (26319)(5-6-7)

## மரண அறிவித்தல்

### விஸ்வநாதர் கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற முகாமையாளர், கிளை 13 தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)



மாவிட்டபுரம் தெற்கைப் பிறப்பிடமாக வும் மாவிட்டபுரம், இலகடியை வசிப்பிட மாகவும் தற்போது கனடா மொன்றியலில் வசித்து வந்தவருமான விஸ்வநாதர் கனக ரத்தினம் 28.01.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ் வநாதர்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை- செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், பெரியதம்பி, கந்தையா, காலஞ்சென்றவர் களான பொன்னம்பலம், அன்னபூரணம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும், புஸ்பராணி (ராணி), சுவர்க்கலேகேந்திரன்(சிவா), காலஞ்சென்ற இந்திராணி (மல்லிகா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி, காலஞ்சென்ற சிற்சபேசன் ஆகியோரின் அன்பு மாமனும், லதா (சூட்டி) கஜேந்திரன், சசிதரன், கிருஷ்ணா, கிருசாந்தன், கிருசாந்தி ஆகியோரின் பேரனும், தபீசன், தபீனா, தவாணியா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை கனடா, மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
வைத்திய கலாநிதி புவனேந்திரன்,
மங்கையர்க்கரசி குலநாயகம்
(மருமக்கள்).

58, புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
021 222 5848 (29013)(5-6-7)

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி இராசலிங்கம்

M.Sc., FCMA, FCCA, MBIM, DPFM Senior Lecturer



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், இல. 12-3/3, றோகினி றோட், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராசலிங்கம் அவர்கள் 30-01-2013 புதன்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி (பண்டத்தரிப்பு, இந்துக் கல்லூரி ஆசிரியை)யின் அன்புக் கணவரும், Dr.மலர்விழி பகீரதன் (லண்டன்), காலஞ்சென்ற இளங்கோ (கனடா) மற்றும் Dr.வள்ளுவன் இராசலிங்கம் (அமெரிக்கா), திருமதி கயல்விழி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. அ. பகீரதன் (லண்டன்), திருமதி தயாளநிதி (கனடா), திருமதி நாகநிமலினி (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், அரவிந்தன், ஆரபி, அருள்விழி (விந்யா), அகல்விழி (சத்யா), திவ்யா, அகல்யா, அவிநாஷ் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

கொழும்பு வாழ் உறவினர்கள், நண்பர்களின் அஞ்சலிக்காக அமரரின் உடல் பொரளை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் நேற்று (01-02-2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை வைக்கப்பட்டு, இறுதிச் சடங்கிற்காக இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரி வீதியில் உள்ள அன்னாரது "குறிஞ்சி" இல்லத்திற்கு எடுத்துவரப்படும். இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நாளை (03-02-2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்வதற்காக பிற்பகல் ஒருமணியளவில் விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

"குறிஞ்சி" இந்துக்கல்லூரி வீதி,பண்டத்தரிப்பு. T.P. : 0212250453, 0213215026

மலர்விழி : T.P.: 0776948131

வள்ளுவன் : T.P.: 0772858616

(F5859)(2.6.7)

# வறுமையால் மேலதிக கல்வியை தொடர முடியாதோருக்கு விசேட கற்றல் வகுப்பு

## 'லீட்ஸ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், பெப்.2

லீட்ஸ் நிறுவனத்தின் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 293 பாடசாலை மாணவர்களுக்கு விசேட கல்விச் செயற்றிட்டமாக மாலை நேர வகுப்புகளை நடத்துகின்றன.

வறுமை காரணமாக மேலதிக கல்வியைத் தொடர முடியாமல் உள்ள மாணவர்கள் மற்றும் மந்த கதியில் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சனசமூக நிலையங்கள் ஊடாக மேற்படி கற்றல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/67 திருநகர் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 46 மாணவர்களுக்கு பாரதி சனசமூக நிலையத்திலும் ஜே/68 றெக்கிளமேசன் மேற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 41 மாணவர்களுக்கு தொடர்மாடிக் கட்டடத்திலும், ஜே/69 றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 30 மாணவர்களுக்கு றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும்-

ஜே/84 நாவாந்துறை வடக்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு சூரிய ஒளி சனசமூக நிலையத்திலும், ஜே/84 நாவாந்துறை வடக்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 46 மாணவர்களுக்கு சென்.மேரிஸ் சனசமூக நிலையத்திலும், ஜே/85 நாவாந்துறை தெற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 80 மாணவர்களுக்கு கண்ணாபுரம் சனசமூக நிலையத்திலும் மாலைநேர வகுப்புகள் இடம்பெறுகின்றன.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் கீழ் செயற்படும் லீட்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்படி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (வ-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த,

**சிவசம்பு மதியழகன்**

(B.com.Hons,Dip.in.Edu (merit),SLEAS III

அவர்கள் கல்வி நிர்வாக சேவைப்பரீட்சையில் சித்தி பெற்று பண்டாரவளை கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்றமையையிட்டும், மேலும் பல உயர் பதவிகளினை பெற்றும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துவோர்.

திருச்செல்வம் சறோஜா குடும்பத்தினர்,
ராஜ்குமார் துஷாமினி குடும்பத்தினர்,
சர்வானந்தன் துஷாயினி குடும்பத்தினர்,
பாஸ்கரன் சுமதி குடும்பத்தினர்.,
ஸ்ரீதரன் தங்கேஸ்வரி குடும்பத்தினர்,
கமலாகரன் கௌசிகா குடும்பத்தினர்,
தயாகரன் கம்ஷானந்தி குடும்பத்தினர்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(29116)(2.6.7)

# பரிசில் தினம்

யாழ்ப்பாணம், பெப்.2

தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தின் பரிசில் தினம் இன்று சனிக்கிழமை யாழ். நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை பிரதிப் பிரதம செயலாளர் வே.மகேந்திரராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மேற்படி நிதியம் மாணவர்களின் கல்வி நல்லொழுக்க மேம்பாட்டுக்காக ஆண்டு தோறும் சமய பாடப் போட்டிப் பரீட்சைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-13)

# அரசாங்க அறிவித்தல்


**முல்லைத்தீவு மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்களுடன் இணைந்த திணைக்களங்கள் என்பவற்றுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் -2013**

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் சகல பிரதேச செயலகங்களுக்கும் பொருள்கள் சேவைகள் வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடமிருந்து 2013 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் தொடர்பான விளம்பரம் கடந்த 10ஆம் திகதி இப்பத்திரிகையின் 18ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான இறுதிக்கால எல்லை 31.01.2013ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. இக்கால எல்லை மேலும் 15.02.2013 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே வழங்குநர்கள் இதற்கான விண்ணப்பப்படிவங்களை மாவட்டச் செயலக நிதிக் கிளையில் 15.02.2013 வரை அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3. மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கடித உறையில் (9"× 4") இடதுபக்க மேல் மூலையில் 'வழங்கல்/சேவைகள் பதிவு செய்தல் 2013' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்புவதாயின் அரசாங்க அதிபர், நிதிக்கிளை, மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கும் நேரடியாக கையளிப்பதாயின் மாவட்டச் செயலக நிதிக்கிளையிலும் 20.02.2013ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
முல்லைத்தீவு.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை பஞ்சரத்தினம்

(நில அளவையாளர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், உடையார் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பஞ்சரத்தினம் 29.01.2013 அன்று காலமானார்.

அன்னாரின் மரணச்சடங்குகள் நாளை (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது வதிவிடமான சுதந்திரபுரம் சந்தி (உடையார் கட்டு) இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செந்தூர் செல்வியும் குடும்பத்தினரும்.

(26318) (6.7.2))





உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை இந்திய அரசு கொண்டு வரவேண்டும்

## தமிழக சட்ட சபையில் ஆளுநர் ஆவேசம்

சென்னை, பெப்.2

இலங்கையில் தமிழர்களை இனப்படுகொலை செய்யும் இலங்கை அரசு மீது மத்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் ரோசய்யா தெரிவித்துள்ளார்.



நடப்பாண்டின் முதலாவது தமிழக சட்டசபைக் கூட்டம் நேற்று ஆரம்பமாகியது. அதில் ஆளுநர் உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பாக்கு நீரிணை கடற்பரப்பில் பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் தொடர்கிறது. இலங்கை கடற்படையின் தாக்குதலைத் தடுக்கும் வகையில் அந்த நாடுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்களை இலங்கை அரசு இனப்படுகொலை செய்து வருகிறது. போரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

தமிழர்களை இனப்படுகொலை செய்யும் விவகாரத்தை இந்திய அரசு சர்வதேசத்தின் முன்பு எடுத்து வைக்க வேண்டும்-என்றார்.

சட்டசபைக் கூட்டத்தில் ரோசய்யா உரையாற்ற ஆரம்பித்ததும் தி.மு.க. சட்ட மன்றத் தலைவர் மு.க.ஸ்டாலினும் ஓர் உரையை வாசித்தார். இதனால் குழப்பம் நிலவிய நிலையில், ஸ்டாலின் தனது உரையை வாசித்து முடித்துவிட்டு அவையை விட்டு வெளியேறினார். அவருடன் தி.மு.க. சட்டசபைஉறுப்பினர்களும்வெளி நடப்புச் செய்தனர். (வ)

# மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணிவரை உரும்பிராய், ஊரெழுப் பிரதேசத்தின் இரு பகுதி, இணுவில் கிழக்கு, சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர் கடைப் பிரதேசம், நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அம்பன் பிரதேசம், வல்லிபுரம் பிரதேசம், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பொற்பதி வீதி, பாற்பண்ணைப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டாதெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, மனோகரா பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணிவரை நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, புறாப் பொறுக்கி, குஞ்சர் கடைப் பிரதேசம், உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, பொலிகண்டி, நவிண்டில், வடமராட்சி கிழக்கு பிரதேசம் தவிர்ந்த வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

# உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.2

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

**வர்த்தகப்பிரிவு**

கனகசபை நிரோசன் -3ஏ, சதானந்தன் சங்கர்-3ஏ, சூசைப்பிள்ளை வித்தகன்-2ஏ,பி, ஸ்ரீரஞ்சகுமாரன் அகிலன்-2ஏ,பி, ஸ்ரீபால சுந்தரம் மயூரன்-2ஏ,பி

**கணிதப் பிரிவு**

ஜெயதேவா குகப்பிரசாந்-2ஏ,பி, சிவயோகநாதன் துவாரகன்-ஏ,2பி, பாலசிங்கம் டிலக்ஷன்-ஏ,பி,சி, அருளானந்தசிவம் மோகன்லால் (ஆங்கிலமொழி மூலம்- ஏ,பி,சி, பரமானந்தன் ஹரிரிதர்சன்-பி,2சி

**உயிரியல் பிரிவு**

புவிராஜசிங்கம் பிரவீணன்-2ஏ, சி, பாலசுப்பிரமணியம் பிரியதர்சினி-2பி, சி, விஸ்வலிங்கம் பிரியா-பி,2சி

**கலைப் பிரிவு**

விஸ்வலிங்கம் ஆஷா-ஏ,2பி, முருகானந்தம் அபிராம்- ஏ,2பி, இரட்ணசபாபதி பிரசாத்-ஏ,2பி, பாலேந்திரன் சாதனா- ஏ, 2பி

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

என்.நிறோஜினி- 3ஏ, கே.பைரவி-3ஏ, ஆர்.மேருஷா-3ஏ, ரி.சுகன்யா- 3ஏ, பி.அருட்செல்வி- ஏ,2பி, ரி.திவ்யா-ஏ,பி,சி, என்.டிலக்ஷா- 3பி,

**விஞ்ஞானப் பிரிவு**

எல்.நிவேகா- பி,2சி, வை.தர்மிலி- பி,2சி, எஸ்.துர்க்கா- பி,சி,எஸ், என்.கார்த்திகா- 3சி, பி.வானதி- 2சி,எஸ்

**கலைப்பிரிவு**

என்.ஜெறோமின்-2ஏ,பி, கே.சியாமினி- 2ஏ,பி, ஆர்.டினோஷா- 2ஏ,பி, ரி.மேரிறொசாறி- ஏ,2பி, எஸ்.சங்கீதா-ஏ,2பி, பி.ஸ்ரெலா-2ஏ,சி, ஆர்.குணாளினி- ஏ,பி,சி, கே.டென்சியா- ஏ,பி,சி, கே.ரேணுகா- ஏ,பி,சி, என்.பார்த்திகா- ஏ,பி,சி, கே.மோகனாம்பிகை- ஏ,பி,சி, பி.சாளினி-ஏ,பி,சி, பி.சஜிக்கா- ஏ,பி,சி, என்.நாகதர்சினி-ஏ,2சி, ஏ.அனஸ்ரெலா-ஏ,2சி, எஸ்.டக்ஷாயினி-ஏ,சி,எஸ், ரி.மயூரதி- 3பி, பி.வாஷினி-பி, எஸ்.கலாயினி- 2பி,சி, ஏ.மஞ்சிகா- 2பி,சி, ரி.தன்சிகா-2பி,சி, ரி.அனுஷா- 2பி,சி, கே.பிருந்தா-2பி,சி, கே.டென்சியா-2பி,சி, வை.கௌசிகா-2பி,சி, வி.விஜிந்தா-2பி,சி

**இராமநாதபுரம் ம.வி**

**வணிகப் பிரிவு**

ந.சந்திரிக்கா- 3ஏ, ரி.தயந்தினி- 2ஏ,பி, கே.வினோஜன்-2ஏ,பி, பி.சதன்-ஏ,பி,சி,

**கலைப் பிரிவு**

என். குந்தவி- ஏ,2சி, ஏ.சகாயராணி-2பி,சி

**பளை மத்திய கல்லூரி**

**வணிகப் பிரிவு**

த.வினோத்- 3ஏ, இ.நிரோஜன்-3ஏ, கி.திரோசன்-3ஏ, சு.ராம் குமார்-ஏ,பி,சி,

**உயிரியல் பிரிவு**

ஜெ.ஜெயமாருதி-ஏ,2பி, த.சோபிதா- 2சி,எஸ்

**கணிதப் பிரிவு**

ச.சங்கர்-பி, 2சி, ஜெ.லக்சன்-2பி,சி, கு.தனுயா-பி,2சி

**உருத்திரபுரம் ம.வி**

**கலைப் பிரிவு**

த.ஈழவாணி- 2ஏ,சிஅ.தர்சனா- ஏ,பி,சி, கோ.கஜந்தினி-ஏ,பி,சி, இ.ஜீவிதன்-பி,2சி, கு.நிருசன்-பி,2சி

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு-(ஆங்கில மொழி மூலம்)**

பி.கஜலக்ஷன் - 3ஏ, ஆர்.நிதர்ஷன்-2ஏ,பி.

**தமிழ் மொழி மூலம்**

கே.மயூரன்-2ஏ,பி, எஸ்.சுவேதரன்-2ஏ,பி, ஜே.வியூகன்- 2ஏ,பி, எஸ்.சுகுமாரி-ஏ,2பி, எஸ்.ஜனாதரன்-ஏ,2பி, ரி.சிதம்பரவானதி-ஏ,2பி, எ.அனிஷ்ரன்-ஏ,பி,சி, வி.மதுஷா-ஏ,பி,சி, எஸ்.ரேனுகா-ஏ.பி.சி, பி.சாரங்கன்-ஏ,பி,சி, எஸ்.லனோஜன்-2பி,சி, எம்.தனிஸ்ரன்-பி,2சி, கே.கோபிகா- பி,2சி.

**விஞ்ஞானப்பிரிவு**

எம்.கீர்த்திகன்-3பி, ரி.டினேஸ்குமார்-2பி,சி, எஸ்.சரவணன்- 2பி,சி, ரி.கஜேந்திரன்-பி,2சி, யு.கோபிகா-பி,2சி, பி.பிரவீணா-பி,2சி, எஸ்.சுகன்ஜா-பி,2சி, எஸ்.சுமங்கலி-பி,2சி.

**வர்த்தகப்பிரிவு**

வி.நிரோஜன்-3ஏ, எஸ்.சஞ்சீவன் -3ஏ, எஸ்.சிந்துஜன்-3ஏ, எஸ்.ருஷாந்தினி-3ஏ, ஆர்.டினேஸ்-3ஏ, ரி.தேனுஜன்-3ஏ, எஸ்.ருஷாந்தினி-3ஏ, ரி.நிஷாந்-3ஏ, எஸ்.ஆரணி-3ஏ, எஸ்.விமோசனன்-3ஏ, எஸ்.சர்ராஜன்-3ஏ, எஸ்.ஜெயந்தன் -3ஏ, எஸ்.சஞ்சிகா-3ஏ, எஸ்.சரத்ரொசான்-2ஏ,பி, கே.தர்ஷன்-2ஏ,பி, வி.பானுஜா-2 ஏ,பி, ஏ.கௌசிகா-2ஏ,பி, பி.உமாசாயனன்-2ஏ,பி, பி.ருக்ஷாயினி-2ஏ,சி, சி.ரவீஷ்-2ஏ,சி, எஸ்.அஜந்தன்-ஏ ,2பி,கே.பதீதா-ஏ,2பி, ரி.தயானந்தன்-ஏ,பி,சி, எஸ்.யசீதரா-ஏ,பி,சி, எம்.பங்கஜன்-ஏ,பி,சி, கே.ராகுலன்-ஏ,பி,சி, பி.திபாலினி- ஏ,பி,சி, எஸ்.லதுசிஜன்-3பி, பி.உமாவதனி-3பி, பி.வைஷ்ணவி -3பி, எஸ்.கிதுர்ஷன்-3பி.

**கலைப்பிரிவு**

ரி.ருசிகா-2ஏ,பி, ஜீ.சஞ்சீவன்-2ஏ,பி, என்.சிவசங்கரி-2ஏ,பி, எஸ்.தர்ஷன்-2ஏ,பி, எஸ்.திவ்ஜா-2ஏ,பி, வி.ஜஷ்விகா-2ஏ,சி, கே.அமுதீஷன்-ஏ ,2பி, ஆர்.கௌசிகன்-ஏ,2பி, எஸ்.கணபதி- ஏ,2பி, கே.சரண்ஜா- ஏ,2பி, பி.பவீஷன்-ஏ,பி,சி, ஜி.சித் தார்த்தன்-ஏ,பி,சி, பி.ஆர்த்தி-ஏ,பி,சி, ஆர்.ஜீவதாரணி- ஏ,பி,சி, வை.பிருந்தா- 3பி, எஸ்.சுபானி-3பி ,பி.புவிஜா-ஏ,2சி. (3)

**மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**

**உயிரியல் பிரிவு**

ச.வேணிலன்-3ஏ, பு.திருமாறன்-ஏ,2பி, இ.குகப்பிரியா-பி,2சி, அரண்ராஜ்-3சி, தர்சன்-3சி, பகவதி-3சி, மு.தர்சனா-3சி

**கணிதப் பிரிவு**

ந.கிருசாந்த்-2ஏ,பி, ஜெ.பிறேமன்- 2ஏ, பி, இ.பகீரதன்- 2ஏ, சி, வா.சுவேதாரண்யன் -ஏ,பி,சி, ஜெ.ஜெயக்கமலன்-பி, 2சி, கே.வேணுதாஸ்-பி,சி, எஸ், வெ.தர்சா-3சி, ச.கோகுலன்-3சி, மு.சஞ்சயன்-2சி, எஸ்,

**வர்த்தகப் பிரிவு**

ப.பகீரதி-3ஏ, ஞ.கீர்த்திகா-3ஏ, மு.கிருஸ்ணா-2ஏ,பி, ந.விலாசினி-2ஏ,சி, க.தேனுகா-ஏ,2எஸ், க.பகீரதா-2பி,சி, சே.சஞ்சிகா-பி,2சி,

**கலைப்பிரிவு**

சி.ஸ்ரீகௌதமி-2ஏ,பி, க.நேமினா-ஏ,2பி, ஞா.மேரிரிலாஷா-ஏ.2பி, அ.உதயசாந்தினி-ஏ,பி,சி, ஆ.அயிதா-ஏ,பி,சி, ஞா.சேருசன்- ஏ,பிஎஸ், கு.கோபிராம்-ஏ,சி,எஸ், அ.கஜன்-ஏ,சி,எஸ், த.பிரியங்கா - ஏ,சி,எஸ்,ச. குல வேணி-3பி, ச.ஜெருசனா- 2பி,சி, தா.நேதாஜினி-2பி,சி, ஸ்ரீ.சர்வக்ஜன்-2பி,சி, சி.ஜெருசாந்தினி-2பி,சி, ப.மதிவதனி- 2பி,சி, க.சுபிரா -2பி,சி, இ.நிருபா-2பி,எஸ், த.சர்மிலன்-பி,2சி, இ.அனுஜா-பி, 2சி, தே.தனுசா-பி,2சி, சா.பிரதாப்-பி,2சி, இ.கல்பனா- பி,சி, எஸ், ந.தர்சிகா- பி.சி.எஸ், சி.சிவதர்சிகா-பி.சி.எஸ்

**வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

**உயிரியல் பிரிவு (ஆங்கில மொழி மூலம்)**

சுமிதா சிவசுப்பிரமணியம்-3ஏ, மாதங்கி நவகுமாரன்-2ஏ,பி, பிருந்தா-சுசீந்திரன்- 2ஏ,பி, ஜெனோஷா இக்னேஷியஸ்-ஏ,2பி, அனுசிதா ரவீந்திரன்-ஏ,பி.சி, தனுசியா குலரட்ண சேகரம் -3பி, சரணியா சிவம்-3பி,

**உயிரியல்பிரிவு (தமிழ் மொழி மூலம்)**

மிதுறிகா மிகுந்தன் -3ஏ, சரணியா நவராசா-3ஏ, திலக்ஷி பூரணலிங்கம்- 3ஏ, சயானி பாலசந்திரன்-3ஏ, சோபிகா சண்முகவடிவேல்-3ஏ, சயானி விமலநாதன் -3ஏ, அபிராமி அமிர்தலிங்கம் -3ஏ, மேஜினி சுப்பிரமணியம் -2ஏ,பி, ஜெனிதா ஜெயபாலசந்திரன் -2ஏ,பி, ஹஸ்தனி இராஜேந்திரம் -2ஏ, பி ,சௌத்ரி ஜெயராசா -2ஏ,சி ,துஷியா ஆரூரன்- 2ஏ,சி ,சாம்பவி றமணன் -ஏ,2பி , கீர்த்திகா தயாபரன் -ஏ,2பி ,லமேறிகா ராஜேஸ்வரன் -ஏ,பி,சி , லக்ஷனா ரவீந்திரநாதன் -ஏ,பி,சி˺, நிலக்ஷி வாமதேவன் -ஏ,பி,சி , லக்ஷி கணேஷ் -ஏ,பி,சி ,தரண்யா சுகுமார்- ஏ,பி,சி ,துஷாயினி தர்மநாயகம் -ஏ,பி,சி , சரண்யா குணசேகரம் -ஏ,2சி , சரண்யா மகேந்திரன் -3பி, கோபிகா ரவீந்திரன் -3பி, றேலங்கி மணிவாசகன் -3பி, சருண்யா ஞானசுப்பிரமணியம் -3பி, நிருத்திகா சிவலோகநாதன் -3பி, தர்சிகா சிவனேசன்-3பி

**கணிதப்பிரிவு (தமிழ்மொழி மூலம்)**

விதுர்சா மகேந்திரராஜா -3ஏ, பாலினி பாலசந்திரன்-2ஏ,பி , ஷர்மி சிவபாலன்-2ஏ,பி , சஜிதா கிருஷ்ணபிள்ளை-2ஏ,பி, சர்மிலா கார்த்திகேசு-2ஏ,பி, கிருஷாந்தி வைகுந்தவாஸன்-ஏ,2பி, புராதனி நாகையா-ஏ,2பி, ஸ்ரீபராசற்குணலிங்கம்-ஏ,2பி , துஷானி சிவராஜா-ஏ,2பி, லிபியா மகேந்திரன்-ஏ,2பி, மீருஜா விஜயகுமார்- ஏ,2பி , சஞ்சிகா புவனேஸ்வரன் -ஏ,2சி, தீபிஷாலினி தேவதாஸ்-ஏ,2சி, வைதேகி தியாகலிங்கம்- ஏ,2சி, நிஜனி குமாரசமூர்த்தி-3பி, சிவதர்சினி கிருஷ்ண மூர்த்தி-3பி

**வர்த்தகப்பிரிவு**

இந்துஜா திசனாதன் -3ஏ, சரணியா மகேஸ்வரன்-3ஏ, சசிகா ராஜரட்ணம்- 3ஏ, சயானி கணேசலிங்கம்-3ஏ, தனுசியா கிருஷ்ணதாசன்-3ஏ, அனோஜிதா இராஜநாயகம் -3ஏ, கம்ஷாயினி திருக்கேதீஸ்வரன் -2ஏ,பி, நாராயிணி சபாரட்ணம் -2ஏ,பி, சுமனஜா ஜெயபால சர்மா -2ஏ,பி, விதுஷா அன்ரன் விமலேந்திரன் -2ஏ, பி ,பவதாரணி சுதந்திரக்கொடி -ஏ,2பி, ,சாம்பவி அருட்செல்வன் -ஏ,2பி ,அபிலாஷினி கோகுலதாஸன்- ஏ,2பி, பஞ்சுகா கிருபாகரன்- ஏ,2பி, தர்மிகா அருள்ராஜன்-ஏ,2பி, வைஷ்ணவி மகாலிங்கம் -ஏ,பி,சி ,நீருஜா ஜோகேஸ்வரன் -ஏ,2சி ,நிரோஜினி கந்தசாமி 3பி,

**கலைப்பிரிவு**

மதுஷா சிவனேசன் -3ஏ, அம்பிகை பஞ்சலிங்கம்-ஏ,2பி வாசுகி தெய்வேந்திரன்- ஏ,2பி வைஷ்ணவி விஜயரட்ணம்-3பி, குபேரகா ஜெயகுமார்-2ஏ,பி ,விவேகா ஜெயகுமார் -2ஏ,சி ,டென்ஷியா கோணேஸ்வரன் -ஏ,பி,சி ,கமலபவானி சிவபாலன் -ஏ,பி,சி, நிஷாலினி தர்மகுலசிங்கம்-ஏ,பி,சி, பிரசாந்தினி துரைசிங்கம் - ஏ, பி,சி, கிரிதா ஜெகராஜா -ஏ,2சி ,மேரி இஸபெல்லா அல்பன் அல்வீனஸ் ஜெயகுமார் -ஏ,பி,எஸ், சந்துஷா தயாணிதி -ஏ,பி,எஸ் ,

(3-14)

## பாட மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்

தமிழ்ப் பாடத்தில் முதுகலைமாணி, முதுதத்துவமாணி பட்டங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வி பட்டதாரி ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டிருப்பின் பாடமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

கலந்துரையாடலில் பங்குபற்றுவோர் நியமனக் கடிதம் பட்டச் சான்றிதழ்கள் ஆகிய வற்றின் பிரதி களைக் கொண்டு வருமாறு வட மாகாணக் கல்வி அபிவிருத்தி குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (3-13)

## திருநாள் திருப்பலி

குருநகர்,பெப்.2

குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலிகள் இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளன. இன்று காலை 5.15 மணிக்கு முதலாம் திருப்பலியும் தொடர்ந்து காலை 6.30 மணிக்கு திருவிழாவுக்கான கூட்டுத் திருப்பலியும் இடம்பெறும். திருச் சொருபப் பவனி இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும். (3-51)

## சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம் நாளை

சுவாமி விவேகானந்தரின் 151 ஆவது ஜெயந்திவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதனார் மடவீதி, உரும்பிராய் சந்தி இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை, கவியரங்கம் ஆகிய நிகழ்வுகளும் விவே கானந்தர் பற்றிய சிறப்புரைகளும் இடம்பெறும். (3-13)

# பவிதரனின் வேகப்புயல் சுருட்டியது மகாஜனவை

## கொக்குவில் இந்து வென்றது 2 இலக்குகளால்

வலி.வடக்கு,பெப்.2

கொக்குவில் இந்துக் கல்லூரி வீரன் பவிதரன் இரண்டு இனிங்ஸுகளில் கலக்கலாகப் பந்துவீசி 13 இலக்குகளைச் சாய்க்க, கொக்குவில் இந்துக்கல்லூரி கிரிக்கெட் அணி இலகுவாக வெற்றியை தொட்டது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டமொன்றிலேயே இந்த வெற்றியை 2 இலக்குகள் வித்தியாசத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி சுவைத்ததது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் கொக்குவில் இந்துக்கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 41.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலகுகளையும் இழந்து 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

ரமேஷ்குமார் 16 ஓட்டங்களையும், சுவஸ்கன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பவிதரன் மிகச் சிறப்பான பந்து வீச்சுப் பெறுபேற்றை வெளிப்படுத்தினார் அவர் 15.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி, 6 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் அடங்கலாக 21 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளைச் சாய்த்தார்.

அவருக்குத் துணையாக அந்த அணியின் சிலோஜன் 12 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி, 5 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் உட்பட 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 40.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பங்குஜன் 20 ஓட்டங்களையும், பார்த்தீபன் 19 ஓட்டங்களையும், சத்தியன் 18 ஓட்டங்களையும், ரிஷாந்தன், சிலோஜன், துலக்ஷன் ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 15 ஓட்டங்கள் பெறப்பட்டன.

மகாஜானக்கல்லூரியைச் சேர்ந்த கஜந்தன் 13.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்ட மற்ற பந்துப் பரிமாற்றங்கள் அடங்காக 28 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், ஜெனந்தன் 13 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 பந்துப்பரிமாற்றங்கள் உட்பட 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், ரமேஷ்குமார், 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி ஓர் ஓட்டத்தினை மாத்திரம் கொடுத்து 2 இலக்குகளையும் , திலக்ஷன் 29 ஓட்டங்களைக் கொடுத்து இலக்கினையும் கைப் பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்ஸுக்காக மீண்டும் களமிறங்கி துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 40.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜனந்தன் 36 ஓட்டங்களையும், துவாரகன், திலக்ஷன் ஆகியோர் தலா 22 ஓட்டங்களையும், சத்தீபன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பவிதரன் இரண்டாவது இன்னிங்ஸிலும் விஸ்வரூபம் எடுத்தார். அவர் 15.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்ட மற்ற பந்துப்பரிமாற்றங்கள் அடங்கலாக 60 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளை வேட்டையாடினார்.

அவருக்கு பக்கபலமாக மீண்டும் கூட்டணி அமைத்த சிலோஜன் 16 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்ட மற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை சாய்த்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 28.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. இதனால் இரண்டு இலக்குகள் வித்தியாசத்தில் மகாஜனா அணியை கொக்குவில் இந்து அணி தோற்கடித்தது.

இதில் பிரதாபன் 22 ஓட்டங்களையும், ஆதித்தன் 16 ஓட்டங்களையும், பவிதரன் 13 ஓட்டங்களையும், தனலக்ஷன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கஜந்தன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், ரமேஷ்குமார் 12 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், ஜெனந்தன் 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள். (ந-86)

## இன்றைய ஆட்டங்கள்

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை மோதவுள்ள அணிகள் வருமாறு-

பிற்பகல் 3மணி

கரவெட்டி மைக்கல் வி.க. எதிர் நாவற்குழி சரஸ்வதி வி.க.

பிற்பகல் 4 மணி

பண்டத்தரிப்பு சாந்தை வி.க எதிர் அளவெட்டி பாரதி வி.க

★ ★ ★

தேசத்தின் மகுடத்துக்கான வடமாகாண கடற்கரை கரப்பாந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

★ ★ ★

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் லீக்குகளுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளஆட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது.

* * *

மணிவதனன்- ஜெயசித்திரா சகோதரர்களின் 18ஆவது அண்டு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக, யாழ். மாவட்ட கரம் சங்கத்தின் அனுசரணையுடன் மணி விளையாட்டுக் கழகம் நடத்தும் கழகங்களுக்கு இடையிலான கரம் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

* * *

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை ஆர்.டி.எஸ். மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

* * *

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பிற்பகல் 3 மணி

அராலி கலைவாணி வி.க. எதிர் அராலி ஏ.எல்.வி.க

பிற்பகல் 3 மணி

தெல்லிப்பழை நாமகள் வி.க. எதிர் அராலி சில்வெஸ்ரார் வி.க ."ஏ" அணி

* * *

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி இன்று சனிக்கிழமை புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ந-23-17-100)

## பொம்மர்ஸ் வெற்றிக் கிண்ண உதைபந்து முடிவுகள் சில

யாழ்ப்பாணம்.பெப்.2

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் இடம் பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு-



முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. இதில் மிகச் சிறப்பாக ஆடிய மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றனர். இதனால் ஆட்டம் சமனிலையில் காணப் பட்டது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலைதவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் அசத்திய சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் 4:2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்னொரு ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு கழக அணியும், கலைமதி விளையாட்டுகழக அணியும் ஒன்றையொன்று எதிர்த்து ஆடின. இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுகழக அணி கோல் மழை பொழிந்து 5:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுகழக அணிக்கும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுகழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில்

ஊரெழு றோயல் விளையாட்டுகழக அணி ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தி இறுதியில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)

## இணுவில் பொது நூலகம் நடத்தும் கிரிக்கெட்,கரம், சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.2

இணுவில் பொது நூலகம் தனது 11 ஆவது ஆண்டு புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது. இதில் கிரிக்கெட், கரம், சதுரங்கப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி 7 பேர் பங்கு பற்றும் அணியையும், 6 பந்துப் பரிமாற்றங்களையும் கொண்டதாக அமையவுள்ளது. கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.

சதுரங்கச்சுற்றுப்போட்டி திறந்த போட்டியாக இடம் பெறவுள்ளது. இதற்குரிய விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் மார்ச் மாதம் 2ஆம் 3ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

இதேபோன்று கரம் சுற்றுப்போட்டியும் திறந்த போட்டியாகவே இடம்பெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி மார்ச் மாதம் 1ஆம் திகதியாகும். போட்டிகள் மார்ச் மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை இணுவில் பொது நூலகத்தில் பெற்று ஒப்படைக்குமாறும், மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் இணுவில் பொது நூலகத்தினர் அறிவித்துள்ளனர். (ந)

## திருநாவலூர் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

மேலைப்புலோலி திருநாவலர் விளையாட்டுக் கழகம் ஆறு பேர் பங்குபற்றும் மட்டுப்படுத்தப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

போட்டிகள் யாவும் அல்வாய் கிழக்கு மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன .

இந்த சுற்றுப்போட்டி யாழ்.மாவட்ட ரீதியில் இடம்பெறவுள்ளது. எனவே திருநாவலர் விளையாட்டுக்கழகம், திருநாவலர், மேலைப் புலோலி, பருத்தித்துறை என்ற முகவரியுடன் இன்று தொடர்பு கொண்டு தமது விண்ணப்பங்களை கையளிப்பதன் மூலம் விளையாட்டுக் கழகங்கள் சுற்றுத் தொடரில் கலந்து கொள்ளமுடியும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ந-8)



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியையொட்டி வீதி ஓட்டப்போட்டி இடம் பெற்றது. இதில் கல்லூரியின் உயர்தரப்பிரிவில் கல்வி கற்கும் விழிப்புணர்வற்ற வாழ்வக மாணவன் எஸ்.விஜேந்திரன் குறித்த முழுத்தூரத்தையும் ஓடி முடித்து பார்ப்போரைஆச்சரியப்படுத்தினார் (ந-86-23)

# தீவுகளைச் சுருட்டியது ஆஸி.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும்,





அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 9 இலக்குகளால் இலகுவாக வெற்றிபெற்றது.



பேர்த் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 23.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதலாவது இலக்கை 14 ஓட்டங்களுக்கு இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. அதன் பின்னர் 36 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட போதிலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி 70 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.



துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பாக அதிக பட்சமாக அணித்தலைவர் டெரன் சமி 16 ஓட்டங்களையும், கெரன் பவல், டெரன் பிராவோ ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 20 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், கிளின்ட் மக்காய் 10 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஜேம்ஸ் ஃபோள்க்னர் 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

71 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 9.2 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளென் மக்ஸ்வெல் 35 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றார். வீழ்த்தப்பட்ட இலக்கை ஜேஸன் ஹோல்டர் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலியாவின் மிற்சல் ஸ்ரார்க் தெரிவானார். (ந)

# தமிழ் வீராங்கனையால் இந்தியாவுக்கு வெற்றி

மகளிர் உலகக்கிண்ணத் தொடரை இந்திய அணி வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது இந்திய அணி. இதில் தமிழக வீராங்கனை காமினி சதம் அடித்து அசத்தினார்.

பத்தாவது மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்றுமுன்தினம் மும்பையில் தொடங்கியது. இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 8 அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் லீக் முறையில் நடைபெறுகின்றன. நேற்றுமுன்தினம் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இந்திய அணிக்கு பூனம் ராத், திருஷ் காமினி முருகேசன் இணை அபாரமான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. செல்மான் பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து இரு பவுண்டரிகள் அடித்த காமினி, டெய்லர் பந்திலும் ஒரு பவுண்டரி விளாசினார்.




மறுமுனையில் இவருக்குச் சிறப்பான இணைப்பாட்டத்தைக் கொடுத்த பூனம் ராத், ஒரு நாள் ஆட்டத்தில் 6 ஆவது அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடியைப் பிரிக்க மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் அகுலெய்ரா எடுத்த எந்த முயற்சியும் பலிக்கவில்லை. முதல் இலக்குக்கு 175 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பூனம் ராத் (72) வெளியேறினார்.

பின்னர் களமிறங்கிய கோஸ்வாமி, தாலே மற்றும் அனிஷா ஆகியோர் முகமதின் பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து தலா இரு பவுண்டரிகள் அடித்து அசத்தினர். சர்வதேச ஒரு நாள் ஆட்டத்தில் முதல் சதம் அடித்த காமினி




(100) துரதிருஷ்டவசமாக 'ரன் அவுட்'டானார்.

கோஸ்வாமி 21 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்தார். பின் வந்த ஹர்மன்பரீத் கவுர் (36) ஆறுதல் தந்தார். மல்கோத்ரா (3), நிரஞ்சனா (2) நிலைக்கவில்லை. இந்திய அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 284 ஓட்டங்கள் எடுத்தது. அமிதா சர்மா (8), அணித்தலைவர் மிதாலி ராஜ் (1) வெளியேறாமல் களத்தில் இருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த டாட்டின் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

கடினமான இலக்கைத் துரத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதுவுமே சரியாக அமையவில்லை. அணிக்காக ஓட்டக் கணக்கை தொடக்கும் முன்பே, கைசியா நைட் 'டக் அவுட்'டானார். ஸ்டெபானியே டெய்லர் (9), கைசோனா நைட் (11) ஏமாற்றினர்.

கேம்பெல்லே 21 ஓட்டங்கள் எடுத்து நிரஞ்சனா வேகத்தில் வீழ்ந்தார். தொடர்ந்து அசத்திய இவர், டாட்டின் (39), அகுலெய்ரா (18) இருவரையும் வெளியேற்ற, இந்திய அணியின் வெற்றி உறுதியானது.

தாலே 28 ஓட்டங்கள் எடுத்துத் திரும்பினார். சற்றுத் தாக்குப்பிடித்த குயின்டைன் 17 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்மார்ட் (6), செல்மான் (2)



இருவரையும் கோஸ்வாமி திருப்பி அனுப்ப, மேற்கிந்தியத் தீவுகள் அணி 44.3 பந்துப்பரிமாற்றங்களில் 179 ஓட்டங்களுக்கு சுருண்டு, 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.
இந்தியா சார்பில் நிரஞ்சனா 3, கோஸ்வாமி, சுல்தானா தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

நேற்று ஒரு நாள் போட்டி அரங்கில், தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார் தமிழகத்தின் திருஷ் காமினி முருகேசன், வயது 22. கடந்த 1990 ஆம் ஆண்டில் சென்னையில் பிறந்த இவர், ஒன்பது வயதில் தந்தையுடன் இணைந்து கிரிக்கெட் ஆடத் தொடங்கினார்.

தனது 16 ஆவது வயதில் ஜெய்ப்பூரில் நடந்த, ஆசியக் கிண்ணப் போட்டியில், பாகிஸ்தான் அணிக்கு எதிராக 19 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து, 3 இலக்குகளைக் கைப்பற்றினார். அந்தத் தொடரில் இந்திய அணி வெற்றிக்கிண்ணத்தை வென்றது. இதில் பந்துவீச்சில் அசத்திய காமினி 8 இலக்குகள் வீழ்த்தி, தொடர்நாயகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இடது கை ஆட்டக்காரரான காமினி, இது வரை 22 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று, 382 ஓட்டங்கள் எடுத்துள்ளார். பந்துவீச்சில் 9 இலக்குளை வீழ்த்தியுள்ளார். தவிர, ஒரு 20/20 போட்டியிலும் பங்கேற்றுள்ளார். சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியொன்றில் முதல் சதம் அடித்த தமிழ் வீராங்கனை என்ற பெருமையை காமினி படைத்துள்ளார். (ந)

## PHYSICS Day Classes

துரித மீட்டல் ஆரம்பம் (04-02-2013)

முத்தட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு. (0213734114)

By.Kajan

## கணக்கீடு

திரு. பாலகஜன் B.COM (Jaf), H.N.Dip-in-ACC

A/L 2015 புதிய பிரிவு

| | NEC- ஆனைப்பந்தி | புதிய பொருளியல் கல்லூரி, யாழ். நகர். |
|---|---|---|
| பிரிவு I | Sat, Sun 9-10am | Sat, Sun 10-11am |
| பிரிவு II | Sat, Sun 3-4 pm | Tue, Wed 5-6pm |

வெளி மாணவர்களுக்கான பிரத்தியேக, குழு வகுப்புக்கள்

ஆரம்பம் 03/02/2013 ஞாயிறு

உங்களுக்கு விரும்பிய பிரிவுகளில் அனுமதி பெறலாம்.

## To Become as a PHP Programmer

php பார்க்க...

http://gendernetwork.org/phpnatives

## A/L Day Class

கலை, வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்-04.02.2013 திங்கள் 8.00 மணி

* வழமையான ஆசிரியர் குழாம்.

NEW ECONOMICS COLLEGE

மணிக்கூட்டு வீதி, யாழ் நகர் (பெருமாள் கோவில் அருகில்)

## A/L DAY BATCH

வர்த்தகப் பிரிவு

யாழ்-கொழும்பு நகரின் முன்னணி ஆசிரியர் குழாம்

* பொருளியல்- திரு. N.B.கஜீதரன்
* வணிகக்கல்வி-திரு. S.K.பாலசபேஷ்
* கணக்கீடு- திரு. K.B.பாலகஜன்

ஆரம்பம்- 04/02/2013 திங்கள் காலை

* வெளிமாவட்ட மாணவர்களிற்கு முழுப் பாடத்திட்டமும் 6மாதங்களில் முடிக்கப்படும்.
* அனுமதியை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்

(c6147)(3.6)

NEW ECONOMICS COLLEGE

(பெருமாள் கோயில் அருகில்)

மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.

www.ebuybazaar24.com Online Shop & Matrimony

www.ebb24.com உலகத் தமிழர்களை திருமண பந்தத்தில் இணைக்கும் பாலமாக இணையத்தில் இப்போது இனிய உதயம்!

EBB PROPOSAL

உங்கள் துணையை எங்கள் இணையத்தில் தேடுங்கள்!

இலவச பதிவு, வீதலைவர்களுக்கு இலவச சேவை!

அறிமுகச்சலுகை! 1வருட சேவைக்கட்டணம் 3990.00

[இச்சலுகை எதிர்வரும் 28.02.2013 வரை மட்டுமே]

இணைய வசதிகள் இல்லாதவர்கள் இலவச விண்ணப்பப்படிவத்திற்கு அழையுங்கள்.

தொலைபேசி: 021 791 7470

www.ebb24.com



இலங்கையில் நீங்கள் எந்த மூலையில் இருந்தாலும் உள்ளூர் அலுவலகத்தில் பணம் செலுத்தி சாரிகளை வாங்கலாம்!

## யாழ். மற்றும் வவுனியா நகரில் Diploma in Mass Media

### அறிவிப்பாளர் பயிற்சி

(2ஆவது பிரிவு 16 மாணவர்களுடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து 3 ஆவது பிரிவு ஆரம்பம் 10.02.2013 காலை 9.00) வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா!

இதோ...

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களே நீங்களும் அரச, தனியார் வானொலி தொலைக்காட்சிகளிலும் நீங்களும் அறிவிப்பாளர் ஆகலாம்.

(Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத்தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு இன்னும் பல பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழைFM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்.

| வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாணவர்கள். |
|---|---|
| Sun British College<br>No-26 Station Road<br>Vavuniya<br>0777929475. | IISEEE NALLUR CAMPUS<br>No-72, Point Pedro Road,<br>NALLUR, JAFFNA<br>0777929475, 0212224728. |

(27640) (3.6)

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற் கொண்ட மாணவர்கள் அரச, தனியார், வானொலி, தொலைக் காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.

## CHEMISTRY DAY CLASS

பிரிவு II

ஆரம்பம்- 04/02/2013 திங்கள் 12.-01.00 மணி

Basic, General, Inorganic துரிதமீட்டல் வினாவிடை ஒரேவேளையில்

மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு By.அன்பு

புதிய பாடத்திட்ட விடயங்களை உள்ளடக்கிய 25இற்கு மேற்பட்ட கருத்தரங்கு தொடர்

ஆரம்பம்- 04/02/2013 திங்கள் 01.00 மணி

**ORGANIC புதிய பிரிவு**

**Monday 03.00-05.00**

(29106)(3.6)

NEW SCIENCE CENTRE

யாழ்.நகர்.

## பொருளியற் கல்லூரி

நாவலர்றோட், யாழ்ப்பாணம். K.K.S றோட், இணுவில்.

யாழ். மாவட்டத்தில் அதிமுன்னணிப் பெறுபேறுகளைப் பெற்று எமது நிறுனங் களுக்கு பெருமையீட்டித்தந்த அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி. ஏனைய வர்களும் சிறந்தபெறுபேறுகளைப் பெற்றிட

ஆரம்பமாகின்றது!

A/L DAY CLASS

கலை, வர்த்தகப் பிரிவு

05.02.2013 செவ்வாய 8.00 a.m

Note : BARATHY - சித்தங்கேணி. இதேநாளில் இங்கு DAY CLASS ஆரம்ப மாகின்றது.

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

## விற்பனைக்கு

சில காலம் பாவித்த Nokia கைத்தொலை பேசிகள் (Nokia -E5, C2, LG-5365) கண்ணாடி சாப்பாட்டு மேசை, Hero Honda பிளஷர் மோட்டார் சைக்கிள் (கறுப்பு) விற்பனைக்குண்டு.

(29056)(6.7.4)

0721869299

## NEW SCIENCE ACADEMY

வதிரி (மாலுசந்தி அருகில்)

### DAY CLASSES

ஆரம்பம் 02.02.2013

| | | |
|---|---|---|
| உயிரியல் - | பொன். திவாகரன் | |
| இணைந்த கணிதம்- | அருளானந்தம் - | விமலநாதன் |
| இரசாயனவியல் - | தங்கராசா - | சிவத்திரன் |
| பௌதீகவியல் - | சோதிலிங்கம் - | பிரபா |

## வீடு விற்பனைக்கு

கரவெட்டி கோவிற்சந்தை ஞானாசாரியார் வீதியில் பாடசாலை, கோயில் அருகில் 5 அறைகள் கொண்ட சகல வசதியுடனான 4½ பரப்பு காணியை உள்ளடக்கி தென்னை வளத்துடன் கூடிய நான்கு பக்க சுற்று மதில் உள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0773171947(கொழும்பு)

0776315961,0212263555(கரவெட்டி)

(27715)(3.8)

## DCM

யாழ். நகர்

A/L Day Class

கலை, வர்த்தகம்

05.02.2013

காலை 7மணி

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் மிக விரைவில்... T.P.: 021 222 8093

# 61, Kachcheri Nallur Road, Jaffna.

(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## NEW SCIENCE HALL JAFFNA

# 2013 A/L

## Day Class பிரிவு II

* கணித-உயிரியல் பிரிவு *

2012 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது

* எமது வழமையான ஆசிரியர் குழு *

ஆரம்பம் - 05/02/2013

(C/6130)(3.6.7)

## வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை

வவுனியாவில் கணினிப்பயிற்சி நிலையம் ஒன்றை நடத்துவதற்கு நகரை அண்மித்த பகுதியில் வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு-

0721717121,0716182182

(C/6161)(3.6.7)

## டொல்பின் வாகனம் விற்பனைக்கு

182 தொடர் இலக்க டொல்பின் விற்பனைக்குண்டு. வெள்ளை நிறம் நீட்டு மொடல் Dual Ac, Alloyweel நல்ல நிலையில் உள்ள டொல்பின் உடனடியாக விற்பனைக்குண்டு. லீசிங் வசதிகள் உண்டு. உடன் அழையுங்கள்- 0773727376

(27646)(3.6.7)

## Study - Work - Live Abroad

Australia, UK, U.S.A, New Zealand, Canada Swiss, Germany, France, Cyprus, Malta, Romania, Latvia, Russia, Ukraine Malaysia, Singapore

# Top Ranked Universities
# Entry with G.C.E O/L or A/L pending results
# IELTS Not required **
# Free Accommodation **
# Scholarships Available **
# Free IELTS Classes **
# Credit Transfer to year 2/3 available
# Sponsorships Available
# **Low University fee for Europe**

** Conditions Apply

Admissions Open for Next Intake 2013

ICS Study Overseas

தொடர்புகளுக்கு

77, Clock Tower Road, Jaffna

021 7306000 , 077 3013060

www.icslanka.com

## வணிகக்கல்வி

## S.K. Balasabesh (H.N.Dip.in.Acc)

என்னிடம் கல்வி கற்று A,B தர சித்திகளைப் பெற்ற மாணவ சிகரங்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்

| எண் | பெயர் | பெறு பேறு | வணிகக் கல்வி | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| | A | | | |
| (01) | தர்சிகா-U(மன்னார்) | 3A | A | 7 |
| (02) | தீபிகா-V | 3A | A | 13 |
| (03) | அனித்தா-A(முல்லைத்தீவு) | 2AC | A | 13 |
| (04) | பகீரதி - P | 3A | A | 21 |
| (05) | தர்சினி - S | 3A | A | 24 |
| (06) | குயாலா -B | 3A | A | 28 |
| (07) | கீர்த்தி | 3A | A | 41 |
| (08) | லகிதா-T | 2AB | A | 61 |
| (09) | சரண்ராஜ் -A | 3A | A | 65 |
| (10) | பஞ்சுகா-K | 2AB | A | 68 |
| (11) | பத்மநிதர்சன்-S | 2AB | A | 84 |
| (12) | சுமனஜா-J | 2AB | A | 105 |
| (13) | மனோஜன்-T | A2B | A | 107 |
| (14) | மேகலா-T | 2AB | A | |
| (15) | ஜீவிதா-J | 2AB | A | 98 |
| (16) | நிறோஜன் | 2AB | A | |
| (17) | றெஜினோல்ட் | A2B | A | |
| (18) | வைஷ்ணவி | ABC | A | |
| (19) | சுமண்ராஜ் | ABC | A | |
| (20) | நிருஜா | ACC | A | |
| | B | | | |
| (21) | சயனி (மன்னார்) | A2B | B | 27 |
| (22) | மஞ்சுதன் | A2B | B | |
| (23) | கலிசாந் | ABC | B | |
| (24) | லதுசியன் | 3B | B | |
| (25) | யதுர்சன் | 3B | B | |
| (26) | தேவதாஸ் | 2AB | B | |
| (27) | றோலான்சி | ABC | B | |
| (28) | ரேச்சல் பிரியங்கா | 2BC | B | |
| (29) | இசையரசி | 2BC | B | |
| (30) | ஜெகானி | | B | |
| (31) | தியானா | | B | |
| (32) | தர்சிகா-J | | B | |
| (33) | கேமா-S | | B | |
| (34) | நோயல் | | B | |
| (35) | பாணு | | B | |
| (36) | சஞ்ஜீவன் | 2AB | B | |
| (37) | கரன் | 2AB | B | |
| (38) | லாவண்யன் | | B | |
| (39) | லக்ஸ்மன் | | B | |
| (40) | லதாங்கி | ABC | B | |
| (41) | ஆதனா | | B | |
| (42) | சொரூபன் | | B | |

(C/6134)(6.7.11.2)

என்னிடம் கல்வி கற்ற அனைத்து மாணவர்களும் 100% சித்தியடைந்துள்ளனர். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்

## New Economics College

மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர் (பெருமாள் கோயில் அருகில்)

| HAC | BPI | COC |
|---|---|---|
| சித்தங்கேணி | குருநகர் | சுன்னாகம் |

"A" என்ற அருங்கனியைப் பெற்றிட என்னுடன் இணையுங்கள்

## THE SCIENCE CORNER

Clock Tower Lane, Jaffna.

புதிய பிரிவு

DAY CLASS 2013

ஆரம்பம் : 02.02.2013

சனி காலை 10.00

| PHYSICS | BIOLOGY | CHEMISTRY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | பொன்திவாகரன் | BENO | சிவகரன் |
| செந்தில் | குகானந்தன் | சிவகுமார் | |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திறமை உள்ளவனுக்கே மீண்டும் உதவி செய்பவன், கொல்லன் வீதியில் ஊசியை விற்கும் பைத்தியக்காரனை போன்றவன்.- விவேகானந்தர்

# வார வசந்தம்

01

உதயன் | 02 பெப்ரவரி 2013 | ஃசனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு



"போராட்ட வாழ்க்கையில் தன்னைச் சமாளிக்கவும் வேட்டையாடலில் வில் முதலியவற்றைப் பயன்படுத்தவும் போரில் ஈடுபட உடல்வலிமை பெறுதலும் விளையாட்டுகளுக்குத் தோற்றமாக அமைந்தன."

# தமிழர் பண்பாட்டு விளையாட்டுக்கள்

■ வி. ரமேஷ்குமார்

விளையாட்டு மனிதனின் உடன்பிறப்பு ஆகும். சமுதாயம் தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது சமுதாயம் ஆடிய விளையாட்டும். ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாட்டோடு இணைந்ததே அந்தந்த நாட்டின் விளையாட்டுகள். விளையாட்டுகள் பொழுது போக்கிற்கு மட்டுமன்றி உடல் நலம் மனநலம் பேணுபவையாகவும் உள்ளன.

மனித வரலாற்றில் ஆய்ந்து நோக்கின் முதலில் இயற்கையுடனும், பின்னர் விலங்குகளுடனும் போராட வேண்டியிருந்தது. பின்னர் வாழ்க்கைக்காகப் போராட வேண்டியிருந்தது. போராட்ட வாழ்க்கையில் தன்னைச் சமாளிக்கவும் வேட்டையாடலில் வில் முதலியவற்றைப் பயன்படுத்தவும் போரில் ஈடுபட உடல்வலிமை பெறுதலும் விளையாட்டுகளுக்குத் தோற்றமாக அமைந்தன.

**விளையாட்டு-விளக்கம்:-**

ஆங்கிலத்தில் (Play, Game, Sports) என்னும் சில சொற்கள் வழக்கில் இருப்பது போல, தமிழிலும் ஆடல், ஆட்டு, ஆட்டம், விளையாட்டு போன்ற சொற்கள் காணப்படுகின்றன. ஆடு என்னும் வினைச் சொல்லோடு ஆல் என்னும் தொழிற் பெயர் விகுதியைச் சேர்க்க ஆடல் என்னும் பெயர்ச்சொல் தோன்றுகிறது. இது கூத்து, விளையாட்டு என்னும் பொருள்களில் ஆளப்படுகிறது.

பாடு என்னும் வினையடிச் சொல்லிலிருந்து பாட்டு என்னும் பெயர்ச்சொல் தருவிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக. இதனை,

மன்று தொறு நின்ற குரவை சேரிதோறும்
உரையும் பாட்டும் விரைஇ என்னும்

மதுரைக் காஞ்சி அடிகளைக் கூறலாம். இப்போது ஆட்டு என்ற சொல்லோடு ஆம் என்னும் விகுதி சேர்ந்து ஆட்டம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம். மொழிப்புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் விளை என்றால் விருப்பம் எனப் பொருள் கொண்டு விரும்பியாடும் விளையாட்டு என்று விளக்குகிறார்.

சங்க இலக்கியத்தில் விளையாட்டு என்பது பெரும்பாலும் நிலத்தில் ஆடப்படுகின்ற விளையாட்டோடு சேர்ந்து காணப்படுகிறது. ஆடுதல் என்பது நீரோடு சேர்ந்து சங்க இலக்கியத்தில் வருகிறது.

**விளையாட்டு-வரைவிலக்கணம்:-**

விளையாட்டு என்றால் என்ன என்பதற்குப் பழங்காலப் புலவர்கள் வரையறுத்துக் கூறவில்லை. இருப்பினும் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகை களன்களைக் கூறுமிடத்துத் தொல்காப்பியர் விளையாட்டையும் ஒன்றாகக் கூறுகின்றார். இதிலிருந்து மன மகிழ்ச்சி ஊட்டும் ஒரு செயலே விளையாட்டு என்னும் வரைவிலக்கணத்தைப் பெறலாம்.

**விளையாட்டு - வகைப்பாடு:-**

தொல்காப்பிய உரியியலில்



கெடவரல் பண்ணை ஆயிரண்டு விளையாட்டே (உரி 21) என்ற நூற்பாவில் இருவகைப்பட்ட விளையாட்டுகளைத் தொல்காப்பியர் விளக்குகிறார்.

1. நீர் விளையாட்டு
2. நில விளையாட்டு

என்று பிரித்துக் கூறுவர். பொதுவாகத் தற்காலத்தில் பால், வயது, இடம், கருவி, உடலின் பங்கு, மனத்தின் ஈடுபாடு ஆகிய கூறுகளின் அடிப்படையில் வகைப்படுத்துவர்.

தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் இன்றும் பல விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. இவ்விளையாட்டுகளை அறிதல் தமிழரின் தொன்மையை அறிவதற்குச் சான்றாக அமையும். கிராமப்புறங்களில் விளையாடும் ஆடவர் விளையாட்டு மகளிர் விளையாட்டு, சிறுவர் சிறுமியர் விளையாட்டு முதலிய விளையாட்டுகளைப் பலவாறு வகைப்படுத்தலாம். குறிப்பாக தமிழர்களிடையே நூற்றுக்கு மேற்பட்ட விளையாட்டுக்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

**1. சிலம்பாட்டம்:-** கையிலுள்ள கம்பினை வீசி ஒலி எழுப்ப விளையாடும் விளையாட்டிற்குச் சிலம்பாட்டம் என்று பெயர். கம்பு வீசுந்திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாக வீசுந்திறன் இம்மூன்றும் சிலம்ப விளையாட்டில் அடிப்படைகளாகும். இது வீரத்தின் அடிப்படையில் எழுந்த விளையாட்டாகும். இச்சிலம்பாட்டத்தினை மராட்டிய மொழியில் லாட்டி என்றும், குஜராதி மொழியில் டல்லாக்கடி என்றும் வங்க மொழியில் லாடி சிலா என்றும் மலையாளத்தில் நெடுவடி என்றும் வழங்குவர்.

**2. சடுகுடு:-** சடுகுடு விளையாட்டைப் பழந்தமிழரின் விளையாட்டென்பர். இதனைப் பலிஞ்சடுகுடு என்றும் பலின் சடுகுடு என்றும் கபடி என்றும் கூறுவர். இதனைப் பலின்சப்பளம் எனத் தெலுங்கிலும் வழங்கப்படுகிறது. இவ்விளையாட்டைத் தொல்காப்பியர், வெட்சிவீரன் நிரைகவர்தலும் கரந்தை வீரன் மீட்பதுமாகிய செயல்கள் இருந்தன. இதனடிப்படையில் போரும் எழுந்தது. போரில் வெற்றியடையக் காளியை வணங்கினர். போரின் செயல்பாடு விளையாட்டிலும் இருப்பதால் பலிசடுகுடு என்று மாறிவந்திருக்கலாம்.

இவ்விளையாட்டினை இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நின்று விளையாடுவர். ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் போகும் போது அப்பக்கத்திலுள்ள வரைத் தொட்டுவிட்டால் விளையாட்டிலிருந்து வெளியேற வேண்டும். இவ்விளையாட்டு இன்றும் கிராமப்புறங்களில் பகலிலும், இரவிலும் நடைபெறுவதுண்டு. தமிழர் பண்பாட்டை காக்க விழைவோர் இவ் விளையாட்டை ஊக்கப்படுத்தி வளரச் செய்ய வேண்டும்.



**3. பதினைந்தாம் புலி:-** இந்த விளையாட்டினைப் பதினைந்தாம் புலி என்றும் ஆடுபுலிஆட்டம் என்றும் கூறுவர். இருவர் பங்குகொள்ளும் இவ்வாட்டத்தில் (ஆடாக இருப்பவர்) பதினைந்து காய்களையும், (புலியாக இருப்பவர்) மூன்று காய்களையும் வைத்து விளையாடுவர். ஆடாக இருப்பவர் காய்களை நகர்த்திக்கொண்டே இருக்க, ஒரு காய் இருக்குமிடத்தில் ஒரு புள்ளியில் காய் இல்லாவிட்டால் அக்காயை வெட்டலாம். புலியின் காய்களை நகர்த்த முடியாத அளவிற்குக் காய்களை வைத்துவிட்டால் ஆடாக இருப்பவர் வெற்றி பெறலாம். காய்களைப் பார்த்து அடைபடாமல் தப்பித்து எதிரியின் காய்களை வெட்டி முடித்துவிட்டால் புலியாக இருப்பவர் வெற்றி பெறலாம். இதனை பொது இடங்களில் கிராமப்புறங்களில் காணலாம்.

**மகளிர் விளையாட்டு:-**

**1. தாயம்:-** மகளிர் விளையாடும் இவ்விளையாட்டினைத் தாயம் என்றும் விளையாடுவதற்கு வரையப்படும் தாயக் கட்டம் என்றும், உருட்டும் பகடையைத் தாயக்கட்டை என்றும் கூறுவர். சோழிகள் முதலியவற்றை வைத்து விளையாடுவர். நான்கு கட்டத்தாயம், 8 கட்டத் தாயம், 10 கட்டத் தாயம் எனப் பலவகையுண்டு. குறைந்தது இருவர் விளையாட்டில் பங்கு கொள்வர்.

**2. பல்லாங்குழி:-** பல்லாங்குழி என்பதனைத் தமிழ்ப் பேரகராதி பதினான்கு+குழி என்றும், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பண்ணை+குழி என்றும் எஸ். நடராஜ் செல்லையா பல்-அம்-குழி என்றும் இரா. பாலசுப்பரமணியம் பரல்+ஆடும்+குழி என்று பிரித்து விளக்குவார்.

மேலும், பண்ணை என்பதற்கு நிலம் என்ற மற்றொரு பொருளும் உண்டு. நிலத்தில் குழி தோண்டி ஆடிய விளையாட்டு என்பதால் பண்ணைக்குழி விளையாட்டு திரிந்து பண்ணாங்குழி என்றும் பல்லாங்குழி எனவும் வழங்கப்படுகின்றது.

(வளரும்)

# திறமை இருந்தும் தோல்வி ஏன்?




■ என்.கணேசன்

நமது அன்றாட வாழ்க்கையில் பல துறைகளில் பல திறமையாளர்களைப் பார்க்கிறோம். நாளடைவில் அவர்களில் மிகச் சிலரே அந்தந்த துறைகளில் வெற்றி அடைகிறார்கள் என்பதையும் பெரும்பாலானோர் நாம் எதிர்பார்த்த அளவு சாதனைகள் புரியாமல், இருந்த சுவடே தெரியாதபடி காணாமல் போவதையும் பார்க்கிறோம். அப்போதெல்லாம் நம்மால் வியப்படையாமல் இருக்க முடிவதில்லை.

அதுவும் வெற்றியடைந்தவர்களை விட அதிகத் திறமை கொண்டவர்கள் என்று நாம் கணித்தவர்கள் சாதிக்காமல் போய் விடும் போது, அது ஏன் என்ற ஒரு மிகப் பெரிய கேள்வி எமக்குள் எழாமல் இருப்பதில்லை. அதற்கு 'விதி' என்ற மிக வசதியான பதிலை எமக்கு நாமே சொல்லிக் கொள்கிறோம். ஆனால் அபூர்வமாய் ஒருசில விதி விலக்குகள் தவிர அந்த விதி அவரவர்களால் எழுதப்படுவது அல்லது ஏற்படுத்திக் கொள்ளப்படுவது என்பதே நிதர்சனமான உண்மை. ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் தோல்வி அடையும் அனைவருக்கும் பொதுவாக மூன்று குணாதிசயங்கள் இருப்பதை நம்மால் காண முடியும். அதில் முதலாவது, அவர்களுக்குள்ளே சாதனை புரிந்தே ஆக வேண்டும் என்ற அக்கறை இருப்பதில்லை.

இது இல்லாத வரை எத்தனை திறமை இருந்தாலும் அது பிரகாசிப்பதில்லை. இரண்டாவது, அவர்களின் ஈடுபாடுகள் சீராகவும், தொடர்ச்சியாகவும் ஒரே விஷயத்தில் இருப்பதில்லை. இன்று ஒன்றில் ஈடுபாடு, நாளை வேறு ஒன்றில் தீவிர ஈடுபாடு, சில நாட்களில் புதிதாக ஒன்றில் பேரார்வம் என்று மாறிக் கொண்டே போகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் பல நல்ல ஆரம்பங்கள் இருக்கின்றன, திறமைக்கும் குறைவில்லை என்றாலும் எதிலும் முழுமை இருப்பதில்லை. மூன்றாவது, அவர்கள் வெற்றிவரும் வரை பொறுமையாக தாக்குப் பிடித்து நிற்பதில்லை. தற்காலிகத் தோல்விகளிலேயே பின்வாங்கி விடுகிறார்கள். தற்காலிக தடங்கல்களும், நிராகரிப்புகளும், தோல்விகளும் முயற்சிகளைக் கைவிடப் போதுமானவையாக இருக்கின்றன. இந்த மூன்று தவறுகளையும் வெற்றியாளர்கள் செய்வதில்லை. இதைத் தங்கள் துறையில் சிகரத்தை எட்டிய இருவரின் வாழ்க்கை அனுபவங்களைப் படித்தால் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

பாஸ்கல் (Pascal) என்கிற கணித மேதையை அறியாதவர் இருக்க முடியாது.



அவர் பிற்காலத்தில் தத்துவஞானியாகவும் விளங்கினார். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் சட்டம் மட்டுமே மேல்நிலை மக்களின் கௌரவமான தொழிலாக கருதப்பட்டது. எனவே அவர் தந்தை, மகன் சட்டப் பேரறிஞனாக வர வேண்டும் என்று ஆசைப்பட்டார். பாஸ்கலோ கணிதத்தில் தான் மிகுந்த ஈடுபாடுடன் இருந்தார். எத்தனை அறிவுரை கூறியும் மகன் மாறாததைக் கண்ட தந்தை கடைசியில் மகனை சட்டப் புத்தகங்கள் மட்டுமே நிறைந்த அறையில் வைத்துப் பூட்டி வைத்தார்.

உள்ளே கணிதக் கோட்பாடுகளை மகன் எழுதிக் கொண்டு இருப்பதை பின்னர் கண்டு பிடித்து அங்கிருந்து எழுத்துக் கருவிகள், தாள்கள் அனைத்தையும் அப்புறப்படுத்திப் பார்த்தார். ஆனால் பாஸ்கலோ, கரித்துண்டில் தரையில் எழுதிப் பார்க்கத் தொடங்கினார். கடைசியில் தந்தை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அவர் ஆவலுடன் தன் கணித ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் பிற கணித மேதைகள் இவருடைய வித்தியாசமான, புதிய கோட்பாடுகளை அங்கீகரிக்கவில்லை. ஆனால் அவர் பொருட்படுத்தாமல் தொடர்ந்தார். தடங்கல்களைக் கண்டு தளராமல் தொடர்ந்த இத்தகைய ஈடுபாட்டிற்குப் பின் வராத வெற்றியும் உண்டா? வெற்றியும், புகழும் கடைசியில் அவருக்கு உலக அளவில் கிடைத்தன.


பெர்னார்ட் ஷா (Bernard Shaw) எழுதுவதில் காட்டிய ஈடுபாடு மகத்தானது. இளம் வயதில் வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு வேலை செய்து கொண்டிருந்தாலும், தினமும் குறைந்தது ஐந்து பக்கங்களாவது எழுதுவது என்று உறுதியுடன் ஓய்வு நேரங்களில் தொடர்ந்து எழுதி வந்தார். அதைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கும், பிரசுரங்களுக்கும் அனுப்பியும் வந்தார்.

எழுதி அனுப்பிய முதல் ஒன்பதாண்டுகளில் அவருக்குத் தாள், பேனா மை, தபால் செலவுகளுக்கான பணம் கூடக் கிடைக்கவில்லை என்பது தான் கசப்பான உண்மை. ஓரிரு தோல்விகளைக் குறுகிய காலத்தில் சந்தித்தாலே மனம் ஒடிந்து போகும் மனிதர்கள் மத்தியில் ஒன்பதாண்டு காலம் தொடர்ந்து சந்தித்த தோல்விகளையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து எழுதி பிற்காலத்தில் பிரபலமாகி மிகப் பெரிய செல்வந்தரானார். அவர் எழுத்து இன்றளவும் பேசப்பட்டும், மேற்கோள் காட்டப்பட்டும் வருகிறது என்பது வரலாறு.

இவர்கள் எல்லாம் தொடக்கத்தில் சந்தித்த எதிர்ப்புகளும் தோல்விகளும் கொஞ்சமல்ல. வெற்றி சுலபமாக வந்து விடவுமில்லை. இடைக்காலத்தில் விதி என்று தீர்மானித்துக் கொண்டு தங்கள் பாதைகளில் இவர்கள் திரும்பிப் போய் விடவில்லை. தங்கள் பார்வைகளையும், ஈடுபாடுகளையும் வேறிடத்திற்குத் திருப்பக் கொள்ளவும் இல்லை. உலகம் தோல்வி என்ற சான்றிதழைத் திரும்பத் திரும்பத் தந்தாலும் அவர்கள் அதை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. அவர்களுக்கு உள்ளே இருந்த அக்கறை வெளியே இருந்த இருண்ட சூழ் நிலைகளிலும் ஒளி கொடுத்து வழி காட்டியது. வெற்றி வரும் வரை காத்திருந்தார்கள். தங்கள் விதியைத் தீர்மானிக்க மற்றவர்களுக்கு அவர்கள் அனுமதி தரவில்லை.

எனவே திறமை இருப்பவர்களே, ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள். திறமை மட்டுமே போதுமானதல்ல, அது வெறும் ஆரம்பம் மட்டுமே என்பதை மனதில் வையுங்கள். உடனடி லாட்டரி போல வெற்றி வந்து மடியில் விழும் என்று எண்ணாதீர்கள். தடங்கல்கள் சகஜம் என்று எதிர்பார்த்துத் தயாராக இருங்கள். உங்கள் சக்திகளை எதிர்மாறான பல துறைகளில் அடிக்கடி தாவி சிதறடிக்காதீர்கள். தொடர்ந்து ஈடுபாடு குறையாமல் செயற்படுங்கள். தோல்விகளில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். துவண்டு விடாதீர்கள். நீங்களாக ஏற்றுக் கொள்ளாத வரை தோல்வி நிரந்தரமல்ல. அது வெற்றிக்கு முந்தைய இடை நிலையே. பொய்யான விதியை ஏற்றுக் கொண்டு முயற்சியைக் கை விட்டு விடாதீர்கள். விதியின் நாயகனான இறைவன் திறமையை உங்களுக்குத் தந்திருக்கிறார் என்றால் அது நீங்கள் வெற்றி பெறவே என்பதை என்றும் மறந்து விடாதீர்கள். ★

# எல்லோருக்குமான நியாயங்கள்



■ வலையவன்

காலையில் எழுந்து நாளிதழ்களை வாசித்தால் மனதுக்கு உற்சாகமூட்டும் செய்திகளைத் தேடினாலும் கிடைப்பதில்லை. மனதை வலிக்கச் செய்யும், ரணத்தை உண்டாக்கும் செய்திகள் தான் பரவிக் கிடக்கின்றன. வெறும் எழுத்துகளால் ஆன சட்டங்கள், ஆறறிவு மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன. இதற்கே நாம் வெட்கப்பட வேண்டும். பகுத்து அறியும் மனிதன் சுயகட்டுப்பாட்டை இழந்ததனால்தானே சட்டங்கள் உருவாக்கப்பட்டன?

காக்கையைப் போல ஒற்றுமை; தேனீயைப் போல உழைப்பு; எறும்பைப் போல சுறுசுறுப்பு; வாழையைப் போல வாழ்வு. இவையெல்லாம் மனிதனை விழித்து, மனிதனே கூறியது. இதில் வேடிக்கை என்னவெனில், ஆறு அறிவு படைத்த மனிதன் தன்னை விட அறிவு குறைவாக உள்ள ஒன்றிடம் இருந்து பாடம் கற்பதுதான். அவ்வாறெனில் நாம் ஒவ்வொரு பண்பிலும் தாழ்வாகத்தானே இருக்கிறோம்? பஞ்சும், தீயும் எப்படி நண்பர்களாக முடியும்; பஞ்சைத் திரியாக்கி, எண்ணெயில் வைத்தால் தீபமாக்க முடியும்.

உண்மை என்னவென்றால் மெய்யான எழுத்துக்களை எழுதும் மனிதன் புகழையும் விருதுகளையும் எதிர்பார்க்காததுதான். அதற்கு தக்க உதாரணம் வள்ளுவர். எந்த விருதும், மனித இனத்துக்கே உரிய எழுத்துகளை எழுத அவரைத் தூண்டவில்லை. எந்தக் காசோலையும் கேட்போரைப் புரட்சி செய்யத் தூண்டும் சிந்தனையை சாக்ரடீஸுக்கு அளிக்கவில்லை.

நெல்மணிகளை அளித்தவுடன் நெற்பயிரின் பணி நின்று விடுவதில்லை. கால்நடைகளுக்கு வைக்கோலாக அடுத்த பயணத்தைத் தொடங்குகிறது. இப்பயணத்தின் இறுதியில் பயிர்களுக்கு உரமாகி மீண்டும் தனது சுழற்சியை ஆரம்பிக்கிறது. அதன் பயணம் எங்கும் நின்று விடுவதில்லை. மனிதன் மட்டும் சிறிய செயல்களுக்குக் கூட ஒரு 'அங்கீகாரத்தை' நோக்குபவனாக உருமாறிவிட்டான்.

ஜனநாயக நாட்டில் அனைத்துக் கட்சிகளுக்கும் ஒரே சட்டம் தான் உண்டு. ஆனால், வெவ்வேறு நியாயங்களைத் தங்களுக்குள் வைத்துள்ளன. கடவுள் உண்டு என்றும் இல்லை என்றும் ஆட்சியைப் பிடித்த கட்சிகளால் என்ன மாறிவிட்டது? புரையோடிய அதே பழைய பிரச்சினைகள் இன்றளவும் தொடர்கின்றன.

காற்று உடலகத்தில் தவழ்ந்து வரும் ''வார்த்தைகளுக்கு' சுமாரான வலிமைதான். மாறாக, பார்ப்பவனைச் சிந்திக்க வைப்பதுடன் தன்னை நோக்கி இழுக்கும் சக்தி 'செயலுக்கு' உள்ளது; அது காந்தம் போன்றது. அதேபோன்ற பண்பு நெருப்புக்கும் உண்டு. இருப்பினும் அது அழிக்கும் தன்மையுடையது. வயிற்றின் கொள்ளளவைவிடக் குறைவாக உணவு வாங்கினால்தான் ஒரு பருக்கையைக் கூட வீணாக்காமல் உண்ண முடியும். ஆசைப்பட்டு அதிகமாக வாங்கி, உணவை வீணாக்குகிறோம் என்ற குற்ற உணர்வு எதற்கு?


கல்வி அறிவு பெற்ற சமூகம் பண்படும் என்று கூறினார்கள். வள்ளுவரின் குறள்களை அறியாத பாமர மக்கள் பலர், அவரின் கருத்துகளின்படி நின்றனரே! நம்மைப் பக்குவப்படுத்த கல்வியறிவும் சட்டங்களும் தேவையில்லை.

கண் இமைகளை மூடினாலும் இருளையும், வெளிச்சத்தையும் கருவிழிகள் உணரும். மண்ணின் தரம் நன்றாக இருந்தாலே போதும். அதில் பல்வேறு பயிர்களை விளைவிக்கலாம். தேக்கு மரம் போல் உயர்ந்து நீடித்த பயனைத் தர வேண்டுமென்றால், தேவையில்லாத கிளைகளை வெட்டி எறிய வேண்டும். இவற்றையெல்லாம் எப்போதுதான் நாம் உணரப்போகிறோம்? பயணத்தை மேற்கொண்ட பாதையில், குடை இல்லாதிருந்தால் என்ன, காலணி இல்லாதிருந்தால் என்ன?

முழுமையான உழைப்பை அளிப்பதில்தானே ஒருவரின் பிறவி முழுமையடைகிறது. எங்கு அலைக்கழிக்கப்பட்டால்தான் என்ன? காற்று இருக்கும்வரை புவியில் நிமிர்ந்து நிற்க எம்மால் முடியுமே.

தனக்கான விதிகளை மனிதனே வகுத்துக் கொண்டான். அதையும் அவனே மீறுகிறான். 6 அறிவு அற்ற உயிரினங்கள் தனக்கான நியாயங்களை வகுக்கவும் இல்லை; அதனை மீறுவதும் இல்லை. அவைகளுக்குத்தான் ''எல்லோர்க்குமான நியாயங்கள்' உள்ளனவே! மனித இனத்துக்கான நியாயங்கள் ஒன்றாகும்போது கடுமையான சட்டங்கள் தேவையில்லை. ★

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்



இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் அப்பொழுது இருந்தன. அதனால் சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கி இருந்தன.

நாவலர் பெருமான் சைவ நெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும்பணிகள் ஆற்றியவர். அவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் என்போருக்கு மகனாக 1822 ஆம் ஆண்டில் பிறந்தார்.

இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் ஆறுமுகம். அவரது கல்விப் புலமையையும் நாவன்மையையும், சைவத் தமிழ் பணிகளையும் பாராட்டித் திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானைச் சைவமக்கள் 'ஐந்தாம் குரவர்' எனப் போற்றுகின்றனர்.

நாவலர் தமது இளமையிலேயே நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் என்போரிடம் குருகுல முறையில் இலக்கிய, இலக்கணங்களையும், சைவசமய சாஸ்திரங்களையும் பயின்றார். வடமொழியும் கற்றார். யாழ்.வெஸ்லியன் மெதடிஸ்த மிஷன் மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். அங்கே ஆசிரியராகவும் இருந்தார். நாவலர் சைவத்தையும், தமிழையும் இரு கண்கள் எனக் கொண்டு வாழ்ந்தார்.

பிரசங்க வன்மை, வாக்குச் சாமர்த்தியம், நல்லொழுக்கம், சிவபக்தி, சிவனடியார் பக்தி என்பன இளமைக் காலந்தொட்டு அவரிடம் காணப்பட்டன. சைவ சமயத்தை அழிய விடாது காக்க நாவலர் எடுத்த முயற்சிகள் பல. புறச்சமயம் புகாது மக்களைச் சைவ சமயத்தில் நிலைத்து நிற்கச் செய்ய அரும்பாடுபட்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்கவழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகும். அது 1848 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் பாடசாலை ஒன்றை நிறுவினார். அவ் வித்தியாசாலைகளில் போதிப்பதற்குச் சைவசமய நூல்களைப் பிரசுரித்தார். அதற்காகச் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடங்களை நிறுவினார். சைவ வினாவிடை, பாலபாடம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலியவற்றை வெளியிட்டார்.

ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சில் பதிப்பித்தார். அத்துறையில் ஏனையோருக்கு வழிகாட்டியாக விளங்கினார். சைவப் பணிகளைச் செய்வதற்குத் தமது உத்தியோகத்தையும் தியாகஞ் செய்த பெருமானாவார். வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாக வாழ்ந்தவராவார்.


சிவாலயங்களிலும், மடாலயங்களிலும் சைவ உண்மைகளை எடுத்துக் கூறி பிரசங்கம் செய்தார். புராணபடனத்தால் சைவப் பிரசாரம் செய்தவர். துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுச் சைவத்தின் உண்மையை விளக்கினார். சைவமக்களின் மாசுகளை நீக்கிப் புறச்சமயத்தவரது தீவிர பிரசாரத்தைத் தடுக்க முற்பட்டார். இவர் வெள்ளி தோறும் சைவப் பிரசங்கம் செய்தமையால் மக்கள் மதம் மாறாதிருந்தனர். அந்நியர் ஆதிக்கத்தில் மங்கிய சைவம் மீண்டும் தழைத்தது. சைவமக்கள் திருநீறு முதலிய சிவசின்னங்களை அணியவும், தேவாரம், திருவாசகம் என்பவற்றை ஓதவும், ஆலயங்களில் சைவாகம முறைப்படி பூசை வழிபாடுகள் நடைபெறவும் வழிவகுத்தவராவார்.

திருக்கேதீஸ்வரம், கீரிமலை என்பவற்றின் தொன்மையை எடுத்துக் கூறினார். அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூசைகளுக்கு வழிவகுக்குமாறு சைவமக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார். அதனால் ஆலயங்கள் மீண்டும் எழுந்தன.

நாவலர் பெருமான் 1879 கார்த்திகை மக நட்சத்திரத்தில் இறைபதம் அடைந்தார். நாவலரின் தமிழ்ப்பணிகள், கல்வி, சமூகப்பணி யாவும் சைவசமய விருத்தியை அடித்தளமாகக் கொண்டிருந்தன. அவர் வழியில் நின்று ஒழுக வேண்டியது நம் கடமையாகும்.

ப.அனோஜா, தரம் -9டி,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# உயர்வும் – தாழ்வும் எம் செயல்களில்தான்...




பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் போதிசத்துவர் ஒரு சிங்கமாகப் பிறந்தார். அந்தச் சிங்கம் தன் மனைவியோடு ஒரு மலையின் குகையில் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் வேட்டையாடப் போன அந்தச் சிங்கம் ஒரு குளத்தருகே பல முயல்களும், மான்களும் இருப்பது கண்டு பலமாகக் கர்ச்சித்தவாறே பாய்ந்தது.

சிங்கத்தின் கர்ச்சனை கேட்டு முயல்களும் மான்களும் ஓடி விட்டன. ஆனால் வேகமாய்ப் பாய்ந்துவந்த சிங்கம் குளக்கரையில் உள்ள பெரிய பள்ளத்து சேற்றில் போய் விழுந்து சிக்கிக் கொண்டது. அதிலிருந்து அது எழுந்து வர முடியாமல் தத்தளித்தது. அது மேலே வரத் தன் கால்களை அழுத்திய போது கீழேதான் போயிற்று. தன்னை யாராவது காப்பாற்ற வருவார்களா என அது பார்க்கலாயிற்று. ஆனால் யாருமே வரவில்லை. ஒரு நாளல்ல இரண்டு நாள்களல்ல, இந்த நிலையில் அது ஏழு நாள்கள் இருந்தது. அதற்குப் பிறகுதான் ஒரு நரி அந்தவழியே வந்ததை அது பார்த்தது.

நரி சிங்கத்தைப் பார்த்து பயந்து சற்று தூரத்திலேயே நின்று விட்டது. சிங்கமோ தம்பி! பயப்படாதே. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். ஒருவார காலமாக உணவின்றி இங்கே அகப்பட்டுத் தவிக்கிறேன். என்னைக் காப்பாற்று'' என்றது.


நரியோ ''ஐயோ! பசியாக இருக்கும் உங்களைக் காப்பாற்றினால் முதலில் என்னையே கொன்று சாப்பிட்டு விடுவீர்களே. உங்களை எப்படி நம்புவது?'' எனக் கேட்டது. சிங்கமும் ''நீ என் உயிரைக் காத்தவன் என்ற நன்றி விசுவாசம் எனக்கு இராதா?

நீ மட்டும் இந்தச் சேற்றில்இருந்து வெளியே வர எனக்கு உதவினால் என் வாழ் நாள் முழுவதும் உனக்கு உதவி செய்து கொண்டே இருப்பேன், என்னை நம்பு'' என்றது

நரியும் சிங்கம் கூறியதை நம்பி உலர்ந்த நீண்ட கட்டைகளை இழுத்து வந்து அந்தப் பள்ளத்தில் போட்டது. சிங்கமும் அவற்றின் மீது காலை வைத்து அந்தப் பள்ளத்திலிருந்து வெளியே வந்தது. அதன் பிறகு அந்தச் சிங்கமும் நரியும் சேர்ந்தே வேட்டையாடின. சிங்கம் கொன்ற மிருகத்தை இரண்டும் சமமாகப் பகிர்ந்து கொண்டன. பின்பு சிங்கம் ''இனி நீ உன் மனைவியோடு என் குகைக்கே வந்து விடு. நாம் எல்லாரும் ஒன்றாக வாழலாம்'' என்றது. நரியும் அதற்கு இணங்கித் தன் மனைவியை சிங்கத்தின் குகைக்கு அழைத்து வந்தது.

[தொடரும்]

# நமது மந்திரிகள்




மூளை - பிரதம மந்திரி
தண்டு வடம் - இணை அமைச்சர்
நரம்பு மண்டலம் - ஊடகத்துறை அமைச்சர்
தலை - கல்வி அமைச்சர்
தோல் - மனித வள மேம்பாட்டு அமைச்சர்
எலும்பு- பாதுகாப்பு அமைச்சர்
கண் - வெளியுறவுத்துறை அமைச்சர்
காது - தபால் தொலை தொடர்புகள் அமைச்சர்
மூக்கு - சுகாதாரத்துறை அமைச்சர்
பல் - கிராமியத்துறை அமைச்சர்
இதயம் - உள்நாட்டு விவகாரத் துறை அமைச்சர்
கை - தொழில் அமைச்சர்
வயிறு - உணவுத்துறை அமைச்சர்
கால் - போக்குவரத்து அமைச்சர்

சி.தணிகன், தரம் -7,
புனித பரியோவான் கல்லூரி.

# மீன் பிடிப்போமே



மீன் பிடிப்போம்! நாம் மீன் பிடிப்போம்!
ஆழ்கடலில் சென்று நாம் மீன் பிடிப்போமே
மலைகள் போன்ற அலைகள் நம்மை ஆட்டி வைப்பினும்
அரக்கன் போன்ற சுழல்காற்று சுற்றி வீசினும்

அச்சமின்றி ஆனந்தமாய் மீன்பிடிப்போமே
சுறா, திருக்கை, விரால், திரளி, விளைமீன் சுவையானவை
ஓரா, ஓட்டி, சீலா யாவும் விலை மிக்கவை
மீன் பிடிப்போம் நாம் மீன் பிடிப்போமே!
கைநிறையப் பணம் தேடி மீன் பிடிப்போமே!

நா.ஸ்ரீகிருவ்
தரம் 4ஏ, யாழ்ப்பாணக் கல்





# ஹிட்லரையே அடிபணிய வைத்த ஒரு தமிழன்

■ இணையவன்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

முதலாம் உலகப்போர் பிரிட்டனுக்கும் ஜேர்மனுக்கும் இடையில் ஆரம்பமாகியது. உடனடியாக டொக்டர் செண்பகராமன் ஐரோப்பிய நாடுகளில் அப்போது சிதறிக் கிடந்த இந்தியர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி ஒரு இராணுவ சக்தியாக உருவாக்கினார். போரில் தனக்குச் சாதகமாக இந்தியர்களைப் பயன்படுத்த ஜெர்மனி முயற்சித்தது. அந்தக் கட்டத்தில் ஐரோப்பாவில் வாழ்ந்த இந்தியர்களின் மனோபாவத்தை, போரினால் எழும் இந்த நெருக்கடியை இந்தியாவின் விடுதலைக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர்கள் தீர்மானம் செய்துள்ளனர். ஜெர்மனியர் லாபத்திற்காக மட்டும் பாடுபட வேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல என நேருஜி தனது சுயசரிதையில் தெளிவாக எடுத்து விளக்கி இருந்தார்.

இவ்விதம் பாரதத்தின் நலன் கருதி செண்பகராமன் உருவாக்கிய போராட்ட அணிக்கு இந்திய தேசியத் தொண்டர்படை(ஐ.என்.வி) என்று பெயர் கொடுக்கப்பட்டது.

ஜெர்மனி கேட்டுக் கொண்டபடி, சில நிபந்தனைகளோடு போரில், ஜெர்மனிக்கு உதவ ஐ. என். வி. எனும் இந்தியப் படை ஒப்புக் கொண்டது. செண்பகராமனின் திட்டங்கள் அனைத்தையும் ஜெர்மனின் கெய்ஸர் மன்னர் ஏற்றுக் கொண்டார். இந்தச் சந்தர்ப்பத்திலேதான், செண்பகராமனின் மதிநுட்பத்தைப் பாராட்டி, சுதந்திர பாரதத்தின் முதல் ஜனாதிபதியாக வீரன் செண்பகராமன் நியமிக்கப்பட வேண்டும் என்று கெய்ஸர் மன்னர் தனது அந்தரங்க ஆவலை வெளியிட்டார்.

யுத்த காலத்தில், ஹம்டன் என்ற பிரசித்தி பெற்ற நீர் மூழ்கிக் கப்பலின் பெயரைக் கேட்டாலே, அன்று பிரிட்டிஷார் கதி கலங்கினர். அந்தக் கப்பலைச் செலுத்தி, 1914 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி சென்னையிலுள்ள செண்ட் ஜோர்ஜ் கோட்டையைத் தாக்கி, பிரிட்டன் அரசை கலங்கடித்த வீரன் வேறு யாரென்று நினைக்கிறீர்கள்? ஹம்டன் எனும் பிரமாண்டமான நீர் மூழ்கியின் பொறியியலாளரும், இரண்டாவது தலைவருமான டாக்டர் செண்பகராமன்தான். செண்ட் ஜோர்ஜ் கோட்டை தகர்ந்ததற்கும், பிரிட்டிஷார் நடுங்கியதற்கும் காரண கர்த்தா ஹம்டன் குண்டு வீச்சு சம்பவத்தைப் பற்றிய வரலாறு, கோட்டைச் சுவரில் பதிக்கப்பட்டிருப்பதை இப்போதும், சென்னையிலுள்ள கோட்டையில் காணலாம். இது இடம்பெற்றது செண்பகராமனின் இருபத்து மூன்றாவது வயதில்! இத்தனை இளம் பருவத்தில் செண்பகராமன் மேற்கொண்ட சாதனைகளைக் கண்டு ஆங்கிலேயர்கள் வியந்தார்கள். அவர் வழி நடத்திய ஐ. என். வி. யின் ஆற்றலைக் கண்டு வெள்ளையர் அடைந்த பீதிக்கு அளவே கிடையாதென வரலாறு கூறுகிறது.


இத்தனை வீரசாகசங்களை புரிந்து ஆங்கிலேயர்களை துவம்சம் செய்த மாவீரன் நாசிப்படைகளின் நயவஞ்சகமான சூழ்ச்சியால் கொல்லப்படுகின்றார். தன் இறுதி லட்சியத்தை மனைவியிடம் கூறுகிறார் செண்பகராமன்.

இந்திய சுதந்திரத்தை கண்ணால் காணாமல் என் உயிர் பிரியத்தான் போகிறது. எனினும் நான் இறந்த பின், எனது அஸ்தியை பத்திரமாக எடுத்துச் சென்று, நான் பிறந்த தமிழ் நாட்டில், என் அன்னையின் அஸ்தி சங்கமமான கரமனை ஆற்றில் கரைத்துவிடு, மறுபகுதியை நாஞ்சில் நாட்டின் வளமிக்க வயல்களில் தூவிவிடு. அதோடு என் உயிர் பிரிந்தபின்னும், என் போராட்டத்தைத் தொடர்ந்து நீ நடத்த வேண்டும். நெஞ்சை உருக்கும் வண்ணம் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்த செண்பகராமனின் உயிர் 1934 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி இவ்வுலகத்தை விட்டு நீங்கி அமரத்துவம் அடைந்தது.

“ யுத்த காலத்தில், ஹம்டன் என்ற பிரசித்தி பெற்ற நீர் முழ்கிக் கப்பலின் பெயரைக் கேட்டாலே, அன்று பிரிட்டிஷார் கதி கலங்கினர் அந்தக் கப்பலைச் செலுத்தி. 1914 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி சென்னையிலுள்ள செண்ட் ஜோர்ஜ் கோட்டையைத் தாக்கி, பிரிட்டிஷ் அரசை கலங்கடித்த வீரன் வேறு யாரென்று நினைக்கிறீர்கள்? ஹம்டன் எனும் பிரமாண்டமான நீர் மூழ்கியின் பொறியியலாளரும், இரண்டாவது கமாண்டருமான டாக்டர் செண்பகராமன்தான்.



(முற்றும்)



“ பேர்ள் துறைமுகம் மீதான திடீர்த் தாக்குதல் ஐக்கிய அமெரிக்காவைத் திகைக்க வைத்தது எனலாம். 1941.12.07 அன்று அதிகாலை ஜப்பான் பேரரசின் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்களும் விமானங்களும் தளபதி இசரோக் குயமமோட்டோ தலைமையில் இத்துறைமுகம் மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டன. ”

# வரலாற்றில் முக்கியத்து...

# பேர்ள் துறை...

-றஜி

பேர்ள் துறைமுகம் (Pearl Harbur) ஐக்கிய அமெரிக்காவின் ஹ... ஹோனலாலுவின் மேற்கே அமைந்துள்ள ஒவாகு தீவில்... இந்தத்துறைமுகத்தின் மிகப் பெரும்பாலான பகுதிகளும் அ... ஐக்கிய அமெரிக்காவின் ஒரு முக்கிய கடற்... மும் ஐக்கிய அமெரிக்கப் பசுபிக் கடற்படையின் தலைமையகமும் ஆகும். ஜப்பானியர்கள் இத்துறைமுகத்தின் மீது 1941.12.07 ஆம் ஆண்டில் நடத்திய குண்டுத் தாக்குதல் ஐக்கிய அமெரிக்காவை இரண்டாம் உலகப் போரில் ஈடுபடவைத்தது



பேர்ள் துறைமுகம் மீதான திடீர்த் தாக்குதல் ஐக்கிய அமெரிக்காவைத் திகைக்க வைத்தது எனலாம். 1941.12.07 அன்று அதிகாலை ஜப்பான் பேரரசின் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்களும் விமானங்களும் தளபதி இசரோக் குயமமோட்டோ தலைமையில் இத்துறைமுகம் மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டன.

இந்தத்தாக்குதல் நடத்தப்படக்கூடும் என ஏற்கனவே அமெரிக்கா அறிந்திருக்க ஏதுநிலை இருந்திருந்தாலும் அமெரிக்கா இத்தாக்குதலுக்குத் தயாராக இருக்கவில்லை. அன்று காலை 6:0... ஆறு விமானந் தாங்கிக் கப்பல்களில்இருந்து 181 விமானங்... பித்தன. அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களும் இராணுவத்... 

மொத்தமாக 21 கப்பல்கள் அழிக்கப்பட்டு 2 ஆயிரத்து 350... 68 பேர் பொதுமக்கள். ஆயிரத்து 178 பேர் படுகாய மடைந்தன... அமெரிக்கா 2 ஆம் உலகப் போரில் நேரடியாகக் குதித்தது.

தேடிக்கிடைக்காது என்று தெரிந்தவொன்றைத் தேடி அலைகிறது விஞ்ஞானம் என ஒவ்வொரு தேடலுக்குமான முடிவு கிடைக்கும் வரையில் விஞ்ஞானத்தையும் அது தொடர்பிலான ஆராய்ச்சியாளர்களையும் கேலிக்கூத்தாக எடுக்கும் ஒரு சமூகம் அன்று தொடக்கம் இன்று வரை இருக்கத்தான் செய்கிறது. அதுவே குறித்த தேடல்களுக்கான முடிவு கிடைத்து விட்டால்... அப்படி முடிவு கிடைத்துவிட்ட ஒரு விடயமாக விரைவிலே மாறப்போகிறது வேற்றுக்கிரக வாசிகள் என்ற அம்சமும்.

இதுவரை காலமாக விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக் கண்களுக்கு தென்படாமல் இருந்து வந்த வேற்றுக் கிரகவாசிகளின் வாழ்விடங்களை 'Planet Hunters Project' என்ற திட்டத்தின் கீழ் தன்னார்வ வானியலா ளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதுவும்

ஒன்றல்... வாழும் 4... 'Plane... களை கண்... யத்தள அ... யாளர்கள... கண்டுபி... ழைக்கப்... வேற்... கொண்ட... கிடைத்... தொடரவு... வில் வே... செய்யும்... நம்பிக்...



# மெஞ்ஞானமும் விஞ்ஞானமும்



இராமஜெயபாலன்

மெய் என்பது ஐந்து புலன்களில் ஒன்று. உணர்வு என்பது இதன் பொருள். இதற்கு உண்மை என்று ஒரு பொருளும் உண்டு. நெருப்புச் சுடும் என்று சொல்லும் போது முன்கூட்டிய பட்டறிவு இருந்தால் உணர்வு, கருத்து வாயிலாக பொது நம்பிக்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டால் அறிவு. மேலும் வைத்தியர் ஒருவரிடம் வரும் நோயாளி தனது பிரச்சினையைக் கூறும் போது மருத்துவர் நோயாளியிடம் நோய்க்கான அறிகுறிகளை உறுதிப்படுத்தி நோயை இனங்காண சில உணர்வுகளைக் கூறி இவை ஏற்படுகிறதா எனக் கேட்டறிவார். இதனால் வைத்தியர் அதே உணர்வுகளைப் பெற்றிருந்தார் எனக் கூற முடியுமா. எனவே வைத்தியர் இவைகளை அறிவியல் (கல்வி) ரீதியாகவே பெற்றுக் கொள்கிறார். எனவே உணர்வென்பது மெய்ஞானம் அகம் சார்ந்தது. விஞ்ஞானம் புறம் சார்ந்தது. மேலும் உயிரின பரிணாமத்தில் உணர்வு முதன்மையானது. அறிவு உச்சமாகத் திகழ்கிறது. எனவே பரிணாம அடிப்படைகளிலும் பல்வேறு நோக்கங்கள் அடிப்படையிலும் மெஞ்ஞான விஞ்ஞானங்களை ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கம்.

ஆட்டுக்குட்டியொன்று பிறந்தஉடனேயே சிலமணித்தியாலங்களில் எழுந்து நடப்பதுடன் யாரும் அதற்குச் சொல்லிக் கொடுக்காமலேயே தாயின் மடியில் பால் இருக்கிறது என உணர்ந்து அருந்தவும் முயற்சிக்கிறது. ஆனால் மனிதக் குழந்தைகள் பிறரின் தயவிலும், வழிகாட்டலிலுமே தமது வாழ்வை ஆரம்பிக்கின்றன. மனிதன் தனது அறிவை மேம்படுத்தி விமானங்களைக் கண்டு பிடித்து பல படைப்புக்களைச் செய்கின்ற போதும் வரைபடங்கள் மற்றும் திசையறி கருவி, நுணுக்குக்காட்டி மேலும் கட்டுப்பாட்டு நிலையங்களுடனான தொடர்பு. இத்துடன் உணவு மற்றும் எரிபொருள் தேவைகளுக்காக இடைத்தங்கல்களையும் செய்யும் வசதிகளுடனேயே பிறப்புக்களைச் செய்கிறான். ஆனால் இவைகள் ஏதும் இல்லாமல் மிகப்பெரிய சமுத்திரங்களைக் கடந்து கண்டம் விட்டுக் கண்டம் பறக்கும் பறவைகள் எதை வைத்துக் கொண்டுதமது இலக்கை அடைகின்றன, தவிர மோப்ப சக்தியுடைய விலங்குகள் கண்களால் பார்க்காமலேயே பல மைல் தூரத்தில் உள்ள தனது உணவுகளையும் (இரை), எதிரிகளையும் துல்லியமாக அறிந்து சிறிதும் பிசகாது குறித்த இடத்தை அடைகின்றது.



எனவே இயற்கை (இறைவன்) மனிதரிடம் அறிவைக் கொடுத்து சுயமாக இயங்க விட்டிருக்கிறது. ஆனால் மற்றைய உயிரின (பரம்பரை அலகு) இயங்குகிறது. ஆனாலும் மனிதன் பெறும் அறிவும் அவனது உணர்வுடன் கலந்து ஆழ்மனப் பதிவாகி அவனை இயக்குகிறது. தவிர மனிதன் பெறும் அறிவு அவனது உணர்வுடன் கலந்து ஆற்றலாக மாறாது விட்டால் அறிவு அறிவாக மட்டுமே இருக்கும். ஆதலால் பலனில்லை.

ஒருவர் படித்துப் பல பட்டங்களை எடுத்தாலும் தான் படித்த படிப்பு உணர்வுடன் கலக்காதுவிட்டால் நிலையாக நிற்கிறது. முன்னால் படிக்க பின்னால் மறந்து போய்க் கொண்டிருக்கும். இது மூளையின் இயல்பு.

ஆனால் ஒருவர் சிறிதே அல்லது சில விடயங்களை மட்டுமே படித்தாலும் விரும்பி உணர்வு பூர்வமாய்ப் படித்தால் அது என்றும் அழியாது நிலைத்து நிற்கும். மேலும் அறிவு உணர்வுடன் கலக்காதுவிட்டால் நிலையாக நிற்காது. முன்னால் படிக்க பின்னால் மறந்து போய்க் கொண்டு இருக்கும். இது மூளையின் இயல்பு. ஆனால் ஒருவர் சிறிதே அல்லது சில விடயங்களை மட்டுமே படித்தாலும் விரும்பி உணர்வு பூர்வமாய்ப் படித்தாலும் அது என்றும் அழியாது நிலைத்து நிற்கும் . மேலும் அறிவு உணர்வுடன் கலந்து வெளிப்பட்டால் மெஞ்ஞானம். அறிவு அறிவாக மட்டுமே வெளிப்பட்டால் விஞ்ஞானம்.

எவ்வாறாயினும் உணர்வு ரீதியான மெய்ஞானத்திலும் உணர்வே பரிணாம மடைந்து மொழியை ஊடகமாக்கி விஞ்ஞானமாகியது. உதாரணமாக நாம் பூமியின் மேற்பரப்பில் இருக்கிறோம். ஆனாலும் பூமி பந்து போன்ற உருண்டை வடிவமானது. தன்னைத் தானே சுற்றுகிறது. இவ்வாறு சுற்றினாலும் கூட பூமிக்கு ஒரு பக்கத்தில் சூரியன் இருக்கும் போது எதிர்பக்கத்தில் சந்திரன் இருக்கிறது.

அதாவது பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே இருக்கிறது. இவ்வாறு இருக்கும் போது சூரியன் மேலே தெரியும் போது சந்திரன் கீழே அல்லவா இருக்க வேண்டும். ஆனால் இரவு ஆனதும் சந்திரனும் கூட மேலேயே தெரிகிறான். இது ஈர்ப்பு விசை காரணமாக பூமியின் எந்தப் பக்கத்தில் இருந்தாலும் மேலே என்ற உணர்வே ஏற்படும். இது தவறல்ல. இது இயற்கையின் நியதி. மேலும் எமது கண்ணிலுள்ள வில்லையின் அமைப்பின் படி நாம் பார்க்கும் பொருள்கள் எல்லாமே விழித்திரையில் .பிம்பம் தலை கீழாகவே தெரியும். ஆனால் உணர்வே அதை நிமிர்த்தி நேராகப் பார்க்க வைக்கிறது. ஆனால் அறிவியல்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிற்பாடே இந்த உண்மைகள் எமக்குத் தெரியவருகிறது. அதற்காக உணர்வு தவறாகுமா?


தவிரவும் எமது உணர்வுக்கு பூமியும் ஆகாயமும் மாற்றமடையாது ஒன்றாகவே இருப்பது போல் தோன்றுவதால் நாம் ஈர்ப்பு விசைக்கு அப்பால் இருப்பதையே விண்வெளி என்கின்றோம். மொழியடிப்படையில் இது தவறில்லை. ஆனால் பிரபஞ்சம் என்பது எல்லாவற்றையுமே உள்ளடக்கியது. மேலும் எமது மொழியில் ஒவ்வொரு ஞாயிற்றுத்தொகுதியும் ஒவ்வொரு அண்டமாகவும் இரண்டு அண்டங்களுக்கு இடையேயானதை அண்ட வெளி என்றும் அழைக்கலாம். ஆனால் வெளி என்பது ஒன்று தான். ஆனால் மொழி அடிப்படையிலான பாகுபாடுகள் மட்டுமே இவை.

எனவே ஒரு சிறு குறையுமில்லாது பூரணத்துவமான அறிவைக் கொண்டது. இயற்கை (இறைவன்) மட்டுமே மனிதரில் அவ்வப்போது அபூர்வ பிறவிகள் தோன்றினாலும் அந்தந்தக் காலகட்ட தேவைகளுக்கேற்ப மட்டுமே அந்த பிறப்புக்கள் அமைகிறது. இது மெய்ஞானத்திற்கு மட்டுமல்ல விஞ்ஞானத்திற்கும் பொருந்தும். எனவே மெய்ஞானத்திலுள்ளவர்கள் விஞ்ஞானத்தை எதிர்ப்பதோ அல்லது விஞ்ஞானத்திலுள்ளவர்கள் மெய்ஞானத்தை எதிர்ப்பது மட்டுமே தவறல்ல. முரண்பாடுகளுடன் இரண்டையும் நியாயப் படுத்துவதும் கூட. ★

...த்துவமுள்ள

...றைமுகம்

...காவின் ஹவாய் மாநிலத்தின் தலைநகர்
...து தீவில் உள்ள ஒரு துறைமுகம்.
...களும் அதைச் சுற்றியுள்ள இடங்களும்
படைத்தள



...காலை 6:09 மணிக்கு
... விமானங்கள் குண்டு மழை பொழிய ஆரம்
...இராணுவத் தளங்களும் அழிக்கப்பட்டன.
...பிரத்து 350 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில்
...டைந்தனர். இந்தத்தாக்குதலை அடுத்து ஐக்கிய
...தித்தது.

## வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதை உறுதிசெய்யும் திகில் ஆதாரங்கள்

■மயூரி



ஒன்றல்ல இரண்டல்ல வேற்றுக்கிரகவாசிகள் வாழும் 42 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'Planet Hunters Project' என்பது புதிய கோள்களை கண்டுபிடிப்பதற்காக சூனிவர்ஸ் எனும் இணையத்தள அமைப்பால் தன்னார்வ வானியல் ஆராய்ச்சியாளர்களைப் பயன்படுத்தி புதிய கோள்களைக் கண்டுபிடிக்கும் Citizen Science Project என்றழைக்கப்படும் திட்டமாகும்.

வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பில் தத்தளித்துக் கொண்ட வானியல் உலகுக்கு துரும்புச் சீட்டாய் கிடைத்திருக்கும் இந்தக்கோள்கள் தொடர்பில் தொடரவுள்ள ஆராய்ச்சிகள் நிச்சயம் எம்மை விரைவில் வேற்றுக்கிரகவாசிகளுடன் தொடர்பு கொள்ளச் செய்யும் என்பது வானியலாளர்களின் தற்போதைய நம்பிக்கையாகவுள்ளது.


இதேதிட்டத்தின் கீழ் ஏற்கனவே 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 சூரியன்களுடனான PH1 எனப் பெயரிடப்பட்ட நெப்டியூனை விட சற்றே பெரிய கோள் கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து நாசாவின் தொழில்சார் வானியல் ஆராய்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த கோளை உறுதி செய்தது.

இதனையடுத்து உத்வேகத்துடன் செயற்பட்ட 'Planet Hunters Project' இன் 40 தன்னார்வ வானியல் ஆராய்ச்சியாளர்களால் இப்போது மீண்டும் 42 புதிய கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் அறிவியல் உலகை மகிழ்சிப்படுத்தும் விதமாக மனிதர்கள் வாழ ஏதுவான காரணிகளுடன் கூடிய 15 கோள்களும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வளரும்)

# சித்தர்கள் யார்?

■ இணையவன்



தமிழின் பழைமைக்கு ஈடாக சொல்லக் கூடிய ஒரு விஷயம் இருக்குமானால் சித்தர்களின் இருப்பைச் சொல்லலாம். இவர்களின் தொன்மை நமது கலாசாரம், நம் தத்துவ விசாரம் குறித்த அறிவு, மருத்துவத் துறையில் மேதைமை, பல புதிய ஆராய்ச்சிகள் ஆகியவற்றோடு தொடர்புள்ளதாகவும் இருக்கிறது.

அவர்களின் இருப்பு, கடவுள் குறித்த தத்துவங்களையும், நமக்கு அருகிலேயே இருக்கும் மூலிகை களைக் கொண்டு எத்தனையோ வியாதிகளைக் குணப்படுத்தக் கூடிய மருத்துவ முறைகளைப் பற்றியும் ரசவாதம் எனப்படுகிற இரும்பைத் தங்கமாக மாற்றும் ஆராய்ச்சிகளையும், வெளிப் படையான தன்மை குறித்தும் தொடர்புடையதாக இருக்கிறது.

வழக்கமான வாழ்க்கைமுறையைத் துறந்து தன்னை அறியும் தேடலில் அமைந்திருக்கிறது சித்தர்களின் வாழ்க்கை. இவர்களின் பார்வையும் பாதையும் அறிவால் அறியப்படும் பகுத்தறிவிற்கும் உணர்வால் உணரப்படும் ஆன்மிகத்துக்கும் இடைப்பட்ட யாரும் அதிகம் பயணிக்க முயலாத வனங்களில் செல்கிறது.

இந்து மத சன்யாசிகளைப் போல் தோற்றம் தரப்பட்டாலும் இஸ்லாமிய சூஃபித் தத்துவங்களின் நிழலும் சமண புத்த மதத் தாக்கங்களும் இவர்களின் கருத்துக்களில் தெரிகின்றன.

இன்னும் சொல்லப்போனால் சித்தர்களில் மிகவும் பிரபலமான போகர் சீனாவைச் சேர்ந்தவர் என்ற ஆராய்ச்சிக்குட்பட்ட கருத்தும் உண்டு.

சித்தர்களின் இடைவிடாத ஆராயும் மனம் பல நாட்டின் அறிவுஜீவிகளுக்கும் ஒரு சுவாரஸ்யமான வாழ்க்கைமுறையாகவும் நம் நாட்டு மக்களுக்கு அபோரிஜின்ஸ் என்று ஒதுக்கக் கூடிய காட்டுமிராண்டி வாழ்க்கை முறையாகவும் தெரிவதில் வியப்பில்லை.

(தொடரும்)

## புத்தகசாலை

## நூல்: கல்யாண வசந்தம்




கல்யாணம் என்பது ஒரு வாழ்வியல் ஒப்பந்தம். பிரம்மாண்டமான ஒரு கோபுரத்தைக் கட்ட சிறு சிறு கற்கள் கூடப் பயன்படுவது போல எமது திருமண மரபின் சின்னச் சின்ன சம்பிரதாயங்கள் கூட, அர்த்தமுற்ற வாழ்வியலின் அடிப்படையாகத் திகழ்கின்றன.

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது"

என்று திருவள்ளுவர் பேசுவதையும் இத்துடன் சொல்லி நூலில் நுழையலாம்.

கல்யாணம் என்னும் அந்த வசந்த காலத்தை வெளிப்படுத்தும் இந்த நூலின் தலைப்பை நோக்கலாம். அதனை விட கல்யாண வசந்தம் என்றொரு முக்கியமான இராகமும் இருக்கிறது.

கல்யாண வசந்தம் என்ற இந்த நூல் நீர்வேலி இராஜ வீதி "பொன் செல்வ மஹால் திருமண மண்டபத் திறப்பு விழாவின்" சிறப்பு வெளியீடாக வெளிவந்துள்ளது.


இந்த நூலில் மூன்று விடயங்கள் பிரதானமாக நோக்கப்படுகின்றன. ஒன்று விவாகக் கிரியைகள் தொடர்பான விளக்கங்களையும் விவாகத்தின் முக்கிய விடயங்களான தாலி, மாலை போன்ற விடயங்களையும் பற்றிப் பேசுவது, இரண்டாவது திருமணம் போலவே இந்த மண்டபத்தில் நிகழக்கூடிய பூப்புனித நீராட்டு விழா போன்ற சம்பிரதாய நிகழ்ச்சிகள் குறித்த விளக்கங்களைத் தருகிறது

மூன்றாவது விவாகத்தின் அங்கங்களைப் பற்றியும், விவாகத்தின் போது தற்காலத்தில் பின்பற்றப்பட்டு வரும் விசித்திரமான நிகழ்ச்சிகள் குறித்தும் இன்னும் கல்யாண வாழ்க்கை குறித்தும் சில பல சுவாரஸ்யமான செய்திகளை வழங்குகிறது இவற்றின் வழியாக திருமணம், பூப்புனித நீராட்டு விழாவின் தத்துவார்த்தமான விளக்கங்கள், விபரங்கள் பற்றிய ஒரு அறிமுகத்தை வழங்குவதே இந் நூலின் நோக்கமாகும்.

மரபு முறைகளில் ஈடுபாடு இருந்தும் கூட விபரங்கள் தெரியாது மயங்கி நிற்போருக்கு இந்த நூல் ஒரு கை நூலாகப் பயன்படும் என்பதும் எமது நம்பிக்கை.

# ஒரு பாறையின்

## மகத்தான சரித்திரம்



நாட்டின் சரித்திரத்தையே மாற்றி எழுதும் ஆற்றல் ஒரு பாறைக்கு உண்டா? உண்டு என்று நிரூபித்திருக்கிறார் ஒரு வீரத் துறவி. அதுவும் அந்தப் பாறை, நமது தமிழகத்தில் உள்ள பாறை என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

தேசத்தின் தென்கோடியில் கன்னியாகுமரியில் கடலின் நடுவே உள்ள ஒரு சிறு பாறைத்தீவு இன்று நாட்டின் கௌரவச் சின்னமாகக் காட்சி தருகிறது. அங்கிருக்கும் விவேகானந்தர் நினைவு மண்டபத்தைத் தரிசிக்க நாடு முழுவதிலுமிருந்து - ஏன் உலகம் முழுவதிலுமிருந்து - மக்கள் வந்து செல்கிறார்கள். அந்தப் பாறையில் அப்படி என்ன விசேஷம்?

இதைத் தெரிந்துகொள்ள 120 ஆண்டுகளுக்கு முந்தைய சரித்திரத்துக்குப் பயணம் செய்ய வேண்டும். 1892, டிசம்பர் 24-ஆம் திகதி, காவியுடை உடுத்திய சந்நியாசி ஒருவர் கடல் நடுவே இருந்த இந்தப் பாறைக்குச் செல்ல உதவுமாறு அங்கிருந்த மீனவர்களை வேண்டினார். ஆனால் மீனவர்கள் யாரும் உதவவில்லை. அதனால் இளம் சந்நியாசி சலிப்படையவில்லை; கடலில் குதித்து நீந்தியே அந்தப் பாறையை அடைந்தார். அங்கு டிசம்பர் 24, 25, 26 ஆகிய திகதிகளில், மூன்று நாள்கள் அன்ன ஆகாரமின்றி தவத்தில் ஆழ்ந்தார்.

அந்தத் தவத்தின் இறுதியில், அவருக்குள் ஒரு புதிய ஞான ஒளி உதித்தது. புத்தருக்கு போதிமரம் போல, அந்த இளம் துறவிக்கு ஞானம் வாய்த்தது அந்தப் பாறையில். அவர்தான் பின்னாளில், 'சுவாமி விவேகானந்தர்' என்ற நாமகரணத்துடன் உலகையே தனது அறிவாலும் பேச்சாலும் வென்றவர்.

அவரது பெருமையை நினைவுகூரும் விதமாக பிரமாண்டமாக அங்கு நினைவாலயம் எழும்பி இருக்கிறது. அதன் நிழலில் விவேகானந்த கேந்திரம் என்ற அமைப்பு பல சேவை களை ஆர்ப்பாட்டமின்றி நிகழ்த் திக் கொண்டிருக்கிறது. இந்தப் பாறை மகத்தான பாறையானதன் பின்னணியில் அந்த இளம் துறவியின் மாபெரும் தவ வாழ்க்கை புதைந்திருக்கிறது. வரும் ஆண்டு, சுவாமி விவேகானந்தரின் 150-ஆவது பிறந்த தின ஆண்டு. இந்த ஆண்டிலேயே இதற்கான கொண்டாட்டங்கள் தொடங்கிவிட்டன.

1863, ஜனவரி 12-ஆம் தேதி புவனேஸ்வரி அம்மையாரின் கருவறையில் உதித்த நரேந்திரன் என்ற அந்த பாலகன், அடிமைப்பட்டிருந்த தேசம் மீது படர்ந்திருந்த சாம்பலையும் சோம்பலையும் போக்க வந்த துறவியாக மலர்ந்தது நமது தேசத்தின் பெரும் பேறு.

நமது நாடு விடுதலைக்காக தன்னைத் தயார்படுத்திக் கொண்டுவந்த அந்தக் காலகட்டத்தில், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடராக, ஆன்மிக ஒளிவிளக்காக உதித்த சுவாமி விவேகானந்தரின் உபதேசங்கள் பல தலைவர்களை உருவாக்கியது.

அவர் வாழ்ந்த காலம் மிகவும் குறுகியது. ஆனால் தான் மறைவதற்குள், பல நூறு ஆண்டுகளில் சாதிக்க வேண்டியதை 39 ஆண்டுகளில் சாதித்துத் திரும்பினார்.

அவருக்கு அந்த உத்வேகத்தை அளித்தது எது? குமரிமுனையில் அவர் தவம் செய்த பாறையில் அவருக்கு ஞான ஒளி கிடைக்கக் காரணமானது எது?

1888-ஆம் ஆண்டு தொடங்கி 1893 வரை நாட்டின் பல பகுதிகளிலும் அவர் நிகழ்த்திய 'பரிவ்ராஜக' சுற்றுப்பயணமே அந்த ஞானத்துக்குக் காரணம். நடந்தும், வண்டியிலும், ரயிலிலும் பல்லாயிரம் மைல்களைக் கடந்து தேசத்தை வலம் வந்தபோது, அவர் எண்ணற்ற மக்களைச் சந்தித் தார்; அவர்களது இன்ப துன்பங்களை நேரில் கண்டார்.

இடையே 1892, டிசம்பரில் குமரிமுனை வந்தார். அங்கு குமரிமுனைப் பாறையில் அவர் செய்த தவம் என்பது, மேற்படி பயணத்தில் பெற்ற அனுபவங்களை அசைபோடுவதாகவே அமைந்தது. அப்போதுதான் நமது நாட்டின் வீழ்ச்சிக்கும் சீரழிவுக்கும் காரணம் புரிந்தது. அது மட்டுமல்ல, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்திட்டமும் மனதில் உதித்தது. இதை அவரே தனது உரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"குமரி முனையில், தென் கோடி முனையில் உள்ள பாறையில் தான் எனக்கு அந்த யோசனை உதித்தது. நம்மிடையே எண்ணற்ற துறவிகள் இருக்கின்றனர். அவர்கள் பல உபதேசங்களைச் செய்கின்றனர். இருந்தும் அனைத்தும் வீணாகின்றன. அப்போது தான் எனது குருதேவரின் உபதேசம் நினைவில் வந்தது. பசியால் துடிப்பவனுக்கு மத போதனை தேவையில்லை என்பதுதான் அது. நாடு என்ற முறையில் நாம் நமது தனித்தன்மையை இழந்திருக்கிறோம். அதுவே இந்தியாவின் குளறுபடிகளுக்கெல்லாம் காரணம். நாம் மக்களை இணைத்தாக வேண்டும்" இதுவே அந்தத் துறவி கண்டறிந்த உண்மை.

நாட்டை உள்ளன்போடு வலம் வந்ததன் விளைவாகத் திரண்ட ஞானம் அது. அங்கிருந்துதான், அமெரிக்காவின் சிகாகோவில் நடைபெற்ற சர்வ சமயப் பேரவையில் வெற்றிக்கொடி நாட்டும் வேகத்துடன் அந்தப் புயல் கிளம்பிச் சென்றது. பின்னர் நடந்ததை சரித்திரம் பதிவு செய்திருக்கிறது.

இதுவே "விவேகானந்தர் பாறை' என்று அழைக்கப்படும் 'பாறையின் வெற்றிக்கதை. நாட்டையும் மக்களையும் நம்மாலும் நேசிக்க முடிந்தால், கல்லும் கனியும்; வெற்றுப் பாறையும் புனிதமாகும். சக மனிதனை நேசிக்கும் அன்பே மதத்தின் ஆணிவேர் என்பது புலப்பட்டுவிட்டால், நாம் அனைவரும் அந்த வீரத்துறவி கனவு கண்ட வீரர்களாக மாற முடியும்.

■ மு. முரளி



ஒரு மகத்தான சரித்திரத்தின் 120 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், விவேகானந்தரின் 150-ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் நிகழ உள்ள நிலையில், அவரது அறைகூவலை கடலலைகளுக்கு நிகராக ஒலித்தபடி இருக்கிறது அந்தப் பாறை. அது உங்கள் காதுகளுக்குக் கேட்கிறதா? ★